REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஜுன் 3 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 90 இல. 129 | Friday 03,June, 2022 | 16பக்கங்கள் | 40/-




## சிறுபோகத்துக்கான உரத்தை வழங்க இந்திய பிரதமர் இணக்கம்

### 20 நாட்களுக்குள் விநியோகிக்க ஏற்பாடு





சிறுபோகத்துக்கான உரங்களை விரைவில் வழங்குவதற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இணக்கம் தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.


இந்திய கடனுதவியுடன் இந்த உரம் வழங்கப்படுவதுடன், இலங்கைக்குக் கிடைத்து 20 நாட்களுக்குள் விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

நீர்ப்பாசனத் துறை எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் தீர்வுகள் தொடர்பில் (01) கொழும்பு, கோட்டை 06

### நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பில்

## பாராளுமன்றத்தில் 07ஆம் திகதி பிரதமர் ரணில் விசேட உரை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டின் தற்போதைய பொருளாதார நிலை தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் விசேட உரையொன்றை நிகழ்த்தவுள்ளார்.

எதிர்வரும் வாரம் செவ்வாய்க்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை பாராளுமன்ற அமர்வுகள் நடைபெறவுள்ளதுடன் முதல் மூன்று தினங்கள் தற்போது நாடும் நாட்டு மக்களும் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகள் தொடர்பில் விவாதங்களை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான விசேட கூட்டம் நேற்றைய தினம் பாராளுமன்ற கட்டடத்தில் நடைபெற்றுள்ளது. 06

## A/L, தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சைகளை பிற்போட தீர்மானம்

### ஒக்டோபர், நவம்பரில் நடத்த திட்டம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை மற்றும் தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை ஆகியவற்றை எதிர்வரும் ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் நடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

ஓகஸ்ட் மாதத்தில் நடத்தப்பட வேண்டிய இப் பரீட்சைகளையே ஒக்டோபர் மாதம் அல்லது நவம்பர் மாதத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், பாடசாலைக் கல்வியை உச்ச அளவில் முன்னெடுத்துச் செல்வதற்கு அனைத்து தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் 06

### நெருக்கடி நிலைமையை நிவர்த்தி செய்வதற்கு

# தேவையான நேரத்தில் உதவிகளை வழங்கவும்

### இலங்கையிலுள்ள வெளிநாட்டு தூதுவர்களிடம் G.L. பீரிஸ் வேண்டுகோள்

**நாட்டில் நிலவும் எரிபொருள், எரிவாயு, மருந்துப் பொருட்கள் தட்டுப்பாடு மற்றும் மின்வெட்டு குறித்தும் தூதுவர்களுக்கு அமைச்சர் எடுத்துரைப்பு**



இலங்கையின் வரலாற்றில் சவாலான இன்றைய கால கட்டத்தில் தமது ஆதரவையும் நல்லெண்ணத்தையும் வழங்குமாறு இலங்கையிலுள்ள வெளிநாட்டு தூதுவர்களிடம் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று கேட்டுக் கொண்டார்.

தற்போதைய நெருக்கடி நிலைமையை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளை விரிவாக எடுத்துரைத்த வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், தேவைப்படும் நேரத்தில் தமது முழுமையான உதவிகளை வழங்குமாறு தூதுவர்களை கேட்டுக் கொண்டார். வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், 06



நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ இலங்கையிலுள்ள அமெரிக்க தூதுவர் ஜுலி சங்ஜ நேற்று அமைச்சு அலுவலகத்தில் சந்தித்தபோது நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலை மற்றும் 21 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் விளக்கமளித்தார். நாட்டின் நெருக்கடியான நிலைமைக்கு உதவிகளை எதிர்ப்பார்ப்பதாகவும் இதுவரை எமது நாட்டுக்கு வழங்கிய உதவிகளுக்கு நன்றிகளை தெரிவிப்பதாகவும் தூதவரிடம் அமைச்சர் தெரிவித்தார்.

### 'ஒரே நாடு ஒரே சட்டம்'

## ஆணைக்குழுவின் பதவி காலம் 03 வாரங்கள் நீடிப்பு

03

### புதிய அரசியலமைப்பின் மூலம்

## தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டியது அவசியம்

### சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரசாங்கம் நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள புதிய அரசியலமைப்பின் மூலம் தமிழ் மக்களின் நீண்டகால தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என அழைப்பு 06

## சீனாவிலிருந்து இன்று மருந்துகள் வருகின்றன

### 500 மில். நிதியுதவியின் கீழ் முதற் தொகுதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**




சீன அரசாங்கம் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கும் முதல்கட்ட அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் இன்றைய தினம் நாட்டை வந்தடையவுள்ளன.

10 மில்லியன் சீன யுவான் பெறுமதியான உயிர்காப்பு உபகரணங்கள் மற்றும் 2,56,320 ஊசி மருந்துகளும் அதில் உள்ளடங்குகின்றன. அதேவேளை மேலும் ஒரு 06

## தமிழக நிவாரணங்களை வழங்குவதில் CWC எந்த அழுத்தமும் விடுக்கவில்லை

### 100 வீதம் தோட்ட மக்களுக்கே வழங்கப்பட வேண்டும்

**ஹற்றன் சுழற்சி நிருபர்**



தமிழக முதலமைச்சரினால் அனுப்பப்பட்ட நிவாரணப் பொதிகள் தோட்ட முகாமையாளர், உதவி முகாமையாளரைத் தவிர்ந்த தோட்டத்திலுள்ள 100 சதவீத மானவர்களுக்கும் சென்றடைய வேண்டுமென இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கிராம உத்தியோகத்தர்களின் பட்டியலுக்கமைய, தோட்டப் புறங்களைப் பொறுத்த வரை குறைந்த வருமானம் பெறுபவர்களின் பட்டியலில் தோட்டத் 06

### நாட்டில் அசம்பாவிதங்கள் அதிகரிப்பு

## பாராளுமன்றுக்கு அதிக பாதுகாப்பு அவசியம்

### சபாநாயகர் மஹிந்த யாப்பா வலியுறுத்து



பாராளுமன்றிற்கு கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

தற்பொழுது நாட்டில் இடம்பெற்று வரும் சம்பவங்களை பார்க்கும் போது பாராளுமன்றிற்கு கூடுதல் பாதுகாப்பு தேவை என்பதே புலனாகின்றது என அவர் 06

## சிறை உத்தியோகத்தர்களிடம் ஒப்படைக்கப்பட்டார் துமிந்த

### விசாரணையின் பின் CID கையளித்தது



கைது செய்யப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா விசாரணைகளின் பின்னர் குற்றப் புலனாய்வு பிரிவினரால் சிறைச்சாலை உத்தியோகத்தர்களிடம் 06

## சிறுநீரக வியாபாரத்தில் சில டொக்டர்கள் ஈடுபாடு

### முறைப்பாடு குறித்து மருத்துவ சபை விசாரணை

சிறுநீரக வர்த்தகத்தில் ஈடுபட்டு வருவது தொடர்பாக கிடைத்துள்ள முறைப்பாட்டுக்கு அமைய இரண்டு மருத்துவர்கள் தொடர்பில் இலங்கை மருத்துவ சபை விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இலங்கை மருத்துவ சபையின் ஒழுக்கங்கள் தொடர்பான சட்டதிட்டங்களுக்கு அமைய 06

## கரவெட்டி மூதாட்டியின் இறப்புக்கு டொக்டரின் கவனக்குறைவே காரணம்

### பருத்தித்துறை நீதிமன்றம் தீர்ப்பு



பெண்ணின் வயிற்றிற்குள் மருந்து கட்டும் துண்டை வைத்து தைத்த விவகாரத்தில், சத்திரசிகிச்சை மேற்கொண்ட வைத்தியர்களின் கவனக்குறைவினாலேயே மரணம் நிகழ்ந்ததாக பருத்தித்துறை நீதிமன்றம் அறிவித்துள்ளது.

அந்த சத்திரசிகிச்சையை மேற்கொண்ட வைத்தியர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு நெல்லியடி பொலிஸாருக்கு, பருத்தித்துறை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

நெல்லியடியிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சையை 06

## ஓட்டோ பள்ளத்தில் வீழ்ந்து தாயும் மகளும் ஸ்தலத்தில் பலி

### தந்தையும் மகனும் ஆஸ்பத்திரியில் அனுமதி



அநுராதபுரம், கவரக்குளம் பிரதேசத்தில் முச்சக்கர வண்டி ஒன்று பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் தாயும் மகளும் உயிரிழந்துள்ளதுடன் தந்தையும் மகனும் காயமடைந்துள்ளதாக அநுராதபுரம் கவரக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

தம்புள்ளையிலிருந்து அநுராதபுரம் நோக்கிச் 06

### மே. 09 வன்முறைகளுடன் தொடர்பு?

## சனத், ஜயதிலகவுக்கு விளக்கமறியல் நீடிப்பு



பாராளுமன்ற உறுப்பினர்களான சனத் நிஷாந்த மற்றும் மிலான் ஜயதிலக ஆகியோரின் விளக்கமறியல் உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் ஒன்பதாம் திகதி காலிமுகத்திடல் ஆர்ப்பாட்ட களத்தின் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள் சனத் நிஷாந்த, மிலான் ஜயதிலக மற்றும் டான்பிரசாத் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் சனத் நிஷாந்த 06

### சகல அரச அலுவலகங்களையும்


## வெள்ளிக்கிழமைகளில் மூடுவதற்கு உத்தரவு

தொழிற்திணைக்களம் உட்பட அனைத்து அரச அலுவலகங்களும் திங்கள் முதல் வியாழன் வரை மட்டுமே திறந்திருக்கும் என்றும் ஜுன் 03 முதல் வாரத்தின் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மூடப்பட்டிருக்கும் என்றும் தொழில் ஆணையர் பிரபாத் சந்திரகீர்த்தி அறிவித்துள்ளார்.

தற்போதுள்ள வளப்பற்றாக்குறையில் அரச செலவினங்களைக் குறைப்பதற்காகவும் அரச நிறுவனங்களின் ஊழியர்களை பணிக்கு அழைப்பதை மட்டுப்படுத்துவதற்காகவும் வெளியிடப்பட்ட அரச நிர்வாக சுற்றறிக்கையின் 06

## டெங்கு நோய் பரவல் வேகமாக அதிகரிப்பு

### இதுவரை 24,523 பேர் பாதிப்பு



இந்த வருடத்தின் கடந்த சில மாதங்களில் 24,523 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

அவர்களில் 6,483 பேர் மே மாதத்தில் அடையாளம் காணப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். ஜுன் 01ம் திகதி மாத்திரம் 313 டெங்கு நோயாளர்கள் 06

# சர்வதேச செய்திகள்

## சர்வதேச நாணய நிதியத்துடன் ஜூனில் ஒப்பந்தத்தை எட்ட பாகிஸ்தான் திட்டம்

பாகிஸ்தானுக்கு அடுத்த நிதி ஆண்டில் 3637 பில்லியன் டொலர் வெளிநாட்டு நிதி தேவைப்படும் நிலையில், சர்வதேச நாணய நிதியத்துடன் ஜூன் மாதத்தில் ஒப்பந்தம் ஒன்றை எட்டுவதற்கு எதிர்பார்ப்பதாக அந்நாட்டு நிதி அமைச்சர் மிப்தாஹ் இஸ்மைல் அறிவித்துள்ளார்.

நாட்டின் சர்வதேச பத்திரங்கள் அதன் பெறுமதியில் மூன்றில் ஒன்றை இழந்திருக்கும் அதே நேரம் இதன் விளைவுகள் கணிசமான உயர்ந்த பின்னர் சர்வதேச மூலதன சந்தை மற்றும் வர்த்தக வங்கிகளில் இருந்த புதிய வெளிநாட்டு கடன்களை அதிகரிக்க தற்போதைய அரசு எதிர்பார்க்கவில்லை என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.



பொருளாதார வளர்ச்சிக்கு பதில் பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு அரசு அதிக முன்னரிமை வழங்கி இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

'பணவீக்கத்தை கட்டுப்படுத்துவது பொருளாதார வளர்ச்சிக்கு இட்டுச்செல்லும்' என்று கடந்த சனிக்கிழமை மாநாடு ஒன்றில் உரையாற்றும் போது அவர் குறிப்பிட்டார்.

'விவசாயம் பாகிஸ்தானுக்கான முதல் வரிசை பாதுகாப்பாக உள்ளது' என்று அமைச்சர் வலியுறுத்தினார். பாகிஸ்தான் அடுத்த நிதியாண்டில் தொடர்ந்தும் 5 பில்லியன் டொலர் பெறுமதியான 4 மில்லியன் தொன் சமையல் எண்ணெய், 3 மில்லியன் தொன் கோதுமை மற்றும் 5 மில்லியன் பருத்தி மூட்டைகளை இறக்குமதி செய்ய வேண்டி உள்ளது.

எனினும் அடுத்த நிதி ஆண்டில் பாகிஸ்தான் 21 பில்லியன் டொலர் கடன்களை மீளச் செலுத்தும் என்று இஸ்மைல் கூறினார்.

தவிர, நாட்டின் தற்போதைய கணக்குப் பற்றாக்குறைக்கு மேலும் 10–15 பில்லியன் டொலர் தேவையாக உள்ளது. அரசு நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பை 5 பில்லியன் தொடக்கம் 15 பில்லியன் டொலர் வரை அதிகரிப்பதற்கு இலக்கு வைத்துள்ளது.

'எனவே தேவையான நிதியை ஏற்பாடு செய்வதற்கு (6 பில்லியன் டொலர் பெறுமதியான) சர்வதேச நாணய நிதிய கடன் திட்டத்தில் நுழைவது அவசியமாகும்' என்று இஸ்மைல் குறிப்பிட்டார்.

## தினசரி 100 உக்ரைனிய இராணுவ வீரர்கள் பலி

உக்ரைனிய ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி, தமது படைவீரர்களில் 60 முதல் 100 பேர் வரை போர்க்களத்தில் நாள்தோறும் மரணமடைவதாகக் கூறியுள்ளார்.



நாள் ஒன்றுக்கு மேலும் 500 வீரர்கள் காயமடைவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைனின் கிழக்குப் பகுதியில் உள்ள டோன்பாஸ் வட்டாரத்தில் நிலைமை மிக மோசமாக உள்ளது என்று செலென்ஸ்கி தெரிவித்தார்.

அதன் மையப் பகுதிக்குள் ரஷ்யத் தரப்பினர் வலுக்கட்டாயமாக நுழைந்திருப்பதாகவும் அதை ஆக்கிரமிக்கக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், ரஷ்யத் தரப்பிலும் கணிசமான இழப்புகள் நேர்ந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

கடந்த பெப்ரவரியில் போர் ஆரம்பித்ததில் இருந்து இதுவரை 30,000க்கும் மேற்பட்ட ரஷ்யப் படை வீரர்கள் கொல்லப்பட்டதாக உக்ரைனிய அரசாங்கம் கடந்த வாரம் தெரிவித்தது.

## ஒக்லஹாமா மருத்துவமனையில் சூடு: துப்பாக்கிதாரியுடன் ஐவர் பலி




அமெரிக்காவின் ஒக்லஹாமா மாநிலத்தின் டுல்சா நகர மருத்துவமனையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு;டில் நால்வர் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களுடன் ரைபல் மற்றும் கைத்துப்பாக்கியுடன் இருந்த துப்பாக்கிதாரி என சந்தேகிக்கப்படும் நபரும் உயிரிழந்திருப்பதாக பொலிஸார் உறுதி செய்துள்ளனர். துப்பாக்கிதாரி தன்னைத்தானே சுட்டுக்கொண்ட காயத்தில் உயிரிழந்திருப்பதாக டுல்சா நகர பிரதி பொலிஸ் தலைவர் எரிக் டல்கிளைஷ் குறிப்பிட்டார்.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர் 35 வயது மதிக்கத்தக்க கருப்பினத்தவர் என்று பொலிஸார் குறிப்பிட்டபோதும் இது பற்றிய மேலதிக விபரங்களை வெளியிடவில்லை.

தாக்குதலுக்கான காரணம் பற்றி இதுவரை எந்த விபரமும் கிடைக்கவில்லை என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். சான் பிரான்சிஸ்கோ மருத்துவமனையில் கடந்த புதன்கிழமை மாலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவில் இடம்பெறும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களின் தொடர்ச்சியாகவே இந்தத் தாக்குதல் பதிவாகியுள்ளது. எட்டு நாட்களுக்கு முன் டெக்சஸில் உள்ள பாலர் பாடசாலை ஒன்றில் 18 வயது இளைஞர் ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 19 சிறுவர்கள் மற்றும் இரு ஆசிரியர்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

துப்பாக்கிச் சூடு பற்றி ஜனாதிபதி ஜோ பைடனுக்கு தெரிவிக்கப்பட்டிருப்பதாக வெள்ளை மாளிகை வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. உள்ளூர் அதிகாரிகளுக்கு உதவிகளை வழங்க நிர்வாகத்திற்கு உத்தரவிடப்பட்டிருப்பதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

தொடரும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களுக்கு மத்தியிலும் துப்பாக்கி கட்டுப்பாடு பற்றி பெரும் எதிர்ப்புகள் இருந்து வருகின்றன. குறிப்பாக பெரும்பாலான குடியரசு கட்சியினர் மற்றும் ஜனநாயக கட்சி ஆட்சியில் இருக்கும் சில மாநிலங்களும் இதனை எதிர்க்கின்றனர்.

எனினும் இந்த சட்டங்களில் சீர்திருத்தங்களை கொண்டுவர ஜனாதிபதி பைடன் உறுதி அளித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### நீண்ட தூர ஏவுகணை விநியோகம்:

## உக்ரைனிய போரை நீடிக்க அமெ. முயல்வதாக ரஷ்யா குற்றச்சாட்டு

நீண்ட தூர ஏவுகணைகளை உக்ரைனுக்கு வழங்கும் அறிவிப்பை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வெளியிட்ட நிலையில், உக்ரைனில் போரை நீடிக்க அமெரிக்கா முயல்கிறது என்று ரஷ்யா குற்றம்சாட்டியுள்ளது.



இந்த ஆயுத விநியோகங்களுடன் அமெரிக்கா வேண்டுமென்று எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுகிறது என்று ரஷ்ய அரச பேச்சாளர் டிமிட்ரி பெஸ்கொவ் குறிப்பிட்டுள்ளார்.

'இவ்வாறான விநியோகங்கள் அமைதிப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும் உக்ரைனிய தலைமையின் விருப்பத்திற்கு பங்களிப்புச் செய்யாது' என்று அவர் மேலும் கூறினார்.

இதேவேளை உக்ரைனுக்கு வான் பாதுகாப்பு அமைப்பை வழங்க ஜெர்மன் அரசு வாக்குறுதி அளித்துள்ளது.

ஜெர்மனியிடம் இருக்கும் அதி நவீன வான் பாதுகாப்பு அமைப்பால் ரஷ்ய வான் தாக்குதலுக்கு எதிராக உக்ரைனின் முழுமையான நகரம் ஒன்றை பாதுகாக்க முடியுமாக இருக்கும் என்று ஜெர்மனி சான்சிலர் ஒலாப் ஸ்கோல்ஸ், அந்நாட்டு எம்.பிக்களிடம் தெரிவித்தார்.


இந்த ஆயுத விநியோகங்களை தாக்கிப் பேசிய ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கெய் லவ்ரொவ், பைடனின் அறிவிப்பு மூன்றாவது நாடு ஒன்றை மோதலுக்கு இழுக்கும் அச்சுறுத்தலை அதிகரித்திருப்பதாக எச்சரித்தார்.

நீண்ட தூர ஏவுகணைகள் தொலை தூரத்தில் இருந்து எதிரிப் படைகளை துல்லியமாக தாக்குவதற்கு உக்ரைனிய துருப்புகளுக்கு உதவும்.

இவ்வாறான ஆயுதங்கள் ரஷ்யாவில் உள்ள இலக்குகள் மீது தாக்குதல் நடத்த பயன்படுத்தப்படலாம் என்ற அச்சம் காரணமாக இதனை உக்ரைனுக்கு வழங்க அமெரிக்கா முன்னதாக மறுத்து வந்தது. ஆனால் இவ்வாறு ரஷ்யாவுக்குள் தாக்குதல் நடத்த மாட்டோம் என்று உக்ரைன் உறுதி அளித்ததாக அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.

இந்த ஆயுதம் ரஷ்யாவுடனான உக்ரைனின் பேச்சுவார்த்தை நிலையை வலுப்படுத்தும் என்றும் இராஜதந்திர தீர்வுக்கான வாய்ப்பை ஏற்படுத்தும் என்றும் பைடன் கடந்த புதனன்று கூறியிருந்தார்.

## அவதூறு வழக்கில் டெப்புக்கு ஆதரவாக நீதிமன்றில் தீர்ப்பு



அவதூறு வழக்கில் ஹொலிவுட் நடிகர் ஜோனி டெப்புக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்க நடிகை ஆம்பர் ஹேர்ட் மீது காதல் வயப்பட்டு 2015இல் அவரை கரம்பிடித்த ஜோனி டெப், 15 மாதங்களில் விவாகரத்து பெற்றனர்.

இதன்பின் 2018இல் 'வொஷிங்டன் போஸ்ட்' பத்திரிகையில் ஆம்பர் ஹேர்ட் எழுதிய கட்டுரையால் பல படங்கள் டெப்பின் கையை விட்டுச் சென்றன. இதனால் அவதூறாக 15 மில்லியன் டொலர் நஷ்ட ஈடு கேட்டு ஆம்பர் மீது அவர் வழக்குத் தொடுத்தார்.

இந்த வழக்கில் டெப்புக்கு ஆதரவாக தீர்ப்பு கிடைத்துள்ளது. ஆம்பர் 10 மில்லியன் டொலர் இழப்பீட்டு தொகையாகவும், 5 மில்லியன் டொலரை தண்டனைக்குரிய இழப்பீட்டு தொகையாகவும் வழங்க வேண்டும் என உத்தரவிடப்பட்டது.

## இங்கிலாந்தில் குரங்கம்மை நோய் சமூக அளவில் பரவல்



இங்கிலாந்தில் குரங்கம்மை சமூக அளவில் பரவுவதாக பிரிட்டன் சுகாதாரப் பாதுகாப்பு ஆணையம் தெரிவித்துள்ளது.

மேற்கு, மத்திய ஆபிரிக்காவில் நிரந்தர நோயாகக் கருதப்படும் குரங்கம்மை, நெருங்கிய தொடர்பில் உள்ளவர்களிடையே பரவும் என்று நம்பப்படுகிறது.

ஏற்கனவே குரங்கம்மையால் பாதிக்கப்பட்ட நாட்டுக்குச் செல்லாதவர்களிடையே நோய் பரவியிருப்பதாக ஆணையம் குறிப்பிட்டது.

பாதிக்கப்பட்டவர்களில் 132 பேர் லண்டனைச் சேர்ந்தவர்கள். அவர்களில் இருவர் பெண்கள் என்றும் 111 பேர் ஓரினச் சேர்க்கையாளர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஓரினச் சேர்க்கையாளர்கள் செல்லும் மதுபானக் கூடங்கள், நீராவிக் குளியல் நிலையங்கள் ஆகியவற்றுக்குப் பாதிக்கப்பட்டவர்கள் சென்றிருந்ததாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

## இஸ்ரேலிய துப்பாக்கிச் சூடு: மற்றுமொரு பலஸ்தீனர் பலி

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் உள்ள அகதி முகாம் ஒன்றில் நேற்று இடம்பெற்ற மோதலில் இஸ்ரேலிய துருப்புகளால் பலஸ்தீன ஆடவர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.



பெத்லஹாமுக்கு அருகில் இருக்கும் தைஷெஹ் முகாமிலேயே மோதல் ஏற்பட்டிருப்பதாகவும் இதில் 29 வயதான ஐமன் முஹைசன் என்பவரே கொல்லப்பட்டிருப்பதாகவும் அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இது பற்றி இஸ்ரேலிய தரப்பு உடன் எந்த பதிலும் அளிக்கவில்லை.

முன்னதாக கடந்த புதனன்று கத்தியுடன் வந்த பெண் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டது மற்றும் இஸ்ரேலிய சுற்றிவளைப்புத் தேடுதலில் ஒருவர் கொல்லப்பட்டது என கடந்த 24 மணி நேரத்தில் மூன்று பலஸ்தீனர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இஸ்ரேலிய படையின் சுற்றிவளைப்பு தேடுதலின்போது ஏற்பட்ட இந்த மோதலில் மேலும் ஆறு பலஸ்தீனர்கள் காயமடைந்திருப்பதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா கூறியது.

## வெடிபொருட்களுடன் சிக்கிய 4 சந்தேக நபர்களும் விடுதலை




தற்கொலை அங்கிகள் உட்பட வெடிபொருட்களை வைத்திருந்ததற்காக பாகிஸ்தான் பயங்கரவாத தடுப்பு திணைக்களத்தால் கைது செய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்களையும் பயங்கரவாத தடுப்பு நீதிமன்றம் விடுவித்துள்ளது.

இந்த நால்வர் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்கத் தவறி இருப்பதாக கடந்த சனிக்கிழமை வழங்கிய தீர்ப்பில் நீதிபதி குறிப்பிட்டுள்ளார். பதிவில் இருக்கும் ஆதாரங்கள் அவர்கள் குற்றத்தில் தொடர்புபட்டதை நிரூபிக்கத் தவறி இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

கைபர் பழங்குடி மாவட்டத்தின் லண்டி கொடால் பகுதியில் வைத்து 2021 ஒக்டோபர் 29ம் திகதி பெஷாவர் பயங்கரவாத தடுப்பு திணைக்களத்தால் இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

### ஷின்ஜியாங் பிராந்தியத்தின்

## இறக்குமதிகளுக்கான அமெ. தடை இம்மாதம் 21இல் அமுல்

சீனாவின் சின்ஜியாங் பிராந்தியத்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு விதிக்கப்படும் தடை இம்மாதம் 21ஆம் திகதி முதல் நடப்புக்கு வரும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.



மிக வலுவான காரணத்தின் அடிப்படையில் மட்டுமே தடையிலிருந்து விலக்கு பெறமுடியும் என்று அமெரிக்கச் சுங்க அதிகாரி தெரிவித்தார். உய்குர்களின் கட்டாயத் தொழிலாளர் தடுப்புச் சட்டத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் டிசம்பரில் கையெழுத்திட்டிருந்தார். சீனாவின் சின்ஜியாங்கில் மனித உரிமைகளை மீறி உய்குர்களால் தயாரிக்கப்படும் பொருட்கள் அமெரிக்காவுக்குச் செல்வதைத் தடுக்க எடுக்கப்பட்ட முயற்சி அது என்று அமெரிக்கா கூறுகிறது. உலகின் சூரியசக்தி தகடுகளைச் செய்யத் தேவைப்படும் பொருட்கள், பருத்தி ஆகியவை சின்ஜியாங்கில் தயாரிக்கப்படுகின்றன. அங்கு மனித உரிமைகளை மீறி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதைச் சீனா மறுத்துள்ளது.

## அவுஸ்திரேலியாவில் எரிசக்தி நெருக்கடி

அவுஸ்திரேலியாவின் கிழக்குப் பகுதியில் எரிசக்தி நெருக்கடி ஏற்பட்டுள்ளது.



விக்டோரியா, நியூ சௌத் வேல்ஸ், குவீன்ஸ்லாந்து ஆகிய மாநிலங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் எரிவாயு, மின்சாரப் பற்றாக்குறை ஏற்படக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குளிர்பருவ நிலையால் அங்கு எரிசக்தி விநியோகம் தடைப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த மின்சார விலை இவ்வாண்டில் மட்டுமே இரட்டிப்பாகியுள்ளது. அவற்றின் விலைகள், 50 மடங்கு அதிகரிக்கலாம் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் எரிவாயுவில் 70 வீதமானது வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டாலும் எரிவாயு விலையேற்றத்தால் மின்சாரக் கட்டணங்கள் அதிகரித்துள்ளன. கடந்த 50 ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள மிக மோசமான எரிசக்தி நெருக்கடியாக இது கருதப்படுகிறது. அவுஸ்திரேலியாவின் புதிய அரசாங்கம், நெருக்கடியைக் கையாள வேண்டும் என்று உற்பத்தியாளர்களும் பயனீட்டாளர் குழுக்களும் வலியுறுத்தியுள்ளன.

அத்தியாவசிய அரச சேவைகளை தடையின்றி மேற்கொள்ள

# ரூ. 695 பில். குறைநிரப்பு பிரேரணை பாராளுமன்றில் ஜூன் 08ல் விவாதம்

## பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானம்

அத்தியாவசிய அரச சேவைகளைத் தடைகளின்றி தொடர்ச்சியாக மேற்கொண்டு செல்வதற்குத் தேவையான நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 07ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ள 695 பில்லியன் ரூபா குறைநிரப்பு மதிப்பீடு தொடர்பான விவாதத்தை எதிர்வரும் 8ஆம் திகதி பி.ப 5.30 மணி வரை நடத்துவதற்குப் பாராளுமன்ற



அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக தெரிவித்தார். அத்துடன், 2020ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளைகள் அன்றையதின விவாதத்தின் பின்னர் நிறைவேற்றப்படும் எனவும் செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன

06

ஐ.தே.க.வின் அரசியல் செயல்பாடுகள்:

# முழுமையாக முன்னெடுக்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் ரணில் பணிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



ஐக்கிய தேசிய கட்சியின் அரசியல் செயற்பாடுகளை முழுமையாக முன்னெடுக்குமாறு கட்சியின் பொதுச் செயலாளருக்கு கட்சியின் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

கட்சியின் தலைமையகம் சிறிகொத்தவில் நேற்று கட்சியின் முக்கியஸ்தர்கள் பங்குபற்றிய நிகழ்வின் போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கட்சியின் செயலாளரான பாலித்த ரங்கே பண்டாரவுக்கு இந்த பணிப்புரையை வழங்கியுள்ளார்.

அதன்படி ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன கட்சியின் அரசியல் நடவடிக்கைகளுக்கு தலைமைத்துவம் வழங்கவுள்ளார்.

அந்த நிகழ்வில் கருத்து தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க: நாடு தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலை காரணமாக தமது முழுமையான காலத்தை தாம் அதற்காக செலவிட வேண்டியுள்ள நிலையில் கட்சியின் அரசியல் நடவடிக்கைகளை ஏனையவர்கள் முன்னெடுத்துச் செல்ல வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கட்சியின் அனைத்து அரசியல் செயல்பாடுகளையும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார். (ஸ)

'ஒரே நாடு ஒரே சட்டம்'

# ஆணைக்குழுவின் பதவிக் காலம் 03 வாரங்கள் நீடிப்பு

ஒரே நாடு ஒரே சட்டம் என்னும் ஜனாதிபதி செயலணியின் பதவிக் காலம் நீடிக்கப்பட்டுள்ளது. அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் மூலம் இந்த பதவிக் காலம் நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



பொதுபல சேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் இந்த ஜனாதிபதி செயலணியின் தலைவராக கடமையாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

நாடு முழுவதிலும் ஒரே சட்டத்தை அமுல்படுத்தும் நோக்கில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவினால் இந்த செயலணி ஸ்தாபிக்கப்பட்டது.

இந்த விசேட ஜனாதிபதி செயலணியின் பதவிக் காலம் மேலும் மூன்று

06

நாட்டில் எதிர்வரும் சிறுபோகத்திற்கான

# யூரியா உரத்தை வழங்க உலக வங்கி உதவுகிறது

## அமைச்சர் அமரவீரவுடனான சந்திப்பில் இணக்கம்

எதிர்வரும் சிறுபோகத்திற்கு யூரியா உரத்தை பெற்றுக் கொள்வதற்கு தேவையான நிதி உதவிகளை வழங்க உலக வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது. இலங்கையிலுள்ள உலக வங்கி அலுவலகத்தின் பிரதிநிதிகளுடன் விவசாய



அமைச்சில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். அமைச்சின் செயலாளர் எம்.பி.ஆர்.புஸ்பகுமார

06

# கடவுச்சீட்டு விண்ணப்பிப்போர் தொகை திடீரென அதிகரிப்பு

## ஒருநாள் சேவையில் தினமும் 2,500 விநியோகம்

கடந்த ஏப்ரல் மாத இறுதியிலிருந்து இதுவரை கடவுச்சீட்டுக்காக அதிக கேள்வி நிலவுவதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாளாந்தம் சமர்ப்பிக்கப்படும் அனைத்து விண்ணப்பங்களுக்கும் கடவுச்சீட்டை வழங்க முடியாத நிலை காணப்படுவதாக திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் பியூமி பண்டார தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, ஒரு நாள் சேவையினூடாக அதிகபட்சமாக 2,500 கடவுச்சீட்டுகளே விநியோகிக்கப்படும் என அவர் கூறியுள்ளார்.

காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை சேவையை வழங்குவ



தன் ஊடாகவே அதிகபட்ச கடவுச்சீட்டுகளை விநியோகிக்க முடிவதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அதன் காரணமாக, சாதாரண நடைமுறையின் கீழ் கடவுச்சீட்டுகளை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அவர்

06

தனது சில்லறை விற்பனையாளர் குடும்பத்துடன் "எங்கள் குடும்பத்திலிருந்து உங்கள் குடும்பத்திற்கு"

# திட்டம் மூலம் புதுவருட அரவணைப்பை வெளிப்படுத்தும் Clogard

சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு கொண்டாட்டங்கள் யாவும் அனைத்து இன மக்களையும் ஒன்றிணைக்கிறது. Clogard யின் 'Ape Pawulen Obe Pawulata' (எங்கள் குடும்பத்திலிருந்து உங்கள் குடும்பத்திற்கு) பிரசாரமானது, Clogard அதன் பங்குதாரர்களிடையே கொண்டிருக்கும் பொறுப்புணர்வை வெளிப்படுத்துகிறது. Clogard ஆனது தனது பங்குதாரர்களின் வாழ்வில் பிரதியுபகாரமாகவும் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காகவும் எடுக்கப்பட்ட பல நடவடிக்கைகளில் இதுவும் ஒன்றாகும். ஒற்றுமையை ஊக்குவிக்கும் ஒரு தரக்குறியீடாக, Clogard அதன் சில்லறை விற்பனையாளர் வலையமைப்பிற்குள், குடும்பமாக வர்த்தகத்தில் ஈடுபடும் ஒரு சில சிறிய குடும்பங்களை அடையாளம் கண்டு, புதுவருட இனிப்புகள், குழந்தைகளுக்கான காகிதாதிகள், வீட்டுக்கு அவசியமான பொருட்கள், வாய்ச் சுகாதார பராமரிப்பு பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களைக் கொண்ட பொதிகளை பரிசளித்துள்ளது. Clogard நிறுவனத்தின் சிரேஷ்ட வர்த்தக நாம முகாமையாளர் திருமதி ரமிலா பெனாண்டோ இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், "இந்த சவாலான காலகட்டத்தில், குடும்பங்களை ஒன்றிணைக்கும் எமது வர்த்தகநாம நோக்கத்துடன் ஒரு படி முன்வைத்து அவர்களுடன் ஒன்றாக நிற்கும் வகையில், 'Ape Pawulen Obe Pawulata' திட்டம் கைகோர்த்துள்ளது. எமது சில்லறை விற்பனையாளர்கள் எமது Clogard குடும்பத்தின் ஒரு பெரிய அங்கமாக இருப்பதால் அவர்கள் தொடர்பில் எமக்கு உள்ள பொறுப்பையும் நாம் தொடர்ந்தும் மனதில் கொண்டுள்ளோம்.

புதுவருடமானது, குடும்பம் மற்றும் நண்பர்கள் ஒன்று கூடி பாரம்பரியங்கள் மற்றும் பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிக்கும் ஒரு கொண்டாட்டமாக நீண்ட காலமாக இருந்து வருகிறது. இலங்கையில் பல சமூகங்களால் கொண்டாடப்படும் இந்த பண்டிகைக் காலமானது முழு தேசத்தின் ஒற்றுமையையும் பிரதிபலிக்கிறது.

எவ்வாறாயினும், தற்போது அனைத்து இலங்கையர்களும் எதிர்கொண்டுள்ள முன்னொருபோதும் இல்லாத சவால்களுடன் இந்த வருட புதுவருடமானது வேறுபட்ட அடையாளத்தைப் பெற்றுள்ளது. முற்றுமுழுதானதொரு இலங்கை வர்த்தக நாமம் எனும் வகையில், Clogard ஆனது இந்த காலத்தின் தன்மையை நன்கு புரிந்துகொண்டு, இந்த சவாலான காலத்தை, ஒற்றுமையை ஊக்குவிப்பதற்கும், பிணைப்புகளை வலுப்படுத்துவதற்கும், உண்மையான இலங்கையர்களுக்குள்ள உணர்வுகளை பேணி, பாதுகாப்பதிலும் கவனம் செலுத்தும் முயற்சிகளில் பங்களித்து ஆதரவளிப்பதில், அதற்கு அவசியமாகவுள்ள இவ்வேளையை பயன்படுத்த முன்வந்துள்ளது.

'Ape Pawulen Obe Pawulata' ஆனது, எமது கொண்டாட்டங்கள் மற்றும் மங்களகரமான









நேரத்தை கொண்டாடுவதை ஊக்குவிக்கும் ஒரு நிகழ்வாக மாத்திரமல்லாது, இந்த சவாலான காலங்களில் அனைத்து இலங்கையர்களின் மன உறுதியையும் ஊக்குவிப்பதாகவும் அமைந்துள்ளது. Clogard ஆனது, மக்களின் தேவைகளைப் புரிந்துகொண்டு, உண்மையான இலங்கையர் என்ற க்ளோகார்டின் நெறிமுறைகளை உயிர்ப்பித்து, ஒளிமயமான நாளைக்கான இதமான மனதையும், நம்பிக்கை மற்றும் ஒற்றுமையின் உணர்வையும் வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறது.

அத்துடன் இச்செய்தியானது, சிறந்த விடயங்கள் தலைமுறை தலைமுறையாக கொண்டு செல்லப்பட வேண்டும் எனும் வர்த்தகநாமத்தின் நம்பிக்கையை வெளிப்படுத்தும் வகையில் பிரத்தியேக வீடியோக்களாக டிஜிட்டல் தளங்களில் வெளியிடப்பட்டன. Clogard எவ்வாறு புதுவருடத்தின் உணர்வை விரிவுபடுத்தி, தனது சில்லறை விற்பனையாளர் குடும்பத்துடன் உணர்வுகளை பகிர்ந்து கொள்ளும் என்பதை அந்த வீடியோக்கள் விளக்கின.

ஜா-எல வெலிகம்பிட்டியவைச் சேர்ந்த சில்லறை விற்பனையாளர் ஒருவர், 'Ape Pawulen Obe Pawulata' மூலம் தாம் பெற்ற பரிசுகள் குறித்து கருத்துத் தெரிவிக்கையில், "புது வருடம் ஒரு மகிழ்ச்சியான நேரமாகும். அது ஒன்றாக இருக்க வேண்டிய நேரமுமாகும். இருப்பினும், தற்போது நம் அனைவருக்கும் இது ஒரு கடினமான நேரமாக உள்ளது. எனவே Clogard மேலும் ஒரு படி முன் சென்று, இவ்வருடத்தில் எமக்கு இந்த அற்புதமான பரிசுகளை வழங்கியதில் நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்." என்றார்.

தனது பங்குதாரர்களுடனான ஒரு தசாப்தத்திற்கும் மேலான நெருங்கிய உறவுகளை கொண்டுள்ளதன் அடிப்படையில் ஊடுபயசன வர்த்தகநாமத்தின், 'Ape Pawulen Obe Pawulata' பிரசாரமானது, தரக்குறியீட்டின் பங்குதாரர் வலையமைப்பின் ஆதரவையும் பாராட்டையும் பிரதிபலிக்கிறது. பங்குதாரர்கள் எந்தவொரு சவாலையும் எதிர்கொண்ட போதிலும், Clogard ஆனது, அவர்களுக்கு பக்கபலமாக நின்று அவர்களுடன் தொடர்ந்தும் பயணிக்கும் எனும் உண்மையை இந்த பிரசாரமானது வெளிப்படுத்துகிறது.

**புதுவருடமானது, குடும்பம் மற்றும் நண்பர்கள் ஒன்று கூடி பாரம்பரியங்கள் மற்றும் பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிக்கும் ஒரு கொண்டாட்டமாக நீண்ட காலமாக இருந்து வருகிறது. இலங்கையில் பல சமூகங்களால் கொண்டாடப்படும் இந்த பண்டிகைக் காலமானது முழு தேசத்தின் ஒற்றுமையையும் பிரதிபலிக்கிறது.**





தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் வைகாசி மாதம் 20ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 துல்கஃதா பிறை 02

### குறள் தரும் சிந்தனை



இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகுந்தன்
ஒன்னார் விழையுஞ் சிறப்பு

துன்பத்தை இன்பமாகக் கருதும் மனஉறுதி கொண்டவர்களுக்கு, அவர்களது பகைவர்களும் பாராட்டுகிற பெருமை வந்து சேரும்.

## உணவுப் பற்றாக்குறையை முறியடிக்க உலகம் தயாராக வேண்டியது அவசியம்

இலங்கை மாத்திரமன்றி முழுஉலகுமே இன்று 'பசுமைப் புரட்சி' பற்றி பேசத் தொடங்கியுள்ளது. உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டியது பற்றியும், உணவுப்பயிர்ச் செய்கையின் அவசியம் குறித்தும் சர்வதேச நிபுணர்கள் பலர் தற்போது வலியுறுத்தத் தொடங்கியுள்ளனர். உலகம் தற்போது கடுமையான உணவுப் பஞ்சத்தை நோக்கிச் சென்று கொண்டிருப்பதனால், உணவுப்பயிர்ச் செய்கைக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென்றும், உணவு உற்பத்தியைப் புறக்கணித்தால் உலக மக்களின் எதிர்காலமே ஆபத்துக்குரியதாகி விடுமென்றும் நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

இந்த எச்சரிக்கையானது புறக்கணிக்கக் கூடியதல்ல; அதில் உண்மை உள்ளது. உலகின் பல நாடுகளின் இன்றைய பொருளாதார நிலைமையை வைத்துப் பார்க்கின்ற போது உணவுப் பஞ்சம் குறித்த ஆபத்து எமக்கு மிக இலகுவாகவே புரிகின்றது. நாம் இப்போது எமது நாட்டைப் பற்றி மாத்திரமே சிந்திக்கின்றோம். எமது நாட்டின் உணவுப் பொருட்களின் விலையேற்றமும், எரிபொருளுக்கான கியூவரிசையுமே எமது அவதானத்துக்குத் தென்படுகின்றன. ஏனைய பல நாடுகளின் இன்றைய நிலைமை எமக்குத் தெரிவதில்லை.

இலங்கையைப் போன்று மேலும் பல நாடுகள் இன்றைய காலத்தில் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளன. அந்நாடுகளுக்கு உதாரணமாக பாகிஸ்தானைக் குறிப்பிட முடியும். அந்நாட்டிலும் உணவு உட்பட அத்தியாவசிய பாவனைப் பொருட்களின் விலைகள் மலை போல உயர்ந்து விட்டன. வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் மக்கள் பெரும் துன்பமடைகின்றனர். எரிபொருளுக்கும் அங்கே பற்றாக்குறை நிலவுகின்றது. பாகிஸ்தானிலும் எதிர்காலத்தில் உணவுப் பற்றாக்குறை ஏற்படக் கூடிய ஆபத்து அறிகுறி தென்படுவதாகக் கூறப்படுகின்றது.

கொவிட் தொற்றுக்குப் பிந்தியகால பாதிப்பாகவே பொருளாதார வல்லுநர்கள் இந்நிலைமையைக் கருதுகின்றனர். உலகெங்கும் கொவிட் தொற்று தீவிரமாகப் பரவி அனைத்து நாடுகளும் சுமார் இரு வருட காலம் முடங்கிக் கிடந்த சமயத்தில் எதிர்கால அபாயம் குறித்து நிபுணர்கள் எச்சரிக்கத் தொடங்கியிருந்தனர். உணவு உற்பத்தியும், பொருளாதார முயற்சிகளும், தனியார் தொழில்துறையும் தொடர்ச்சியாக முடங்கிக் கிடப்பதனால், உலக நாடுகள் விரைவில் உணவுப் பஞ்சத்துக்கு முகம் கொடுக்கப் போகின்றன என்ற எச்சரிக்கை அப்போதே விடுக்கப்பட்டு வந்தது.

ஆனால் உலகம் அந்த எச்சரிக்கையைப் பொருட்படுத்தவில்லை. கொவிட் பெருந்தொற்றுக் காலத்தில் பாரிய தொழில் நிறுவனங்கள் இழுத்து மூடப்பட்டன. பல இலட்சக்கணக்கான மக்கள் தொழில்வாய்ப்பை இழந்தனர். பயிர் விளைநிலங்கள் கைவிடப்பட்டு தரிசுநிலங்களாக மாறின. உலக நாடுகள் எங்குமே உணவு உற்பத்தி பெருமளவு குன்றிப் போனது. உணவுப் பொருட்களின் விலைகள் படிப்படியாக அதிகரித்துச் சென்றன. மக்கள் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் பெரும் துன்பமடைந்தனர்.

கொவிட் தொற்றின் தீவிரம் படிப்படியாகக் குறைந்து கொண்டு சென்ற போதிலும், உணவு உற்பத்தி அதிகரிக்கப்படவில்லை. உலகம் அந்த விடயத்தில் கவனம் செலுத்தவுமில்லை. பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை அறிவிப்புகளை வெளியிட்ட போதிலும், உலக நாடுகளின் அரசாங்கங்கள் உணவு உற்பத்தியை அதிகரிப்பது குறித்து கவனம் செலுத்தவில்லை. எச்சரிக்கைகளை பொருட்படுத்தாமல் போனதன் விளைவையே உலகின் பல நாடுகள் இப்போது அனுபவிக்கத் தொடங்கியுள்ளன. இலங்கையும் அதற்கு விதிவிலக்கு அல்ல!

இன்றைய பொருளாதார நெருக்கடியைப் பொறுத்தவரை 'காலம் கடந்து போன ஞானம்' என்பதுதான் பொதுவான கருத்தாக இருக்கின்றது. ஆனால் காலம் கடந்து போய் விட்டதென்பதற்காக நாம் வாளாவிருக்க முடியாது. இன்றைய வீழ்ச்சியிலிருந்த மீண்டெழ வேண்டியது பற்றியே அனைவரும் சிந்திக்க வேண்டும். அதற்கான வழிவகைள் குறித்து நாம் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். ஜப்பான், சிங்கப்பூர் போன்ற பல நாடுகள் பொருளாதார வீழ்ச்சியில் இருந்து எவ்வாறு மீண்டெழுந்தன என்பது பற்றியெல்லாம் நாம் ஆராய வேண்டும். அந்நாடுகளின் முன்னேற்ற வழிவகைகளை நாமும் பின்பற்றினாலேயே வீழ்ச்சியிலிருந்து மீண்டெழ முடியும்.

பொருளாதார வீழ்ச்சியைப் பொறுத்தவரை உணவுப் பற்றாக்குறையென்பது பாரதூரமான விடயமாகும். மனித உயிர்வாழ்க்கைக்கு அத்தியாவசியமான உணவுக்கே தட்டுப்பாடு ஏற்படுமானால் நிலைமை மோசமானதாகி விடலாம். எனவே அதனை எதிர்கொள்வதற்கு எமது நாடு இப்போதே தயாராகி விட வேண்டும். இல்லையேல் விளைவுகள் விபரிக்க முடியாதபடி ஆகி விடலாம். உணவு உற்பத்தியை அதிகரிப்பதைத் தவிர தற்போது வேறு வழிகள் கிடையாது. அனைத்துத் தரப்பினரும் உணவு உற்பத்தி விடயத்தில் முழுமையான கவனம் செலுத்தி எதிர்கால உணவுப் பற்றாக்குறையை வெற்றி கொள்வதற்கான முயற்சிகளில் இறங்க வேண்டும். உணவு உற்பத்தி அதிகரிக்குமானால் உணவுப் பஞ்சம் என்ற பேச்சுக்கே இடமிருக்கப் போவதில்லை.

editor.tkn@lakehouse.lk

# தமிழ்நாடு, சீனா வழங்கிய உணவு நிவாரணம் அம்பாறை மாவட்ட மக்களுக்கு விநியோகம்



## இந்தியாவிடமிருந்து 50,000 பொதிகள், சீனாவிடமிருந்து 2,500 பொதிகள்

இந்திய அரசினால் இலங்கைக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ள ஒரு தொகுதி நிவாரணப் பொருட்களில் அம்பாறை மாவட்டத்திற்கு 50 ஆயிரம் அரிசிப் பொதிகள் வந்து சேர்ந்துள்ளன. இதுதொடர்பாக அம்பாறை மாவட்ட பதில் அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கூறியதாவது:

"எமக்கு கொழும்பிலிருந்து இந்திய அரசின் உதவியாக ஒவ்வொன்றும் 10 கிலோ எடையுள்ள 50,000 அரிசிப் பொதிகள் கிடைக்கப் பெற்று இருக்கின்றன. அதாவது 5 இலட்சம் கிலோ அரிசி கிடைக்கப் பெற்றுள்ளது. அத்துடன் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பால்மா 3 ஆயிரம் கிலோ கிடைக்கப் பெற்றுள்ளது. இவற்றை நாங்கள் அம்பாறை மாவட்டத்தில் 20 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும்பகிர்ந்து வழங்க உள்ளோம்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள 503 கிராமசேவையாளர் பிரிவுகளில் வசிக்கும் பொருத்தமான 50ஆயிரம் குடும்பங்களுக்கு இந்த அரிசிப் பொதிகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொன்றும் பத்து கிலோ எடையுள்ள நிவாரணப் பொதிகளாக இவை உள்ளன. ஐந்து வயதுக்கு குறைந்த குழந்தைகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் கர்ப்பிணிப் பெண்களுக்கு ஒரு கிலோ பால்மா வழங்கப்படுகின்றது. மொத்தமாக 3 ஆயிரம் கிலோ கிராம் பால்மா கிடைத்திருக்கின்றது. இவற்றை அனைத்து 20 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் வழங்கி வைக்க சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன .

அவை பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. அந்தந்த பிரதேச செயலாளர்கள் அவர்களது கிராம சேவையாளர் பிரிவில் உள்ள குறித்த குடும்பங்களுக்கு இந்திய நிவாரணப் பொருட்களை வழங்கி வைப்பார்கள். அம்பாறை மாவட்டத்தில் உள்ள 20 பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 503 கிராம சேவையாளர் பிரிவுகளில் இந்த 50 ஆயிரம் அரிசிப் பொதிகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. தமிழ், முஸ்லிம், சிங்களப் பிரதேசங்கள் அனைத்துக்கும் இந்நிவாரணங்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

அம்பாறை மாவட்டத்தில் அதிகூடிய 55 கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்ட உகன பிரதேச பிரிவுகளில் 546 7 பொதிகள் வழங்கப்பட இருக்கின்றன".

இதேவேளை சீனக் குடியரசின் இலங்கைக்கான தூதுவர் கிவ் ஜென்கொங் அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்திருந்தார் . அவரை பதில் அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் வரவேற்று கலந்துரையாடினார்.

அம்பாறை மாவட்டத்திற்கு சமகால இடர் நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக சீன நாட்டு உதவியாக 2500 உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. ஒவ்வொன்றும் 5,000 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் (2500) பொதிகள் வழங்கப்பட்டன. இவற்றில் 100 பயனாளிகளுக்கு சீன தூதுவரும் அவரது பாரியாரும் அதனை பொதிகளை வழங்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் மதநாயக்க மற்றும் பாதுகாப்புப் படைகளின் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள்.

"இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான நல்லுறவு தொடரும். எமது முதற் கட்ட உதவி இது. எதிர்காலத்தில் இன்னும் பல உதவிகளை இலங்கைக்கு வழங்க இருக்கிறோம்" என்று சீனத் தூதுவர் அங்கு கூறியிருந்தார்.

பதில் அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் சீனத் தூதுவருக்கு நன்றி தெரிவித்து "மேலும் இந்த உதவிகளை அம்பாறை மாவட்டத்திற்கு வழங்க வேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தார்.





**வி.ரி.சகாதேவராஜா...**
(காரைதீவு குறூப் நிருபர்)

### முன்னாள் இராணுவ பதவிநிலைப் பிரதானி

# மேஜர் ஜெனரல் (ஓய்வு) பாலரட்னராஜாவுக்கு இராணுவ மரியாதையுடன் இறுதிக்கிரியை

பல வருடங்களுக்கு முன்னர் இராணுவ பதவிநிலைப் பிரதானியாக கடமையாற்றிய இலங்கை கவசவாகன படையணியின் மேஜர் ஜெனரல் (ஓய்வு) வை. பாலரட்னராஜா தனது 83 ஆவது வயதில் சுகவீனம் காரணமாக காலமானார்.



யாழ்ப்பாணத்தில் 1939 ஜூலை 22 ஆம் திகதி குடும்பத்தில் மூன்றாவது பிள்ளையாக பிறந்த இவர், தனது இடைநிலை கல்வியை புனித ஜோன் கல்லூரியில் தொடர்ந்ததோடு, பாடசாலை மாணவர் படையணி குழு சார்ஜன்ட் ஆகவும் இருந்தார். 1959 நவம்பர் 08 ஆம் திகதி சிலோன் இராணுவத்தில் இணைந்து கொண்டார். தனது அடிப்படை அதிகாரி பயிலுனர் பயிற்சியை ஐக்கிய இராச்சியத்தின் ரோயல் இராணுவ அகடமியில் பெற்றுக் கொண்ட மேஜர் ஜெனரல் (ஓய்வு) வை. பாலரட்னராஜா, இரண்டாம் லெப்டினன்ற் ஆக (Second Lieutenant) அதிகாரவாணை பெற்று 1961 டிசம்பர் 21 ஆம் திகதி சிலோன் கவச வாகன படையணியில் இணைத்துக் கொள்ளப்பட்டார்.

தனது சிறந்த அர்பணிப்பு சேவையின் மூலம் மேஜர் ஜெனரல் நிலை வரை உயர்வு பெற்றுக் கொண்ட அவர், 24 ஆவது படைப்பிரிவின் தளபதி, யாழ். பாதுகாப்புப் படைத் தலைமையக தளபதி, முதலாவது கவசவாகன பிரிகேட் தளபதி, 21 ஆவது பிரிகேட் தளபதி, முதலாவது படைப்பிரிவு தளபதி, இலங்கை கவசப் படையணியின் படைத் தளபதி, இலங்கை இராணுவத் தொண்டர் படையணித் தளபதி மற்றும் இராணுவ பதவிநிலை பிரதானி உள்ளிட்ட பல முக்கியமான பதவிகளையும் வகித்துள்ளார்.

தனது சேவைக்காலத்தில் ஐக்கிய இராச்சியம் பொவிங்டன் ரோயல் கவசவாகன படையணி பயிற்சி நிலையத்தில் கவசவாகன இளம் அதிகாரிகள் பாடநெறி, இந்தியாவில் உயர் கவசவாகன அதிகாரிகள் பாடநெறி உள்ளிட்ட பல முக்கியமான பாடநெறிகளை தொடர்ந்துள்ள இவர், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு கல்லூரியில் பட்டப்படிப்பினையும் தொடர்ந்துள்ளார்.

இவரது அர்ப்பணிப்பு மிக்க சேவைக்காக விசிஸ்ட சேவா விபுஷணய , உத்தம சேவா பதக்கம் உள்ளிட்ட பல பதக்கங்கலால் அலங்கரிக்கப்பட்டார். அவரது இறுதிக்கிரியைகள் பூரண இராணுவ மரியாதையுடன் நேற்று வியாழக்கிழமை (2) மாலை கொழும்பு கனத்தை பொது மயானத்தில் நடைபெற்றன.

**கப்டன் வா சுதர்ஸ்சன்...**

# சமூகப்பணிகளால் ஹெம்மாதகம பிரதேச மக்களின் உள்ளத்தில் நிலைத்து நிற்கும் முன்னாள் அதிபர் யூசுப்

தும்புலுவாவ பள்ளி பரிபாலனசபைத் தலைவரும் ஹெம்மாதகம பள்ளிவாயல்கள் சம்மேலனத்தின் தலைவருமான ஓய்வு பெற்ற அதிபர் யூசுப் 2022/05/10 அன்று திடீரென ஏற்பட்ட மாரடைப்பினால் காலமானார்.

அன்னார் 1949 ஆம் ஆண்டு நவம்பர் 23 ஆம் திகதி தும்புலுவாவ கிராமத்தில் மொஹமட் ஹனீபா மற்றும் திருமதி சுலைஹா உம்மா ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை தும்புலுவாவை அல் அரஃபா பாடசாலையில் ஆரம்பித்தார். பின்னர் ஹிஜ்ராகம – ஹெம்மாதகம அல் அஸ்ஹர் கல்லூரியிலும் உயர்தரக் கல்வியை மாவனல்ல சாஹிரா கல்லூரியிலும் கற்றார். கொழும்பு பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான அவர், அங்கு தமிழ்மொழியை விஷேட கற்கையாகத் தெரிவு செய்து கலைமாணிப் பட்டத்தைப் பெற்றார். 1975 ஜூலை 24 அன்றுஆசிரிய நியமனத்தைப் பெற்ற அவர், 2002 ஜூன் 22 ஆம் திகதி ஓய்வு பெறும்வரை ஆசிரியராகவும் அதிபராகவும் பல்வேறு பாடசலைகளில் நாட்டின் பல பகுதிகளில் பணியாற்றி உள்ளார்.

அவர் அரச சேவையில் தனது பணியை முடித்து 2009/06/22ம் திகதி ஓய்வு பெற்றார். அவர் சமூகநல நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த காலப்பகுதியில் சமூகத்தில் பல பொறுப்புகளை வகித்ததுடன் சமூக ஆர்வலராக இருந்தார்.

2014 முதல் ஹெம்மாதகம மஸ்ஜித் சம்மேளனத்தின் தலைவர் பொறுப்பை ஏற்ற அவர் 2018 ஆம் ஆண்டு முதல் ஹெம்மாதகம மருத்துவ நிதியத்தின் தலைவர் பொறுப்பையும் ஏற்று அப்பொறுப்புக்களை சிறப்பாக நிறைவேற்றினார். ஹெம்மாதகம பொலிஸ் ஆலோசனைக் குழுவின் உறுப்பினராக இருந்த காலத்தில் ஹெம்மாதகம வைத்திய சாலை அபிவிருத்திக் குழுவின் உறுப்பினராகவும் இருந்தார். தனது இறுதிமூச்சு வரைஅப்பதவிகளை வகித்த அவர் தும்புலுவாவாவ பள்ளிப்பரிபாலன சபைத்தலைவராக மற்றும் உறுப்பினராக இருந்து வந்தார்.

அவர் சிறந்த தலைமைத்துவப் பண்புகளைக் கொண்டிருந்தார். அவரது வழிகாட்டுதலின் கீழ் புதிய பள்ளிவாயல் கட்டுமானப் பணிகள் மற்றும் ஹெம்மாதகம நகரத்தில் அமைந்துள்ள வணிகவளாக கட்டுமானப் பணிகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன.எத்தகைய நெருக்கடி மிக்க சூழலையும், எந்த நிலையிலும் கையாளும் தனித்திறமையும் ஆளுமையும் அவரிடம் இருந்தன. அவர் எப்போதும் முகத்தில் புன்னகையுடன் அனைத்து தரப்பினருடனும் நன்றாகப் பழகக் கூடியவராக இருந்தார். உதவிக்காக அணுகும் அனைவருக்கும் அவர் தனது அறிவுத்திறன் மற்றும் அனுபவம் மூலமாக பூரனமாக வழிகாட்டி உதவினார்.

அவர் ஏககாலத்தில் தும்புளுவாவ பள்ளிப்பரிபாலன சபை, ஹெம்மாதகம கல்வி மேம்பாட்டு சங்கம்(HEDS) மற்றும் ஹெம்மாதகம பள்ளிவாயல்கள் சம்மேளனம் ஆகியவற்றிக்கு தலைமை தாங்கிய மிகவும் திறமையான ஆளுமைகளில் ஒருவராக இருந்தார். மடுல்போவ பாதிபியா பாடசாலை, அல் அஸ்ஹர் கல்லூரி உட்பட பல்வேறு பாடசாலைகளில் சிறந்த அதிபராக கடமையாற்றினார்.

மக்களை திறமையாக வழி நடத்துதல் மற்றும் பல்வேறுபட்ட அமைப்புகளை திறம்பட செயற்பட செய்தல் போன்றவற்றில் அவருடைய அறிவு மற்றும் அனுபவத்திலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியவை அவரிடம் நிறையவே இருக்கின்றன. பௌத்த மக்களுடன் சிறந்த உறவைப் பேணி இரு சமூகங்களுக்கிடையில் இணைப்பு பாலமாக செயற்பட்டு வந்தார். நோய்வாய்ப்பட்டவர்களை மருத்துவமனைகளுக்கு அழைத்துச் செல்வதற்காக ஹெம்மாதகம பிரதேசத்திற்கு அம்புலன்ஸ் வாகனம் வாங்குவதற்கு ஏற்பாடு செய்ததில் அவர் செய்த பங்களிப்பு மகத்தானது. அவர் கலந்துகொள்ளும் கூட்டங்கள், மாநாடுகள் போன்றவற்றில் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் உரையாடும் திறன் அவரிடம் இருந்தது.

ஹெம்மாதகமை பிரதேசத்தில் ஒரு பெரிய வெற்றிடத்தை அவர் விட்டுச் செல்கிறார். பிரச்சினைகளை விவாதிக்கவும், கருத்துகளைப் பரிமாறவும், சேர்ந்து பணியாற்றவும், நகைச்சுவை உணர்வோடு பழகவும் அவர் ஓர் அற்புதமான மனிதர். யூசுஃப் ஆசிரியர்/அதிபர் அவர்கள் சிறந்த ஒரு ஆளுமையாக எம்மத்தியில் சுமார் எழுபது வருடங்கள் வாழ்ந்து பெரும் சமூகப்பணிகளை செய்து விட்டு நம்மை விட்டுச் சென்றுள்ளார்.

அவர் தனது மறுமை வாழ்வுக்காக நிறையவே சம்பாதித்திருக்கிறார். எல்லாம் வல்ல இறைவன் அவருக்கு மறுமையில் உயர்ந்த அந்தஸ்தை வழங்க வேண்டுமென பிரார்த்திப்போம்.

**என்.எம்.அமீன்...**




# தமிழக அரசின் நிவாரணப்பொதிகள் வவுனியாவை வந்தடைந்தன








**வவுனியா விசேட, ஓமந்தை விஷேட நிருபர்கள்**


தமிழக அரசினால் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்ட உதவிபொருட்கள் நேற்று (02) காலை புகையிரதம் ஊடாக வவுனியாவை வந்தடைந்தன.

உதவிப் பொருட்கள் வசதியற்ற தெரிவு செய்யப்பட்ட மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை அடுத்து இலங்கை மக்களுக்காக தமிழக அரசினால் அரிசி, பால்மா உள்ளடங்கிய நிவாரணப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. அதில் வட மாகாணத்தின் வவுனியா மாவட்டத்திற்கு 22,550 அரிசி மற்றும் 750 பால்மா பொதிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

அதற்கான நிவாரணப் பொதிகள் வவுனியாவை வந்தடைந்தன. அதனை மாவட்ட செயலக அதிகாரிகள் பொறுப்பேற்று பிரதேச செயலாளர்களிடம் கையளித்தனர்.

அந்தவகையில் வவுனியா பிரதேச செயலக பிரிவுக்கு 12,315 அரிசி, 452 பால்மா பொதிகளும், செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்கு 4675 அரிசி மற்றும் 148 பால்மா பொதிகளும், வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவுக்கு 3560 அரிசி, 116 பால்மா பொதிகளும் வவுனியா தெற்கு பிரதேச செயலக பிரிவுக்கு 2000 அரிசி, 34 பால்மா பொதிகளும் வழங்கப்பட்டுள்ளன. அவை கிராம அலுவலர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாக கிராம மக்களுக்கு பகிர்ந்தளிக்கபடவுள்ளன. உணவுப் பொதிகளை வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர், மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் பொறுப்பேற்றுக் கொண்டு பிரதேச செயலாளர்கள், கிராம அலுவலகர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரிடம் கையளித்திருந்தனர்.

# காணாமல் போன சிறுமி காட்டுப்பகுதியிலிருந்து மீட்பு



**சாவகச்சேரி விசேட நிருபர்**

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிருசுவில் வடக்கு பகுதியில் நேற்று பிற்பகல் காணாமல் போன சிறுமி பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளார்.

3 வயது சிறுமி சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மிருசுவில் வடக்கு பகுதியைச் சேர்ந்த 3 வயதான கபிலன் அபிஷா என்ற சிறுமி நேற்றுமுன்தினம் புதன் கிழமை பிற்பகல் 5.30 மணியளவில் தனது வீட்டிலிருந்து மர்மமான முறையில் காணாமல் போயிருந்தார்.

இந்நிலையில் பிரதேச மக்கள், பாதுகாப்பு தரப்பினர் இணைந்து நடத்திய தேடுதலில் சுமார் 3 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள அயல் கிராமமான வரணி மாசேரி பகுதியிலுள்ள காட்டில் ஆலயமொன்றிலிருந்து இரவு 10 மணியளவில் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளார். மீட்கப்பட்ட சிறுமியின் உடலில் சிறு கீறல் காயங்கள், முள் குத்திய காயங்கள் காணப்பட்டமையால் சிறுமி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இருப்பினும் சிறுமி தனது வீட்டில் இருந்து மூன்று கிலோமீற்றர் தூரத்திலுள்ள ஆலயத்திற்கு எவ்வாறு சென்றார் என்பது குறித்து இதுவரை தெரியவரவில்லை.

# வெளிநாட்டு குடியுரிமை பெற்ற நபருக்கு எதிராக வழக்கு தாக்கல்

**(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)**

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி மற்றம் நீதிமன்றத்தினை அவமதித்து பேசிய குற்றத்துக்காக வெளிநாட்டு குடியுரிமை கொண்ட நபர் ஒருவரை எதிர்வரும் 07.06.2022 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், சந்தேகநபர் கடந்த 31.05.2022 அன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தின் மீது தாக்குதல் நடத்திய சம்பவத்தில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் வெளிநாட்டு குடியுரிமையினை கொண்ட பொக்கணை பகுதியினை சேர்ந்த குடும்பஸ்தர் என தெரியவந்துள்ளது. இவரை நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

இதன்போது மாங்குளம் நீதிமன்றில் நீதிபதி,நீதிமன்றத்தினை அவமதித்து பேசியுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர். இந்நிலையில் சந்தேக நபரை எதிர்வரும் 07.06.2022 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பலநோக்கு கூட்டுறவு சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு சேதம் ஏற்படுத்தியமை, மக்கள் மத்தியில் குழப்பத்தினை ஏற்படுத்தியமை, தாக்குதல் முயற்சியினை மேற்கொண்டமை போன்ற குற்றச்சாட்டுக்கள் இவர் மீது முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பருத்தித்துறை மந்திகை ஆதார வைத்தியசாலையில் நிதிமோசடி

**கோப்பாய் குறுப் நிருபர்**

பருத்தித்துறை மந்திகை ஆதார வைத்தியசாலையில் இடம்பெற்ற நிர்வாக மற்றும் நிதிமோசடி தொடர்பில் மாகாண உள்ளகக் கணக்காய்வு அறிக்கையில் பல திடுக்கிடும் சம்பவங்கள் வெளியாகியுள்ளன.

24. 4. 2020 ஆம் திகதியிலிருந்து கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட திகதி வரையான காலப்பகுதியில் வைத்தியசாலையில் 22 வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட போதும் 10 வேலைத்திட்டங்களுக்கு மட்டுமே வடக்கு மாகாண பிரதம செயலாளரினால் அனுமதி வழங்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பான ஒப்பந்த கோவைகள் மற்றும் தொழில்நுட்பத்தினால் சான்றுபடுத்தப்பட்ட வேலை நிறைவேற்று அறிக்கை கணக்காய்வு குழுவினால் கோரப்பட்ட போதும் சமர்ப்பிக்கப்படாமையினால் இது தொடர்பான கணக்காய்வினை மேற்கொள்ள முடியாது போனதாக கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

09.12.2020 பிரதம செயலாளரினால் அனுமதிக்கப்பட்ட கருத்தின் பிரகாரம் வைத்தியசாலையில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் மாகாண சுகாதார அமைச்சின் கீழ் பணியாற்றும் பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மூலம் மேற்பார்வை செய்யப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டது. எனினும் வைத்தியசாலையில் நிர்மாண வேலைகளுக்காக அரச சேவை சாராத உத்தியோகத்தர் ஒருவரை பணிக்கு அமர்த்தி மாதாந்தம் 25 ஆயிரம் ரூபா வீதம் ஊதியம் வழங்கியமை அம்பலமாகியுள்ளது.

துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட 22 வேலைத்திட்டங்களில் இரண்டு வேலைத்திட்டங்கள் வைத்தியசாலை முகாமைத்துவ குழுவினரின் சகோதரனுக்கு பெறுகை ஒழுங்கு விதிக்கு முரணாக வழங்கியமை கண்டறியப்பட்டது.

2020 ஆம் ஆண்டு வைகாசி மற்றும் ஆனி மாதத்தில் கிடைக்கப்பெற்ற 210 மெத்தைகள் கணக்காய்வு தினமான 10. 02.2021 ஆண்டு வரை ஏறத்தாழ 10 மாதங்கள் கடந்த நிலையிலும் வைத்தியசாலை பதிவேட்டில் உள்வாங்கப்படவில்லை.

மேலும் வைத்தியசாலையில் இடம்பெற்ற செலவீனங்களில் சில செலவீனங்களுக்கு மட்டும் வழங்கிய பற்றுச்சீட்டு மட்டும் கணக்காய்வு சமர்ப்பிக்கப்பட்டது .

மேலும் வைத்தியசாலையின் முகாமைத்துவக் குழுக்கென உருவாக்கப்பட்ட யாப்பு அதன் சட்டநீதியான வலுவை கணக்காய்வு செய்யப்பட்ட தினம் வரை உறுதி செய்யவில்லை போன்ற பல விடயங்களை மேற்கோள் காட்டி மாகாண பிரதம உள்ளக கணக்காய்வு அலுவலகத்தினால் மாகாண சுகாதாரப்பணிப்பாளருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

# சுயதொழில் முயற்சியாளர்களுக்கு வாழ்வாதார உதவித்திட்டம்



**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா விவசாயிகள் மற்றும் சுயதொழில் முயற்சியாளர்களுக்கான வாழ்வாதார உதவித்திட்டம் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபனினால் வழங்கி வைக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினருக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் கீழ் 24 இலட்சத்தி 29 ஆயிரம் ரூபா பெறுமதியில் 80 பயனாளிகளுக்கு உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன. வவுனியா பிரதேச செயலகத்தில் பிரதேச உதவி திட்டமிடல் பணிப்பாளர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் மற்றும் அவரது பிரத்தியேக செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.



யாழ்ப்பாணம் – இணுவில் பரராஜசேகர பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழா நேற்றைய தினம் வியாழக்கிழமை காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது.

படம் யாழ். விசேட நிருபர்

# மண்ணெண்ணெய் பிரச்சினைக்கு முடிவு எடுக்க உதவுமாறு கோரிக்கை

**(மன்னார் குறுப் நிருபர்)**



மண்ணெண்ணெய் பிரச்சினைக்கு ஒரு தீர்க்கமான முடிவு எடுக்க உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக இலங்கைக்கான இந்திய துணை தூதுவருக்கு நேற்று வியாழக்கிழமை (2) காலை அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில்,,,

மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய இரு மாவட்டங்களிலும் வாழும் பெரும்பான்மையான மக்கள் தங்கள் வாழ்வாதார தொழிலாக மீன்பிடி மற்றும் விவசாயம் ஆகிய இரு தொழில்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தை சேர்ந்த கடற்தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு மட்டும் 78 ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணெயும் முல்லைத்தீவு மாவட்டத்தினை பிரதிநிதித்துவப்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுகின்ற மீனவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 31 ஆயிரத்து 180 லீற்றர் மண்ணெண்ணெய்யும் தேவை என தெரியவருகின்றது. அரச தரவுகளின் அடிப்படையில் அந்த அளவு எரிபொருள் தேவை என்பதை மேற்காட்டி நான் வலியுறுத்தி கூற விரும்புகிறேன். எனவே மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய இரு மாவட்டங்களையும் சேர்ந்த மீனவர்கள் மற்றும் விவசாயிகள் தொடர்ச்சியாக பாதிப்புகளை சந்தித்து வருகின்றனர். எனவே மண்ணெண்ணெய் பிரச்சினைக்கு ஒரு தீர்க்கமான முடிவு எடுக்க உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன் என இலங்கைக்கான இந்திய துணை தூதருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சமையல் எரிவாயு சிலிண்டர்களை பகிர்ந்தளிப்பதற்கான நடைமுறைகள்

**(பரந்தன் குறுப் நிருபர்)**

கிளிநொச்சி மாவட்டத்தில் சமையல் எரிவாயு சிலிண்டர்களை பகிர்ந்தளிப்பதற்கான நடைமுறைகளை சீரான முறையில் மேற்கொள்ள பிரதேச செயலாளர் ஊடாக கிராம அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மாவட்ட செயலகத்தினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அதாவது கிளிநொச்சி மாவட்டத்தில் கேஸ்(Gas) பாவனையாளர்கள் தாங்கள் முன்பு கொள்வனவு செய்த காஸ் விநியோகம் செய்யும் கடைகளிலிருந்து (முகவர்களிடமிருந்து) தமது கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

எனவே சிரமங்களை தவிர்த்து தாங்கள் முன்பு கொள்வனவு செய்த கடைகளில் முன்பதிவினை மேற்கொள்ளும் அதேசந்தர்ப்பத்தில் முன்னுரிமை அடிப்படையில் கேஸ் விநியோகத்தினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்விநியோக நடைமுறைகளை சீரான முறையில் மேற்கொள்ள பிரதேச செயலாளர் ஊடாக கிராம அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

## டெங்கு நோய் பரவல்...

இனங்காணப்பட்டுள்ளனர். மேல் மாகாணத்தில் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் கண்டி, காலி, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக வைத்தியர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கரவெட்டி மூதாட்டியின் இறப்புக்கு...

தொடர்ந்து, கடந்த ஜனவரி 11ஆம் திகதி மூதாட்டியொருவர் உயிரிழந்திருந்தார். கரவெட்டி, யார்க்கரு பகுதியை சேர்ந்த மனோன்மணி குலவீரசிங்கம் (60) என்ற பெண், கர்ப்பப்பை புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருந்தார். அவரது கர்ப்பப்பையை அகற்றுமாறு வைத்திய ஆலோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதன்படி, கடந்த டிசம்பர் 10ஆம் திகதி நெல்லியடி, முடக்காடு பகுதியிலுள்ள தனியார் வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைக்கு சென்றிருந்தார். பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை மகப்பேற்றியல் வைத்திய நிபுணர் ஒருவர் தலைமையிலான குழுவினர் அவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொண்டனர். அந்த சத்திரசிகிச்சையில் பங்கேற்ற பிற வைத்தியர்கள், தாதியர்கள் என பலரும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பணிபுரிபவர்களே. யாழ் போதனா வைத்தியசாலை வைத்தியர் ஒருவரும் பங்கேற்றிருந்தார்.

சிகிச்சையின் பின் வீடு திரும்பிய பெண், நோய்வாய்ப்பட்டுள்ளார். இதையடுத்து, பிரித்தானியாவிலுள்ள அவரது மகளும் நாடு திரும்பியுள்ளார். அவரது உடல்நிலை மோசமடைந்திருந்ததால், ஜனவரி 11ஆம் திகதி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். அன்று இரவே அவர் உயிரிழந்தார். அவரது உடல் பிரேத பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட போது, உடலுக்குள் மருந்து கட்ட பயன்படுத்தப்படும் துணித்துண்டு காணப்பட்டது. 50 செ.மீ நீளமும், 10 செ.மீ அகலமும் கொண்ட அந்த துணித்துண்டு, அறுவை சிகிச்சையின் போது தவறுதலாக உடலுக்குள் வைத்து தைக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது. அந்த துண்டு இருந்த பகுதியில் குடல் பழுதடைந்துள்ளது. அந்த துண்டினால் ஏற்பட்ட கிருமித்தொற்று காரணமாகவே, பெண் உயிரிழந்தார் என பிரேத பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, உயிரிழந்த பெண்ணின் சிகிச்சைக்காக தனியார் வைத்தியசாலை ரூ. 3 இலட்சத்துக்கும் அதிகமான பணத்தை கட்டணமாக வசூலித்துள்ளதும் தெரிய வந்தது. இது தொடர்பான வழக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் நடந்து வந்தது. அனைத்து சமர்ப்பணங்களையும் கேட்ட நீதிபதி, வழக்கு விபரங்களை சட்டமா அதிபரிடம் அனுப்பியிருந்தார்.

இந்த நிலையில் மே31ம் திகதி இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதையடுத்து, வைத்தியத்துறை சார்ந்த சிலர் கைது செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழர் பிரச்சினைகளுக்கு

விடுக்கப்படும் இந்த சூழ்நிலையில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு பற்றியும் கவனம் செலுத்துவது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார். கடந்த 74 ஆண்டுகளாக தமிழ் மக்கள் விடுக்கும் வேண்டுகோள் அதிகார பகிர்வின் மூலம் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்பதே.அதனை புதிய அரசியலமைப்பின் மூலம் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அதேவேளை அரசாங்கம் அரசியலமைப்பு திருத்தம் ஒன்றை கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுத்து வரும் நிலையில் அது பழைய அரசியலமைப்பில் புதிதாக 'பெச்" போடுவதாகவோ அல்லது 'டிங்கரிங்' செய்வதாகவவோ இருக்கக்கூடாது. அரசியலமைப்பு திருத்தம் அன்றி முழுமையான புதிய அரசியலமைப்பு ஒன்றே அவசியமாகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

ஊடக நிறுவம் ஒன்றில் நடைபெற்ற நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச கலந்துகொண்ட விவாதமொன்றின்போதே சுமந்திரன் எம்பி இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்

தமிழ் மக்களின் பிரச்சினைகள் நீண்ட காலமாக தேசிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளன. புதிய அரசியலமைப்பின் மூலம் அதற்கு தீர்வு பெற்றுக் கொடுப்பது அவசியம்.

யுத்தம் முடிவடைந்தவுடன் தமிழ் மக்களின் பிரச்சினையும் முடிவடைந்துவிட்டது என்று நினைத்தால் அது தவறு.

1956 ஆம் ஆண்டு முதல் தமிழ் மக்கள் ஜனநாயக முறையில் விடுத்து வரும் வேண்டுகோளுக்கும் அவர்களது எதிர்பார்ப்புகளுக்கும் அரசியலமைப்பின் மூலம் தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். அதிகாரப் பகிர்வே அவர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. பெரும்பான்மையானவர்கள் அதனை விரும்பவில்லை எனக் கூறிக்கொண்டு தொடர்ந்தும் அதனைத் தட்டிக் கழிக்க முடியாது.

தமிழ் மக்கள் நாம் சிறுபான்மையாக இருக்கலாம். ஆனால் எமது வேண்டுகோள் நிறைவேற்றப்பட வேண்டும். அது தொடர்பில் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கும் இது மிகவும் பொருத்தமான காலமாக உள்ளது.

காலிமுகத்திடலில் யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்ட தின நினைவு நிகழ்வும் யுத்தத்தில் உயிரிழந்த மக்களின் நினைவேந்தல் நிகழ்வும் கூட நடத்தப்படுகிறது. அதற்காக வருத்தம் தெரிவிக்கப்பட்டு முதல் தடவையாக இவ்வாறு நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன. இது மிகவும் சிறந்த விடயமாகும்.

யுத்தத்தில் மரணமடைந்த தமிழ் மக்களைப் போன்று யுத்தத்தினால் மரணமடைந்த இராணுவத்தினர் தொடர்பிலும் தமிழ் மக்களாகிய நாம் எமது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இவ்வாறான ஒரு நிலைக்கு நாம் வந்துள்ளோம் என்பது மகிழ்ச்சியளிக்கிறது.

இந்த அடிப்படையிலேயே சுமார் எழுபத்தி நான்கு ஆண்டுகள் தொடரும் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண முடியும். நாம் ஒன்றிணைய வேண்டும், ஒன்றாக செயல்பட வேண்டும் என்றெல்லாம் நாடு வீழ்ச்சியடைந்துள்ள இந்த நிலையிலேயே நாம் சிந்திக்கின்றோம். இந்த சந்தர்ப்பத்தை நாம் அதற்காக பயன்படுத்துவது சிறந்தது என நான் நினைக்கின்றேன்.

ஜனாதிபதிக்கு மக்களின் ஆதரவு இல்லாத நிலையில் பாராளுமன்றமும் கலைக்கப்பட வேண்டும். புதிய வியூகம் அமைத்து புதிதாக அனைத்தும் ஆரம்பிக்கப்பட வேண்டும். அதற்காக புதிதாக மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டு நாடு முன் கொண்டு செல்லப்பட வேண்டும்.

நாடு பெரும் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ள காலம் இது. இதற்கு முழுமையான தீர்வு காண வேண்டுமானால் ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறுவது போல 'சிஸ்டம் சேஞ்ச்' ஒன்று அவசியம். அதற்கான நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட வேண்டும் அது மேலும் காலதாமதமாகும் போது நெருக்கடிகளே அதிகரிக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.(ஸ)

## சீனாவிலிருந்து இன்று...

தொகை மருந்துப் பொருட்களுடன் கப்பல் ஒன்று இம் மாத நடுப்பகுதியில் நாட்டுக்கு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அந்த கப்பலிலும் 2,56,320 தடுப்பூசிகள் உள்ளடங்குவதாகவும் இலங்கையிலுள்ள சீன தூதுவராலயம் தெரிவித்துள்ளது. முதலாவது தொகுதி மருந்துகளுடன் இன்று நள்ளிரவு சீன.எக்ஸ்.3119 இலக்க விமானம் நாட்டை வந்தடைவதுடன் மற்றுமொரு தொகுதி இம் மாத நடுப்பகுதியில் நாட்டுக்கு கிடைக்கும் என்று இலங்கையில் உள்ள சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

சீனாவிலிருந்து கிடைக்கும் இந்த இரண்டு தொகுதி மருந்துகளும் ஆறு மாதங்களுக்கு போதுமானதாக இருக்கும் என சுகாதாரத் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## தமிழக நிவாரணங்களை...

தொழிலாளர்கள் எவரும் உள்ளடக்கப் படமாட்டார்களென தெரிவித்த இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான், எம்மைப் பொறுத்த வரை தோட்டத்திலுள்ள அனைவருக்கும் நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென தெரிவித்தார்.

தமிழக நிவாரணங்கள் விநியாகிக்கும் நடவடிக்கையில், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் அழுத்தம் விடுப்பதாகவும், யார், யார் வறுமையானவர்கள், யாருக்கு இதனை விநியோகிக்க வேண்டுமென தமக்கு தெரியுமென இலங்கை கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளமைக்கு பதிலளிக்கும் முகமாகவே செந்தில் தொண்டமான் நேற்று இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று (2) கொழும்பிலுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்த அவர், தோட்டத் தொழிலிருந்து ஓய்வுப் பெற்றவர்கள் மற்றும் எவ்வித தொழிலிலும் ஈடுபடாதவர்கள் மாத்திரமே கிராம உத்தியோகத்தர்களின் பட்டியலில் உள்வாங்கப்பட்டுள்ளனர். அவ்வாறு பார்க்குமிடத்து ஒரு தோட்டத்தில் 20 சதவீதமானவர்களே இந்த நிவாரணங்களைப் பெற தகுதியானவர்களென கிராம உத்தியோகத்தர்கள் வகைப்படுத்தியுள்ளனர்.

ஆனால் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸானது ஒரு தோட்டத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் இந்த நிவாரணம் கிடைக்க வேண்டுமென்பதை நோக்காக கொண்டுள்ளது என்றார். கொரோனா காலத்தில் 5,000 ரூபாய் நிவாரண கொடுப்பனவின் போது பல பிரச்சினைகளை தொழிலாளர்கள் எதிர்கொண்டனர். எனவே அவ்வாறான நிலையைத் தவிர்ப்பதற்காகவே நாம் இந்த நடவடிக்கையை முன்னெடுத்தோம். குறிப்பாக கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும் . இது அரசாங்கத்தின் சமுர்த்தி வேலைத்திட்டமோ அல்லது அரசாங்கத்தின் வேறு வேலைத்திட்டமோ அல்ல. அவ்வாறான வேலைத்திட்டங்கள் எனின் கிராம உத்தியோகத்தர்கள் கூறும் விடயங்கள் சரிவரும். ஆனால் இது தமிழக அரசாங்கத்தின் நிவாரணம் என்பதால் அனைத்து தோட்ட மக்களையும் நிவாரணம் சென்றடையும் வேண்டும் என்றார்.

## சிறுபோகத்துக்கான உரத்தை...

ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இவ்விடயத்தை தெரிவித்தார்.

உமா ஓயா மற்றும் மொரகஹகந்த திட்டங்களை இவ் வருட இறுதிக்குள் நிறைவு செய்து பெரும் போகத்திற்கான அனுகூலங்களை பெற்றுக் கொடுக்க முடியுமென கலந்துரையாடலில் தெரியவந்துள்ளது. மொராண, மஹகல்கமுவ சார் கால்வாய், மஹகோன குளம், விலகண்டிய குளம் மற்றும் கொடிகமுவ குளம் ஆகிய திட்டங்கள் இதற்கு இணையாக ஒரே நேரத்தில் பூர்த்தி செய்யப்படவுள்ளன.

வெளிநாட்டு நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களை குறித்த காலத்திற்குள் நிறைவுசெய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

கடந்த மூன்று நாட்களில் மொத்த மின் உற்பத்தியில் 80% நீர் மற்றும் காற்றாலை மின்சாரம் மூலம் தேசிய மின்கட்டமைப்பிற்கு வழங்கப்பட்டமை தெரியவந்துள்ளது. மிதக்கும் சூரியசக்தி பேனல் திட்டங்களை மேம்படுத்தவும் கூரையில் பொருத்தப்படும் சூரியசக்தி பேனல்களுக்கு வழங்கப்படும் உதவிகளை அதிகரிக்கவும் நுகர்வோரை ஊக்குவிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஜனாதிபதி தெரிவித்தார்.

சிறுபோகத்தில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், நீர்ப்பாசன திணைக்களம் மற்றும் மகாவலி அதிகார சபையின் கீழ் நீர் வழங்கப்படும் நீர்ப்பாசன நிலங்களில் 50% ஏற்கனவே பயிரிடப்பட்டுள்ளது. 2,25,000 மகாவலி வீட்டுத்தோட்டங்கள் மேலதிக பயிர்களை பயிரிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்ததோடு. இதுவரை நெல் பயிரிப்படாத காணிகளில் வேறு பயிர்களைப் பயிரிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி அனுர திஸாநாயக்க, அமைச்சின் செயலாளர் யூ.டி.சி ஜெயலால் மற்றும் அமைச்சின் துறைசார் நிறுவனங்களின் அதிகாரிகளும் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

## பாராளுமன்றத்தில் 07ஆம் திகதி...

இதன்போது அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் இடம்பெறவுள்ள விடயங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளன.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் அமரகீர்த்தி அத்துகோரளவின் அனுதாபப் பிரேரணையை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏனைய மூன்று தினங்களிலும் நாட்டின் பொருளாதாரம் உள்ளிட்ட தற்போதைய நெருக்கடி நிலைமைகள் தொடர்பில் விவாதங்களை மேற்கொள்ள நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நேற்றைய தினம் மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் கருத்து தெரிவித்த முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார; நேற்றைய தினம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தின்போது நாட்டு மக்கள் எதிர்நோக்கும் நெருக்கடி நிலைமை தொடர்பில் ஆராயப்பட்டதுடன் எதிர்வரும் வாரத்தில் மூன்று தினங்கள் அது தொடர்பான விவாதங்களை நடத்த தீர்மானிக்கப்பட்ட தாகவும் அவர் தெரிவித்தார்.(ஸ)

## A/L, தரம் 05 புலமை பரிசில்...

தெரிவித்தார். அதேவேளை அடுத்த வருடத்துக்கான பாடசாலை நூல்கள், இலவச சீருடை உள்ளிட்ட அனைத்திற்குமான நிதி தொடர்பில் திரைசேரியுடன் இணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்

சுசில் பிரேமஜயந்த புதிய கல்வி அமைச்சராக பொறுப்பேற்ற பின்னர் நடத்தியுள்ள முதலாவது ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இங்கு தொடர்ந்தும் விளக்கமளித்த அமைச்சர்:

2020ஆம் ஆண்டு 194 பாடசாலை நாட்கள் இருந்தபோதிலும் கொரோனா வைரஸ் சூழல் காரணமாக மேல் மாகாணத்தில் 94 நாட்களே பாடசாலைகள் நடத்தப்பட்டுள்ளன. ஏனைய மாகாணங்களில் பாடசாலைகள் 117 நாட்கள் நடத்தப்பட்டுள்ளன. கடந்த வருடத்தில் 101 நாட்கள் மேல் மாகாணத்திலும் ஏனைய மாகாணங்களில் 143 நாட்கள் பாடசாலைகள் நடைபெற்றுள்ளன. அதே போன்று இந்த வருடத்தில் 139 நாட்கள் பாடசாலை தினங்களாக கணிக்கப்பட்டுள்ளன.

ஓகஸ்ட் மாதம் நடத்தப்பட உள்ள கல்வி பொது தராதர உயர்தர பரீட்சை ஒக்டோபர் அல்லது நவம்பரில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையும் அக்காலங்களில் நடைபெறும். இந்த வருடத்தில் டிசம்பர் 23ஆம் திகதி வரை பாடசாலைகள் நடைபெறும் என எதிர்பார்க்கலாம்.

அதேபோன்று 2023ஆம் ஆண்டு நாம் சகல தரப்பினருடனும் கலந்துரையாடி பாடசாலை நாட்களை உச்ச அளவில் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளோம்.இந்த வருடத்திற்கான பாடங்களை முழுமையாக நிவர்த்தி செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

அடுத்த ஆண்டுக்கான இலவச பாடநூல்கள், இலவச சீருடைகள் மற்றும் பரீட்சைத் திணைக்களத்திற்கு தேவையான காகிதாதிகள் உள்ளிட்ட அனைத்திற்கும் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு திறைசேரியுடன் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாடசாலை மாணவர்களின் போசணை தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி எந்த வகையிலும் போதாது. இது தொடர்பில் உலக உணவு நிறுவனம், யுனிசெப் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளுடன் நாம் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றோம்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கான புலமைப்பரிசில் உள்ளிட்ட ஏனைய கொடுப்பனவுகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

கடந்த இரண்டு வருடங்களாக நாட்டில் நிலவிய கொரோனா வைரஸ் சூழ்நிலை மற்றும் பொருளாதார நெருக்கடி நிலையால் பெரும் சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. 42 இலட்சம் மாணவர்களையும் அது பாதித்துள்ளதென்றும் அவர் தெரிவித்தார்.

## தேவையான நேரத்தில்...

இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து கொழும்பை தளமாகக் கொண்ட இராஜதந்திரிகளுக்கு நேற்று 02ஆம் திகதி வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் விளக்கமளித்தார்.

அமைச்சர் பேராசிரியர் பீரிஸ், தனது உரையின் போது, இலங்கையில் நிலவும் நிலைமை மற்றும் எரிபொருள், எரிவாயு, அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் மற்றும் மின்வெட்டு போன்ற அழுத்தமான பிரச்சினைகளை உள்ளடக்கிய அரசாங்கம் எதிர்கொள்ளும் சவால்களை சுட்டிக் காட்டினார்.

அவர் தனது உரையில், பாராளுமன்றத்திலுள்ள அரசியலமைப்பின் 21ஆவது திருத்தத்தையும் குறிப்பிட்டதுடன், இந்த முக்கியமான சட்டத்தின் சில முக்கிய அம்சங்களையும் சுட்டிக் காட்டினார். நேற்றைய கூட்டத்துக்கு இராஜதந்திர உறுப்பினர்களின் பங்கேற்புக்காக தனது பாராட்டுகளைத் தெரிவித்த வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பீரிஸ், இலங்கையின் அண்மைக்கால வரலாற்றில் குறிப்பாக சவாலான ஒரு கட்டத்தில் தமது ஆதரவையும் நல்லெண்ணத்தையும் வழங்குமாறும் தூதுவர்களைக் கேட்டுக்கொண்டார். மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன ஆகியோர் சுருக்கமான விளக்கங்களை முன்வைத்து கேள்விகளுக்கு பதிலளித்தனர். இந்த மாநாட்டில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தனவும் இணைந்திருந்தார்.

## ரூ. 695 பில். குறைநிரப்பு... 

(03ஆம் பக்கத் தொடர்)

தலைமையில் நேற்று (02) முற்பகல் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இது தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

அதேநேரம், எதிர்வரும் 07ஆம் திகதி முற்பகல் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட 2022.04.09ஆம் திகதிய 2274/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதி மற்றும் கடன் எல்லையை ஒரு ட்ரில்லியன் ரூபாவினால் உயர்த்துவதற்கு உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழான தீர்மானம் என்பன விவாதமின்றி நிறைவேற்றப்படவுள்ளன. அதன் பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் விசேட அறிவிப்பொன்று முன்வைக்கப்படவிருப்பதுடன், அது குறித்த சபை ஒத்திவைப்பு விவாதம் பி.ப 5.30 மணி வரை நடைபெறவுள்ளது.

ஜூன் 09ஆம் திகதி இலங்கை மின்சாரம் திருத்தச்சட்டமூலம் (இரண்டாவது வாசிப்பு) மற்றும் பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் என்பன பி.ப 4.30 மணி வரை விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்படவுள்ளன. அதன் பின்னர் பி.ப 4.30 மணி முதல் 4.50 மணி வரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்கு நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதுடன், பி.ப 4.50 மணி முதல் பி.ப 5.30 மணி வரை ஆளும் கட்சியினால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு நேரத்தின் நேரத்தின் போதான விவாதம் நடைபெறும்.

செலவீனங்களைக் குறைத்து சுற்றுச் சூழலுக்கு நட்பான முறையில் இலத்திரனியல் அரசசேவையொன்றை உருவாக்குவதற்கு ஏற்ற வகையில் பாராளுமன்ற செயற்பாடுகளை கடதாசிப் பயன்பாடு இன்றி முன்னெடுத்துச் செல்வதன் அவசியம் குறித்த யோசனையை வலியுறுத்தி நிதி அமைச்சின் செயலாளர் அனுப்பியிருந்த கடிதம் தொடர்பிலும் நேற்று கவனம் செலுத்தப்பட்டது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் சகல அறிக்கைகள், ஆவணங்களின் இலத்திரனியல் பிரதிகள் (Soft Copies) பாராளுமன்ற இணையத்தளத்தில் விசேட இணைய போட்ரலில் (Web Portal) உள்ளடக்கி பாராளுமன்ற உறுப்பினர்களின் பயன்பாட்டுக்கு வசதி செய்து கொடுப்பதற்கான வாய்ப்புக்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. எதிர்வரும் காலங்களில் தேவையான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்வதற்கு குழு உறுப்பினர்களின் ஏகோபித்த தீர்மானத்தின் மூலம் சபாநாயகர் தேவையான பணிப்புரைகளை வழங்கியுள்ளார்.

## ஆணைக்குழுவின் ... 

(03ஆம் பக்கத் தொடர்)

வாரங்களுக்கு நீடிக்கப்படுவதாக வர்த்தமானி அறிவித்தல் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2021ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26ம் திகதி நிறுவப்பட்ட இந்த செயலணியின் பதவிக்காலம் முடிவடைந்ததையடுத்து கடந்த மே மாதம் 27ம் திகதி முதல் மூன்று வாரங்களுக்கு பதவிக் காலத்தை நீடிப்பதாக ஜனாதிபதி வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக அறிவித்துள்ளார்.

## யூரியா உரத்தை வழங்க... 

(03ஆம் பக்கத் தொடர்)

உட்பட பலர் இந்த கலந்துரையாடலில் கலந்துக் கொண்டனர். இம்முறை சிறு போக நெற்செய்கைக்குத் தேவையான இரசாயன உரங்களைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது உலக வங்கியின் பிரதிநிதிகள் உரிய நிதியுதவியை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் நாட்டு மக்களுக்கு தட்டுப்பாடின்றி அரிசி வழங்கும் வேலைத்திட்டத்திற்கு உலக வங்கியினால் வழங்கப்படும் ஆதரவை பாராட்டுவதாக அமைச்சர் தெரிவித்தார்.

நெல் பயிர்ச்செய்கை மற்றும் ஏனைய பயிர்ச் செய்கைகளுக்கு தேவையான உரங்கள் மற்றும் விவசாய இரசாயனங்களை வழங்குவதற்கு உலக வங்கி போன்ற ஏனைய நிறுவனங்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## கடவுச்சீட்டு விண்ணப்பிப்போர்... 

(03ஆம் பக்கத் தொடர்)

கூறியுள்ளார். இதனிடையே, இந்த ஆண்டில் அதிகபட்சமாக கடந்த மார்ச் மாதத்தில் 74,890 கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

ஜனவரி, பெப்ரவரி, ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் 50,000 கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. 2021ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்த கடவுச்சீட்டுகளின் எண்ணிக்கை 382,506 ஆக பதிவாகியுள்ளது.

## பாராளுமன்றுக்கு அதிக...

குறிப்பிட்டுள்ளார். சிலர் நாட்டின் சட்டங்களை உரிய முறையில் பின்பற்றுதில்லை என ஊடகமொன்றுக்கு தெரிவித்த சபாநாயகர் , இதன்படி பாராளுமன்றில் கூட்டங்களை நடத்தும் போது தற்பொழுது வழங்கப்படும் பாதுகாப்பினை விடவும் கூடுதல் பாதுகாப்பு வழங்கப்படுவது அவசியம் என தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பகல் உணவு வழங்குவதனை நிறுத்தினால், வீட்டிலிருந்து சாப்பாடு கொண்டு வர நேரிடும் எனவும் இது பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். கடந்த காலங்களில் உணவு பொதிக்குள் குண்டு வைத்து பாராளுமன்றிற்கு கொண்டு வரப்பட்டதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## சிறை உத்தியோகத்தர்களிடம்...

ஒப்படைக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் பொதுமன்னிப்பை இடைநிறுத்தியும், அவரை மீண்டும் கைது செய்து சிறைச்சாலைக்கு அனுப்புமாறும் உச்சநீதிமன்றம் கடந்த மே மாதம் 30ம் திகதி உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில் ஜயவர்தனபுர மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் துமிந்த சில்வா குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

விசாரணைகளின் பின் அவர் சிறைச்சாலை அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளார். அவரது மருத்துவ அறிக்கையைப் பொறுத்து தேசிய மருத்துவமனை அல்லது சிறைச்சாலை மருத்துவமனைக்கு துமிந்த சில்வா விரைவில் மாற்றப்படுவார் என சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## சிறுநீரக வியாபாரத்தில்...

இந்த மருத்துவர்களுக்கு எதிராக விசாரணைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மருத்துவச் சபையின் ஆவண காப்பக அதிகாரி மருத்துவர் ஆனந்த ஹபுகொட தெரிவித்துள்ளார்.

இலங்கை மருத்துவச் சபையில் பதிவு செய்துகொண்டுள்ள இரண்டு மருத்துவர்கள் சிறுநீரக விற்பனை தொடர்பான வர்த்தகத்தில் ஈடுபட்டு வருவதாக கொழும்பு ஹெவ்லொக் வீதியில் வசித்து வரும் மருத்துவர் ருவான் எம்.ஜயதுங்க முறைப்பாடு செய்துள்ளார். இந்த மருத்துவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலை மற்றும் கண் மருத்துவமனை ஆகியவற்றில் சேவையாற்றி வருவதாக தெரியவந்துள்ளது.

இந்த சிறுநீரக வியாபாரம் சம்பந்தமான விசாரணை நடத்துமாறு கோரி பொலிஸ் மா அதிபருக்கும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2013 ஆம் ஆண்டு இந்த சிறுநீரக வியாபாரம் தொடர்பாக இந்திய பிரஜை ஒருவரை குற்றவியல் விசாரணை திணைக்கள அதிகாரிகள் கைது செய்து, விசாரணைகளை நடத்தி இருந்தனர்.

இந்தியாவை சேர்ந்த அந்த சந்தேக நபர் மேற்படி மருத்துவர்கள் தொடர்பான தகவல்களை வெளியிட்டிருந்ததாகவும் இலங்கை மருத்துவச் சபையிடம் செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது.

இந்தியாவில் உள்ள சில மாநிலங்களை சேர்ந்த நபர்கள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டு அவர்களிடம் இருந்து சிறுநீரகங்கள் பெற்றுக் கொள்ளப்படுவதாகவும் அவற்றை சிறுநீரக கோளாறுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கி சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை செய்வதற்கு பெருந்தொகை பணம் அறவிடப்படுவதாகவும் கடந்த காலங்களில் செய்திகள் வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆட்டோ பள்ளத்தில் வீழ்ந்து...

சென்ற குறித்த முச்சக்கரவண்டி சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்த தந்தையும் மகனும் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் வைத்தியசாலை பேச்சாளர் தெரிவித்தார்.

## சனத், ஜயதிலகவுக்கு...

உள்ளிட்ட 11 பேர் கொண்ட குழுவினர் கொழும்பு கோட்டை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது அவர்களின் விளக்கமறியல் உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் எதிர்வரும் 8ஆம் திகதி வரை சனத் நிஷாந்த உள்ளிட்டோருக்கு மீண்டும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

## வெள்ளிக்கிழமைகளில்...

பிரகாரம் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

எனவே வெள்ளிக்கிழமையன்று மக்கள் அரச அலுவலகங்களை நாடுவதை தவிர்க்குமாறு பணிப்பாளர் நாயகம் கேட்டுக்கொண்டுள்ளார்.

இயற்கை அனர்த்த பாதிப்பு;

# நிவாரணம் வழங்கல் தொடர்பில் பிரதமர் அலுவலகத்தில் கலந்துரையாடல்





இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவி வழங்குவது தொடர்பிலான விசேட கலந்துரையாடலொன்று பிரதமர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான ருவன் விஜேவர்தன, சாகல ரத்நாயக்க, சமன் ரத்னபிரிய உள்ளிட்டவர்களின் தலைமையில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இந்த சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமாரும் கலந்துக் கொண்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவது தொடர்பிலும், உதவித் திட்டம் சரியான முறையில் பகிர்ந்தளிக்கப்படுவது தொடர்பிலும் எஸ்.ஆனந்தகுமார் இதன்போது கருத்து வெளியிட்டுள்ளார்.

இந்த நிலையில், இரத்தினபுரி மாவட்டத்திற்கு உதவி வழங்குவது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி அதிக கவனம் செலுத்தியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமாரின் பங்குப் பற்றுதலுடன் இந்த உதவிகள் கையளிக்கப்படவுள்ளன.

இதேவேளை, தமிழக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய பொதிகளையும், இரத்தினபுரி மாவட்ட மக்களுக்கு பகிர்ந்தளிப்பது தொடர்பில் எஸ்.ஆனந்தகுமார், உரிய தரப்பினருடன் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார்.

காரைதீவில் இடம்பெற்ற

# பாலின வன்முறை தடுப்பு செயலணி குழுக்கூட்டம்







நாட்டில் ஆங்காங்கே பல்வேறு பாலின வன்முறை சம்பவங்கள் பதிவாகிவரும் சூழ்நிலையில் காரைதீவு பிரதேச செயலக சிறுவர், பெண்கள் அபிவிருத்தி பிரிவு ஏற்பாடு செய்திருந்த காரைதீவு பிரதேச பாலின வன்முறை தடுப்பு செயலணி குழுக் கூட்டம் காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் காரைதீவு உதவி பிரதேச செயலாளர் எஸ். பார்த்தீபன், காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லீமா வஸீர், காரைதீவு பிரதேச சபை செயலாளர், மதுவரி திணைக்கள உத்தியோகத்தர், சிறுவர் நன்நடத்தை திணைக்கள உத்தியோகத்தர், தொழில் அலுவலக உத்தியோகத்தர்,சிவில் அமைப்புக்களில் இருந்தும் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பிரதேசத்தில் சிறுவர் மற்றும் பெண்கள் எதிர் நோக்கும் பல்வேறு பட்ட பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

# கிழக்கு மாகாண புதிய சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் பதவியேற்பு



**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

கிழக்கு மாகாண புதிய சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபராக நியமனம் பெற்றுள்ள ராஜித சிறி தமிந்த நேற்று (2) காலை மட்டக்களப்பிலுள்ள கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் பணிமனையில் கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, கந்தளாய் பிராந்தியங்களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் உட்பட மாகாண உய ர்பொலிஸ் அதிகாரிகள் அடங்லாக சர்வமத தலைவர்களும் கலந்து கொண்டனர். பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதையையும் புதிய சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் ஏற்றுக் கொண்டார்.

புதிய பிரதி பொலிஸ் மாஅதிபர் தென்மாகாணத்தில் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மூன்று நாட்கள் வரிசையில் நின்றவர்களுக்கு சமயல் எரிவாயு



**மட்டக்களப்பு விசேட நிருபர்**

மட்டக்களப்பு பயனியர் வீதி ஆல மரத்தின் கீழ் மூன்று நாட்கள் தொடர்ச்சியாக சமையல் எரிவாயு வழங்கக் கோரி இரவு பகலாக வரிசையில் நின்று கொண்டிருக்கின்றனர்.

நேற்று முன்தினம் பாராளுமன்ற உறுப்பினர்களான சாணக்கியன் இராசமாணிக்கம் மற்றும் கோவிந்தன் ஜனா கருணாகரன் தொடர்ச்சியாக மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரனிடம் வரிசையில் நின்ற மக்களுக்கான தீர்வைக் கோரி வலியுறுத்தி வந்தனர்.

அதற்கிணங்க நேற்று (02) மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி ஹெட்டியாராச்சி உள்ளிட்ட பொலிசார் முன்நிலையில் ஏற்கனவே பொலிசாரினால் வழங்கப்பட்ட டோக்கன்களுக்கு எரிவாயு சிலிண்டர்களை விற்பனையாளர் வழங்கினர். வரிசையில் உள்ள ஏனையோர் டோக்கன்களை வழங்குமாறு கோரி அடம்பிடித்துக் கொண்டிருந்தனர்.

கிழக்கு அரசாங்க நிறுவனங்களில்

# வீட்டுத்தோட்டத்தை மேற்கொள்ள கிழக்கு ஆளுநர் அறிவுரை



**தம்பலகாமம் குறூப் நிருபர்**

கிழக்கு மாகாண சபையிலுள்ள அனைத்து அரச நிறுவனங்களிலும் வீட்டுத்தோட்டம் அமைக்குமாறு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் உத்தரவிட்டுள்ளார்.

மாகாண விவசாய அமைச்சின் தலையீட்டில் இதனை ஒருங்கிணைக்குமாறு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஐ.கே.ஜி. முத்துபண்டாவுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட விவசாயப் போதனாசிரியர்களுடனான சந்திப்பில் நேற்று முன்தினம் (1) இடம்பெற்ற விசேட சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் உரையாற்றிய ஆளுநர் வரவிருக்கும் உணவு நெருக்கடியை எதிர்கொள்ள விவசாயிகளுக்கு தெளிவுபடுத்தி பயிர்ச்செய்கை தோட்டங்களை உருவாக்குமாறும் விவசாயப் பயிற்றுவிப்பாளர்களுக்கு ஆளுநர் இதன் போது அழைப்பு விடுத்தார்.

விவசாய ஆலோசகர்களாகிய உங்களுக்கு ஒரு பெரிய பொறுப்பு உள்ளது. அதாவது, விரைவில் அதை செய்ய ஊக்குவியுங்கள்.

# அனைத்து அரச அதிகாரிகளும் விவசாயம் செய்ய வேண்டும்

அமைச்சர் ரொஷான் ரணசிங்க



நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக எதிர்காலத்தில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் உள்ளதாக நிபுணர்கள் கூறியுள்ள சூழலில், இந்தச் சூழலைச் சமாளிக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து பொறுப்புடன் செயல்பட வேண்டும்.

அனைத்து அரச உத்தியோகத்தர்களும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டு மக்களை ஊக்குவிப்பது மிகவும் காலத்துக்குரியது என அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சில் மனிதவள மற்றும் வேலை வாய்ப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அனுஷா கோகுல மற்றும் அதிகாரிகள் குழுவுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் அமைச்சர் ரொஷான் ரணசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது,

இப்பணியில் நாட்டின் இளைஞர்கள் நேரடியாகப் பங்களிப்பதற்கான முறையான வேலைத்திட்டத்தை உருவாக்க இளைஞர் சமூகத்திற்குப் பொறுப்பான அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

15 முதல் 29 வயதுக்குட்பட்ட சுமார் 5 மில்லியன் இளைஞர்களைக் குறிவைத்து புதிய வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதன் மூலம் தற்போதைய நெருக்கடியிலிருந்து விடுபட்டு எதிர்கால அனர்த்தங்களிலிருந்து நாட்டைக் காப்பாற்றுவது மிகவும் பொருத்தமானது.

1.7 மில்லியனுக்கும் அதிகமான அரச ஊழியர்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழ்நிலையில், அவர்கள் வீட்டில் இருந்தே வேலை செய்ய வேண்டிய நாட்களில், வீட்டுப் பயிர்ச்செய்கைக்குத் தேவையான சூழலை உருவாக்குவது அவசியம்.



மாளிகாவத்தை சிறுநீரக மாற்று தேசிய நிறுவனத்திற்கு உருக்கு தளபாடங்கள் வழங்கும் நிகழ்வு புதன்கிழமை (1) மாலை நிலையத்தின் வைத்தியர் டீ.சீ.வீரசிங்கவிடம் புரவலர் ஹாசிம் உமர் கையளிப்பதையும் நிறுவனத்தின் ஏனைய உத்தியோகத்தர்களையும் படத்தில் காணலாம்.

# மட்டக்களப்பில் பகலிலும் எரியும் மின்விளக்குகள்

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

நாட்டில் மின்சாரத் தட்டுப்பாட்டினாலும்,மின்தடையினாலும் மக்கள் சொல்லொணா அசௌகரியங்களை அனுபவித்து வரும் நிலையில் மட்டக்களப்பு கல்முனை நெடுஞ்சாலையில் கல்லடி பிரதேசத்தில் பகல் நேரத்திலும் வீதி மின்விளக்குகள் எரிந்த வண்ணமுள்ளன.

குறித்த செய்தி எழுதுகின்ற காலை 7.30 மணிவரையும் வீதி மின்விளக்குகள் எரிந்து கொண்டிருப்பதை அவதானிக்க முடிந்தது.

பொருளாதார நெருக்கடி முழுத்தேசத்தையும் வாட்டி வதைக்கின்ற நிலையில்



இவ்வாறு மின்சார வீண்விரயத்தை சகிக்க முடியவில்லை என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இருளுக்கே ஒளியூட்ட இரவில் மின்சாரமில்லை.ஆனால் இங்கு பட்டப்பகலிலும் சூரிய வெளிச்சத்தோடு போட்டிபோட்டு எரிந்து கிடக்கின்றன வீதி மின்விளக்குககள்.

# நிலக் கடலை அறுவடை

**தம்பலகாமம் குறூப் நிருபர்**

திருகோணமலை மாவட்டம்,தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பாலம்போட்டாறு, பத்தினிபுர கிராமத்தில் நிலக் கடலை அறுவடை நிகழ்வு நேற்று (02) இடம்பெற்றது.

குறித்த அறுவடை நிகழ்வை தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி பிரதம அதிதியாக கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

சௌபாக்யா உற்பத்திக் கிராமம் மூலமாக தெரிவு செய்யப்பட்டு சௌபாக்யா சங்கம் மூலமாக நிலக் கடலை, நிலக்கடலை அல்வா போன்ற உற்பத்தி பொருட்களும் இதன் போது சந்தைப்படுத்துவதற்காக பகிர்ந்தளிக்கப்பட்டது.

தற்போதைய நெருக்கடிக்கு மத்தியில் ஒவ்வொருவரும் தங்களது வீடுகளில் வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கையில் ஈடுபட வேண்டும்.

உணவுப் பற்றாக்குறை இல்லாதளவுக்கு ஒரு அங்குலமேனும் மரவள்ளி தடியையாவது நட வேண்டும் என பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி இதன் போது தெரிவித்தார்.


திகதி 01.06.2022 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4773
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,750,070.00
ஆங்கில எழுத்து D வெற்றி இலக்கங்கள் 2 2 4 9 5 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,729,016.00

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 803
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,984,660.00
P 14 16 26 53
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 112,648,944.80

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1251
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,438,940.00
வெற்றி இலக்கினம் தனுசு வெற்றி இலக்கங்கள் 9 6 7 4 7 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,439,055.60

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3015
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,658,020.00
ஆங்கில எழுத்து D வெற்றி இலக்கங்கள் 52 53 54 63
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 66,356,225.36

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0082
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,291,800.00
இலக்கினம் மகரம் வெற்றி இலக்கங்கள் 07 42 44 62
விசேட இலக்கினம் மகரம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,646,243.00

கோடி 25+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1121
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,718,000.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 254,126,810.00
E 23 36 40 42 50
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# சூரா பாத்திஹாவின் மகத்துவம் அறிவோம்



உலகம் இருக்கும் வரையும் பூமியில் பிறக்கும் ஒவ்வொருவரதும் இம்மை மறுமை வாழ்வின் விமோசனத்திற்கும் சுபீட்சத்திற்கும் நேர்வழிகாட்டும் இறைவழிகாட்டுதல் தான் அருள்மறையாம் அல் குர்ஆன் ஆகும். இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரமாக விளங்கும் இக்குர்ஆன் 6666 வசனங்களைக் கொண்டுள்ளது. இந்த வசனங்கள் சிறியதும் பெரியதுமாக 114 அத்தியாயங்களாகவும் 30 ஜுஸுவுகளாகவும் அமையப் பெற்றுள்ளது.

சர்வ வல்லமை படைத்த அல்லாஹ்தஆலா மனிதனின் ஈருலக வாழ்வுக்கு தேவையான அத்தனை வழிகாட்டல்களையும் உள்ளடக்கியதாக இக்குர்ஆனை வகுத்தளித்துள்ளான். இந்த அருள்மறையின் முதலாவது அத்தியாயம் தான் சூரா பாதிஹாவாகும். இதன் பொருள் தோற்றுவாய், ஆரம்பம், தொடக்கம் எனப்படும். அல் குர்ஆனே இவ்வத்தியாயத்தை உம்முல் கிதாப் (குர்ஆனின் அன்னை) என்றுள்ளது.

இக்குர்ஆன் 114 அத்தியாயங்களைக் கொண்டுள்ள போதிலும் அவை அனைத்துக்கும் தொடக்க அத்தியாயமாக சூரா பாத்திஹாவையே அல்லாஹ் அமைத்திருக்கின்றான். இதன் ஊடாக இவ்வத்தியாயத்தின் முக்கியத்துவமும் சிறப்பும் தெளிவாகிறது. அதேநேரம் இவ்வத்தியாயம் முழுக் குர்ஆனுக்குமான முன்னுரையாக விளங்குகின்றது. அதாவது முழுக் குர்ஆனும் உள்ளடக்கியுள்ள இறைத்தூது இவ்வத்தியாயத்தின் ஏழு வசனங்கள் ஊடாக எடுத்தியம்பப்படுள்ளது.

இவ்வத்தியாயத்தின் சிறப்பை அல் குர்ஆனின் ஹிஜ்ர் என்ற அத்தியாயம், '(நபியே) நிச்சயமாக நாம் உங்களுக்கு திரும்பத் திரும்ப ஓதக்கூடிய ஏழு வசனங்களை (உடைய அல் ஹம்து எனும் அத்தியாயத்தை)யும் இந்த மகத்தான குர்ஆனையும் அளித்திருக்கின்றோம்' ( 15: 87) என்று குறிப்பிட்டிருக்கிறது..

இவ்வத்தியாயம் குறித்து நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடும் போது, இது குர்ஆனின் அன்னை என்றும் திரும்பத் திரும்ப ஓதப்படும் ஏழுவசனங்களைக் கொண்டது என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

**(ஆதாரம்: முஸ்னத் அஹ்மத்)**

மேலும் இவ்வத்தியாயத்திற்கு பல பெயர்கள் உள்ளன. அவற்றில் உம்முல் கிதாப் (குர்ஆனின் தாய்), அல் ஹம்த் (புகழ்), அஷ்ஷிஃபா (நிவாரணி), அல் வாகியா (பாதுகாப்பு அளிப்பது), அல் காபிஃயா (போதுமானது), அஸாஸுல் குர்ஆன் (குர்ஆனின் அடிப்படை) என்ற பெயர்களும் உள்ளன.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், தௌராத் வேதத்திலோ, இன்ஜீல் வேதத்திலோ சூரா பாத்திஹா போன்ற அத்தியாயத்தை அல்லாஹ் இறக்கியருளவில்லை. அது திரும்பத் திரும்ப ஓதப்படும் ஏழு வசனங்களாக இருப்பதோடு இறைவனுக்கும் அவனது அடியாருக்கும் இடையில் இரு பாதியாகப் பிரிக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

**(ஆதாரம்: திர்மிதி, நஸாயி)**

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் ஜிப்ரீல் (அலை) அவர்களுடன் இருக்கும் போது வானவரொருவர் வந்து, உங்களுக்கு முன்னர் எந்தவொரு இறைத்தூதருக்கும் வழங்கப்பெறாத இரு பேரொளிகள் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நற்செய்தியைப் பெற்றுக்கொள்ளுங்கள். அவற்றில் ஒன்று அல் பாத்திஹா அத்தியாயம் மற்றையது அல் பகராவின் இறுதி வசனங்களுமே அவை. அவற்றிலுள்ள எதை நீங்கள் ஓதினாலும் அது உங்களுக்கு வழங்கப் பெறாமல் இருப்பதில்லை' என்றுள்ளார்.

**(ஆதாரம்: முஸ்லிம்)**

ஆகவே இவ்வத்தியாத்தை ஒட்டுமொத்தமாக எடுத்து நோக்கும் போது, அது ஏழு வசனங்களைக் கொண்டுள்ள போதிலும் அவை நான்கு பிரதான பகுதிகளாக அமைந்திருப்பதை அவதானிக்கலாம்.

**மர்லின் மரிக்கார்...**

அதாவது அத்தியாயத்தின் ஆரம்பமே அல்லாஹ்வைப் புகழ்ந்தபடியே ஆரம்பமாகின்றன. அதனைத் தொடர்ந்து அல்லாஹ்வின் அர்ரஹ்மான், அர்ரஹீம் என்ற இரண்டு முக்கிய பண்புகள் எடுத்துக்கூறப்பட்டுள்ளன. அப்பண்புகள் அவனுக்கே உரியனவாகும். அவன் இறுதிநாளின் அதிபதியாக இருக்கின்றான்.

இவ்வாறு அவனைப் புகழ்ந்தபடி ஆரம்பமாகும் இவ்வத்தியாயம் அவனது இரு முக்கிய பண்புகளையும் சிறப்பையும் கூறியபடி வணங்குவதற்கும் உதவி தேடுவதற்கும் தகுதியானவன் என்பதை உறுதிப்படுத்துகிறது. அதனைத் தொடர்ந்து நேர்வழியைக் காட்டுமாறும் அந்த வழி நீ அருள் புரிந்தவர்களின் வழியே அன்றி உனது கோபத்திற்கு உள்ளானவர்களதோ, வழி தவறியவர்களதோ வழி அல்ல என்றபடி அமைந்திருக்கின்றது.

இது முற்றிலும் அல்லாஹ் வகுத்தளித்த அத்தியாயமான போதிலும் அதன் ஒழுங்கமைப்பை அவன், தான் படைத்து பரிபாலிக்கும் மனிதன் தன்னை (அல்லாஹ்) புகழ்ந்து அவனிடம் உதவி தேடும் ஒழுங்கமைப்பில் மனிதனின் குரலின் வடிவமைப்பில் ஒழுங்கமைத்திருக்கின்றான்.

இதன் ஊடாக ஒவ்வொரு மனிதனுக்கும் அவன் ஒரு முக்கிய செய்தியை வழங்கியுள்ளான். அது தான் அல்லாஹ்விடம் உதவி தேடும் ஒழுங்காகும்.

மனிதன் தேவைகள் எதிர்ப்புகள், அபிலாஷைகள் நிறைந்தவனாவான். அவற்றுக்கு எல்லை, வரையறை கிடையாது. என்றாலும் அவை அனைத்தையும் விட முக்கியமானதும் பிரதானதுமானதும் அல்லாஹ்வின் உதவியாகும். அதனால் வாழ்வின் அனைத்து தேவைகள் எதிர்பார்ப்புகளையும் விடவும் இறை உதவியையே இலக்காகவும் இலட்சியமாகவும் அமைத்துக்கொள்ள வேண்டும். அந்த உதவியை அடைந்து கொள்ளும் போது மனித வாழ்வு நிச்சயமாக அமைதியாகவும் இன்பம் நிறைந்தாகவும் விமோசனம் மிக்கதாகவும் அமைந்துவிடும் என்ற செய்தியை இந்த அத்தியாயம் முன்வைத்திருக்கின்றது.

மேலும் இவ்வத்தியாயத்தை சிறப்புகளும் மகத்துவங்களும் நிறைந்ததாக அல்லாஹ் ஆக்கி வைத்திருக்கின்றான். அந்த வகையில் இவ்வத்தியாயம் கடமையான ஐவேளை தொழுகையிலும் தினமும் ஓதப்பட வேண்டியதாகும். இவ்வத்தியாயம் ஓதப்படாவிட்டால் தொழுகை நிறைவேறாது என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். **(ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)**

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ் கூறியதாக பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்கள். 'தொழுகையை நான் இருபாகங்களாகப் பிரித்துள்ளேன். அது எனக்கும் என் அடியானுக்கும் பாதிபாதியாகும். என் அடியான் எதைக் கேட்பானோ அதை நான் கொடுப்பேன். என் அடியான் அல் ஹம்து லில்லாஹிரப்பில் ஆலமீன் என்றால் அல்லாஹ், என் அடியான் என்னைப் புகழ்ந்து விட்டான் என்பான். அர்ரஹ்மானிர்ரஹீம் என்றதும் அல்லாஹ், என் அடியான் என்னை நல்ல வார்த்தைகளால் மகிழச் செய்தான் என்பான். மாலிகி யவ்மித்தீன் என்றதும் அல்லாஹ், என் அடியான் என்னைப் பெருமைப்பட வைத்துவிட்டான் என்பான். இய்யாக நஃபுது வஇய்யாக நஸ்தஈன் என்றதும் அல்லாஹ், இது எனக்கும் என் அடியானுக்கும் மத்தியில் உள்ளது. என் அடியான் எதைக் கேட்பானோ நான் அதைக் கொடுப்பேன் என்பான். இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் ஸிராத்தல்லதீன அன்அம்த அலைஹிம் ஒயிரில் மக்ளுபி அலைஹிம் வளல்லாலீன் என்றதும் அல்லாஹ், இது என் அடியானுக்குரியது. அவன் கேட்பதை நான் கொடுப்பேன் என்பான் .

**(ஆதாரம்: முஸ்லிம், அபூதாவூத், அஸ்மத், நஸாயி)**

இதன்படி இவ்வத்தியாயத்தின் முக்கியத்துவத்தை இந்நபிமொழியும் தெளிவுபடுத்துகின்றது. தொழுகையின் போது இவ்வத்தியாயத்தின் ஒவ்வொரு வசனத்தையும் ஓதும் போது அதற்கு உடனுக்குடன் பதிலளிக்கக்கூடியவனாக இருக்கின்றான் அல்லாஹ். இது எவ்வளவு பெரிய பாக்கியம். அதனால் அவனது பதிலளிப்புக்கு ஏற்ப ஓதுதலை அமைத்துக் கொள்ள வேண்டும்.

ஐவேளை தொழுகையின் 17 ரக்அத்களிலும் இவ்வத்தியாயத்தை ஓதுவது அவசியம். இவற்றை விடவும் ஸுன்னத்தான தொழுகைகளிலும் இவ்வத்தியாயம் ஓதப்படும். இதன் ஊடாக இந்த ஏழு வசனங்களும் தினமும் திரும்பத் திரும்ப ஓதப்படுகின்றன.

இவ்வாறு ஓதப்படுவதன் பயனாக இவ்வத்தியாயம் மனனமாகிவிடும். அதன் பொருளறிந்த நிலையில் தினமும் ஓதும் போது இவ்வசனங்களின் இறைத்தூது ஓதுபவரில் நிச்சயம் மாற்றங்களையும் தாக்கங்களையும் ஏற்படுத்தும். இவ்வத்தியாயமானது இஸ்லாமிய கொள்கையின் அடித்தளமாக விளங்குவதோடு மனித உணர்வுகளதும் ஆர்வங்களதும் அடிப்படையையும் கொண்டிருக்கின்றது.


மேலும் இவ்வத்தியாயம் நோய் நிவாரணியாகவும் விளங்குகிறது. நபி (ஸல்) அவர்களது காலத்தில் ஸஹாபாக்கள் சிலர் ஒரு பயணத்தில் ஈடுபட்டிருந்த போது தேள் கொட்டிய குலத்தலைவர் ஒருவருக்கு இவ்வத்தியாயத்தை ஓதியதும் அவர் குணமடைந்துள்ளார். **(ஆதாரம்: புகாரி)**

இவ்வாறு மகத்துவங்களையும் சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது தான் இவ்வத்தியாயம். அவற்றை அறிந்து உணர்ந்து செயற்படும் போது அதன் பிரதிபலன்களை அல்லாஹ்விடம் அடைந்து கொள்ள முடியும். அதனால் இவ்வத்தியாயத்தை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள முயற்சிப்போம்.

## ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# அல்-குர்ஆனில் நவீன அறிவியல் உண்மைகள்



மனித அறிவால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நவீன அறிவியல் உண்மைகள் பல இற்றைக்கு 1400 வருடங்களுக்கு முன்னர் அல் குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளன. வானங்கள், பூமி உள்ளிட்ட அனைத்து படைப்புகள் குறித்தும் இக்குர்ஆன் குறிப்பிட்டிருக்கின்றது. இதற்கு அல்குர்ஆனின் பல வசனங்களை உதாரணமாக எடுத்துக்கூறலாம். அந்த வகையில் அர்ரஹ்மான் என்ற அத்தியாயத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

'அவன் இரு கடல்களையும் ஒன்றோடொன்று சங்கமிக்கச் செய்தான். ஆயினும் அவ்விரண்டுக்குமிடையே ஒரு தடுப்பு இருக்கிறது. அதனை அவை மீறுவதில்லை'

***(அர்ரஹ்மான் : 19,20)***

இரு நீர் நிலைகள் ஒன்றையொன்று சங்கமிக்கின்ற போது அவை கலந்து ஒன்றாக மாறாது என்பதனையும் விஞ்ஞானம் இப்போது தான் கண்டுபிடித்து இருக்கின்றது. அதனால் நதியும் கடலும் கலக்கும் போது மேற்பரப்பு உவர் நீராகவும், கீழ் பரப்பு நன்னீராகவும் இருப்பதனையும் இரண்டிற்கும் இடையே ஒரு வெண்ணிறக் கோடு இருப்பதையும் கூட நவீன விஞ்ஞானம் ஏற்றுக்கொண்டுள்ளது.

மேலும் உலகில் படைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு படைப்பும் சோடி சோடியாகவே படைக்கப்பட்டிருப்பதாக அல்லாஹ் சுட்டிக்காட்டியுள்ளான். இதனை அல் குர்ஆன் இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றது.

'இவர்களையும், பூமியில் முளைக்கும் புற்பூண்டுகளையும் சோடி சோடியாகப் படைத்து இவர்கள் (இது வரையில்) அறியாத மற்றவைகளையும் படைக்கும் (இறைவன்) மிகத் தூயவன்'. ***( யாஸீன் : 36)***

மனித இனம் மற்றும் மிருகங்கள் பறவைகள் மாத்திரமன்றி அணுவிலும் தாவங்கள், புற்பூண்டுகளிலும் கூட சோடியமைப்பு காணப்படுவதை இன்றைய விஞ்ஞானம் நிரூபிக்கின்றது.

இதேவேளை கருப்பையில் வளரும் சிசு குறித்து கூட அல் குர்ஆன் அன்றே குறிப்பிட்டிருக்கின்றது. அதாவது, 'மனிதனை நாம் களிமண்ணின் சத்திலிருந்து படைத்தோம். பின்னர் அவனை ஒரு பாதுகாப்பான இடத்தில் (செலுத்தப்பட்ட) விந்தாக ஆக்கினோம். பிறகு அந்த விந்தினை இரத்தக் கட்டியின் வடிவத்தில் அமைத்தோம். பின்னர் அந்த இரத்தக் கட்டியை மாமிசப் பிண்டமாக ஆக்கினோம். பிறகு அந்த மாமிசப் பிண்டத்தை எலும்புகளாக ஆக்கினோம். பின்னர் அவ் எலும்புகளுக்கு மாமிசத்தைப் போர்த்தினோம். பிறகு அதனை முற்றிலும் வேறொரு படைப்பாக வளரச் செய்தோம். பெரும் அருட்பேறுகளுடையவனாகிய அல்லாஹ் படைப்பாளர்களில் எல்லாம் மிக அழகான படைப்பாளன்' ஆவான்.

***( அல்முஃமினூன் : 1214)***

இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றது. மனிதனின் இந்திரியமும் பெண்ணின் முட்டையும் கருப்பையில் சேர்ந்தது முதல் ஒரு முழு நிறைவான குழந்தையாகப் பிறக்கும் வரையும் நிகழும் வளர்ச்சிகளை இன்றைய நவீன அறிவியல் கண்டுபிடித்து உறுதிப்படுத்தி இருக்கின்றது.

இவ்வாறு நவீன விஞ்ஞானம் கண்டுபிடித்துள்ள பல விடயங்கள் தொடர்பிலான உண்மைகளை அல் குர்ஆன் அன்றே எடுத்தியம்பி விட்டது. ஆகவே விஞ்ஞானம் அறிவியல் உண்மைகளை அல் குர்ஆனில் நிழலில் நோக்குவோம். படிப்பினைகள் பெறுவோம்.

**ஏ.எம். முஹம்மத் ஸப்வான்**
**சீனன் கோட்டை, பேருவளை.**

# இஸ்லாத்தின் பார்வையில் சிரிப்பு

மனிதனுக்கு சிரிக்கும் தன்மையை இறைவன் தான் ஏற்படுத்தி கொடுத்திருக்கின்றான். இதனை அல் குர்ஆன் எடுத்தியம்பியுள்ளது. இது தொடர்பில் அல் குர்ஆன் இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றது. 'அவனே சிரிக்க வைக்கிறான். அழவும் வைக்கிறான். அவனே மரணிக்கச் செய்கிறான். உயிர்ப்பிக்கவும் செய்கிறான்.

( 53:43) என்று குறிப்பிட்டுள்ளது.

அதேநேரம் மறுமை நாளில் நல்லவர்களுக்கு இறைவன் அளிக்கும் பாக்கியங்களில் ஒன்று சிரிப்பாக உள்ளது. அந்நாளில் கெட்டவர்களின் முகங்கள் கடுகடுவென சுருங்கிய நிலையில் இருக்கும். அவர்களுக்குச் சிரிப்பு என்ற பாக்கியத்தை இறைவன் தடுத்து விட்டான். சொர்க்கவாசிகள் சுவனத்தில் அடையும் இந்த இன்பத்தை இந்த உலகத்தில் நாம் ஏன் தவற விட வேண்டும் கருதுவார்கள்.

'அந்நாளில் சில முகங்கள் ஒளி வீசும். மகிழ்ச்சியுடன் சிரித்துக் கொண்டிருக்கும். அந்நாளில் மேலும் சில முகங்கள் மீது புழுதி படிந்திருக்கும். அதைக் கருமை மூடியிருக்கும். அவர்களே (ஏக இறைவனை) மறுப்போரான பாவிகள்.

**(அல் குர்ஆன் 80:32)**

அந்நாளில் சில முகங்கள் மலர்ந்து இருக்கும். தமது இறைவனைப் பார்த்துக் கொண்டிருக்கும். சில முகங்கள் அந்நாளில் சோகமயமாக இருக்கும். தமக்குப் பேராபத்து ஏற்படும் என அவை நினைக்கும்.

**(அல் குர்ஆன் 75:22)**

மறுமை நாளின் நிகழ்வுகளில் ஒன்றை அல் குர்ஆன் இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றது. அந்த நாளில் மலர்ந்த முகத்துடன் சிரித்தபடி இருப்பதற்கான பாக்கியம் கிடைக்கப்பெறுவது மாபெரும் அருளாகும். அந்த அருளை அடைந்து கொள்வதை இலக்காகக் கொண்டு செயற்படுவது இன்றியமையாத விடயமாகும்.

மேலும் இறைத் தூதர் சுலைமான் (அலை) அவர்கள், எறும்பு பேசியதைக் கேட்டு சிரித்துள்ளதாக அல் குர்ஆன் கூறுகிறது. 'அவர்கள் எறும்புப் புற்றின் அருகே வந்த போது 'எறும்புகளே! உங்கள் குடியிருப்புகளுக்குள் நுழையுங்கள்! ஸுலைமானும் அவரது படையினரும் அறியாத நிலையில் உங்களை மிதித்து விடக் கூடாது' என்று ஓர் எறும்பு கூறியது. அதன் கூற்றினால் (ஸுலைமான்) புன்னகை சிந்தி சிரித்தார். 'என் இறைவா! என் மீதும், எனது பெற்றோர் மீதும் நீ செய்த அருட்கொடைக்கு நான் நன்றி செலுத்தவும், நீ திருப்தியடையும் நல்லறத்தைச் செய்யவும் எனக்கு உதவுவாயாக! உனது நல்லடியார்களில் என்னையும் உனது அருளால் சேர்ப்பாயாக!' என்றார். **(அல் குர்ஆன் 27:18)**

பிறரைச் சந்திக்கும் போது மலர்ந்த முகத்துடன் இருப்பதும் நல்ல காரியம் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஒரு தடவை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'உனது சகோதரனை மலர்ந்த முகத்துடன் நீ சந்திப்பது உட்பட எந்த ஒரு நல்ல காரியத்தையும் அற்பமாக நினைத்து விடாதே! என்று கூறியுள்ளார்கள். (ஆதாரம்: முஸ்லிம்).

மேலும் இஸ்லாத்தைக் கடைப்பிடிப்பதிலும் இறைவனுக்குப் பயந்து நடப்பதிலும் நபி (ஸல்) அவர்களை யாராலும் மிஞ்சிவிட முடியாது. உன்னதமான ஆன்மீகத் தலைவராகத் திகழ்ந்த நபி (ஸல்) அவர்கள் சிரித்த முகத்துடனே வாழ்க்கையைக் கழித்திருக்கிறார்கள்.

ஒரு தடவை ஜரீர் பின் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள், 'நான் இஸ்லாத்தைத் தழுவிய நாளிலிருந்து அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் என்னை விட்டு மறைந்து (மறுபடியும்) என்னைக் கண்டால் அவர்கள் சிரிக்காமல் இருந்ததில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

**(ஆதாரம்: முஸ்லிம்)**

அதேநேரம் நபி (ஸல்) அவர்களின் காலத்தில், அப்துல்லாஹ் என்ற நபித்தோழர் நபியவர்களுக்கு சிரிப்பூட்டிக் கொண்டே இருந்துள்ளார். சிரிப்பூட்டியதற்காக இவரை நபி (ஸல்) அவர்கள் கண்டிக்கவில்லை. நபி (ஸல்) அவர்களின் காலத்தில் அப்துல்லாஹ் என்றொருவர் இருந்தார். அவர் கழுதை என்ற புனைப்பெயரால் அழைக்கப்பட்டார். அவர் நபி (ஸல்) அவர்களை சிரிக்க வைப்பார்' என்று உமர் (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள்.

**(ஆதாரம்: புகாரி)**

இவ்வாறு சிரிப்பு தொடர்பில் பல நபிமொழிகள் உள்ளன. ஆனால் பிறரை சிரிக்க வைப்பதற்காக நடக்காத நிகழ்வுகளையெல்லாம் நடந்ததாகக் கூறுவது இஸ்லாத்தில் தடைசெய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஒரு தடவை நபி(ஸல்) அவர்கள், ' எவன் (பிற) கூட்டத்தினரை சிரிக்க வைப்பதற்காக பொய்யான செய்தியைக் கூறுகிறானோ அவனுக்கு கேடு தான். அவனுக்கு கேடு தான்' என்று குறிப்பிட்டுள்ளார்கள். **(ஆதாரம்: திர்மிதி)**

ஆகவே சிரிப்புக்கு இஸ்லாம் அளித்துள்ள சிறப்பையும் முக்கியத்துவத்தையும் எவராலும் இலகுவாகப் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும். அதனால் இஸ்லாமிய வழிகாட்டல்களுக்கு ஏற்ப சிரிப்பை அமைத்துக் கொள்வதில் கவனம் செலுத்துவது இறைவிசுவாசியின் பொறுப்பாகும்.

**அபூ அம்மார் ...**



# புலமைக் கதிர்

தரம்-5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

**I. பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

கண்ணே எழுந்திடுவாய்
கண்மணியே கண்மலர்வாய்
சின்னஞ்சிறு மலரே
துயில் நீங்கி நீ எழுவாய்

காகம் கரையுது பார்
காலையும் ஆனது பார்
சேவல் கூவுது பார்
சின்னக்குயில் பாடுது பார்

1. இப்பாடல் ஒரு நாளின் எவ்வேளையைக் குறிக்கின்றது?

……………………………………………………………………………………

2. சின்னஞ்சிறு மலரே என இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது யாரை?

……………………………………………………………………………………

3. பாடலில் கூறப்படும் ‘கண் மலர்வாய்’ என்ற மரபுத் தொடரின் கருத்து யாது?

……………………………………………………………………………………

4. பாடலிலுள்ள சினைப்பெயர் ஒன்றினை குறிப்பிடுக.

……………………………………………………………………………………

5. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள முன்னிலை ஒருமை பெயர்ச்சொல் யாது?

……………………………………………………………………………………

6. ஒத்த கருத்து தருக.
i. துயில் - ………………………… ii. கண் - ……………………….

**II. ஒருமை வாக்கியங்களை பன்மை வாக்கியங்களாக மாற்றி எழுதுங்கள்**

7. நான் பாடம் படித்தேன்.

……………………………………………………………………………………

8. காகம் கூடு கட்டியது ………………………………………………………

9. அவன் பந்து அடித்தான்.

……………………………………………………………………………………

**III. ஆண்பால் சொற்களுக்கு பெண்பால் சொற்களை எழுதுக.**

10. குறவன் - ……………………………………………………………………

11. உழவன் - ……………………………………………………………………

**IV. சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுவோம்.**

12. சென்ற / சிறப்பு / கற்றவருக்குச் / இடமெல்லாம்

……………………………………………………………………………………

13. இன்று / பெய்யும் / மழை / காலையில் / இடியுடன்கூடிய

……………………………………………………………………………………

**V. இளமைப் பெயர்களை எழுதுக.**

**மீன் ………………………………**

**தென்னை ………………………**

**VI. பழமொழிகளைப் பூர்த்தி செய்வோம்**

16. கந்தையானாலும் ……………………………………………………………

17. பேராசை பெரு ……………………………………………………………

**VII. பின்வரும் சிங்கள வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.**

18. i. அபி செல்லம் கரமு - …………………………………………………

ii. மெயா மகே தாத்தா - …………………………………………………

19. கொடுக்கப்பட்டுள்ள உருவங்களின் பெயர்களை ஆங்கிலத்தில் எழுதுக.





i. ……………………………… ii. ………………………………

20. இந்த பொருட் தொகுதியில் ¾ பங்கு எவ்வளவு?……………………………



**21. அட்டவணையை நிரப்புங்கள்**

| | கிலோகிராம் | 500g எண்ணிக்கை | 250g எண்ணிக்கை |
|---|---|---|---|
| i. | 1kg | 2 | 4 |
| ii. | 3kg | ………………… | ………………… |
| iii. | 4kg 500g | ………………… | ………………… |

22. முந்திய பிந்திய எண்களை எழுதுக.

i. ……………….. 1000 ………………………

ii. ………………. 2500 ……………………

**23. திசைகளைக் குறிப்பிடுக.**



i. வீட்டுக்கு எத்திசையில் கோழி உள்ளது? ………………………………

ii. முயலுக்கு எத்திசையில் பிள்ளை நிற்கிறான்? ……………………………

iii. கோழிக்கு எத்திசையில் மரம் உள்ளது? ………………………………

24. 80 மாம்பழங்களை நால்வருக்கு சமமாக பகிர்ந்தால் ஒருவருக்கு எத்தனை மாம்பழங்கள் கிடைக்கும்?


……………………………………………………………………………………

25. 50 m ல் உள்ள cm களின் எண்ணிக்கை யாது?

……………………………………………………………………………………

26. சமபக்க முக்கோணத்திலுள்ள சமச்சீர் அச்சுக்கள் எத்தனை?

………………………………………




27. ரூபாய் 50 ல் உள்ள 5 ரூபாய்களின் எண்ணிக்கை யாது?

……………………………………………………………………………………

28. ரூ. 130.00 பெறுமதியான பால்மா பக்கற் ஒன்றினை வாங்க கொடுக்கக் கூடிய தாள் காசுகளின் மிகக் குறைந்த எண்ணிக்கை யாது?

……………………………………………………………………………………

29. இவ்வுருவினை படத்தில் காட்டியவாறு குறுக்காக இரு சம்பங்காக வெட்டிய பின் கிடைக்கும் உருக்களின் மொத்த முகங்கள் எத்தனை?



………………………………………

**VIII. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

30. கூர்மையான பார்வைத் திறன் கொண்ட பிராணி
i. கழுகு ii. பாம்பு iii. ஆந்தை

31. சோயா அவரையில் அதிகளவு காணப்படும் சத்துப் பொருளானது.
i. மாப்பொருள் ii. புரதம் iii. விற்றமின்

32. இரவில் மலரும் பூக்கள் அனேகமாக காணப்படும் நிறமானது
i. மஞ்சள் ii. வெள்ளை iii. சிவப்பு

33. அதிக கால்களையுடைய பிராணி யாது?
i. சிலந்தி ii. தேள் iii. மரவட்டை

34. எமது நாட்டு தேசிய கீதத்திற்கு இசை அமைத்தவர்
i. அமரதேவா ii. ஆனந்த சமரக்கோன் iii. மு.நல்லதம்பி

35. அதிகளவு மாவட்டங்களைக் கொண்ட மாகாணமானது
i. மேல் மாகாணம் ii. கிழக்கு மாகாணம் iii. வட மாகாணம்

36. இலங்கையின் முதலாவது தலைநகரம் எது?
i. அனுராதபுரம் ii. பொலன்னறுவை iii. கண்டி

37. மகாவலி கங்கை கடலுடன் சேரும் இடம் எது?
i. மாத்தறை ii. கொழும்பு iii. திருகோணமலை

38. மின்னேரியாக் குளத்தை கட்டுவித்த மன்னன்
i. மகாசேனன் ii. பராக்கிரமபாகு iii. தாதுசேனன்

39. மிக நீண்ட நாட்கள் உயிர்வாழக்கூடிய பிராணி
i. முதலை ii. கடலாமை iii. யானை

40. இலங்கையின் நாணயத்தாள்களில் காணப்படும் பிறெயில் புள்ளிகளுக்குரிய காரணம்
i. அழகுக்காக ii. எண்ணிக்கைக்காக
iii. பார்வையற்றோர் இனங்காண

41. ஒலிம்பிக் வளையத்திலுள்ள மஞ்சள் நிற வளையம் குறிப்பது
i. ஆசியாக்கண்டம் ii. அமெரிக்கா கண்டம் iii. ஆபிரிக்கா கண்டம்

(10ஆம் பக்கம் பார்க்க)

09 ஆம் பக்கத் தொடர்

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – II

42. போமலின் சேர்க்கப்பட்ட மீன்களை உண்பதனால் ஏற்படத்தக்க விளைவு
i. உதடுகள் வீங்குதல் ii. வயிற்றுவலி ஏற்படல்
iii. காய்ச்சல் ஏற்படுதல்

43. பலகையில் தளபாடம் செய்ய உதவும் கருவி
i. குறடு ii. சீவுளி iii. தூக்கு குண்டு

44. பின்வருவனவற்றுள் நாருரு வேர் காணப்படும் தாவரமானது
i. வேம்பு ii. பலா iii. தென்னை

45. கோள் மண்டலத்தில் மிகப்பெரிய கோள் எது?
i. புதன் ii. வியாழன் iii. வெள்ளி

46. வயலில் சேற்றை மட்டமாக்க பயன்படும் உபகரணம்
i. பரப்புப்பலகை ii. கலப்பை iii. உழவு இயந்திரம்

47. இலங்கையில் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த செயற்கை துறை முகமானது அமைந்துள்ள இடம்
i. திருகோணமலை ii. கொழும்பு iii. காலி

48. தாவர வித்துக்களை பரம்பலடைய செய்யும் பிராணி
i. வௌவால் ii. கிளி iii. மீன்கொத்தி

49. கொத்தாகப் பூக்கும் மலராக அமையாதது
i. செவ்வரத்தை ii. தொட்டாச்சுருங்கி
iii. சீதேவியார் செங்கழுநீர்

50. இலங்கையில் புகழ்பெற்ற சுவர் ஓவியங்கள் காணப்படும் இடமானது
i. பொலன்னறுவை ii. அனுராதபுரம் iii. சிகிரியா

51. சிங்கள மக்களின் கலாசார நடனமானது
i. கிரிகொரங்கா ii. கண்டிய நடனம் iii. பரதநாட்டியம்

52.  இக்குறியீடு குறித்துக் காட்டும் நிர்வாக சேவையானது
i. பொலிஸ் நிலையம்
ii. நீர் வழங்கல் சபை
iii. இலங்கை மின்சார சபை

53. அரச இலச்சினை குறியீடுகளில் அடங்காதது எது?
i. நிறைகுடம் ii. தென்னம்பூ iii. தர்மச்சக்கரம்

54. நத்தையின் முட்டையின் நிறமானது
i. வெள்ளை ii. கபிலம் iii. மஞ்சள்

55. நுரைச்சோலையிலுள்ள மின் நிலையம் எந்த வலுசக்தியினால் இயக்கப்படுகிறது?
i. நிலக்கரி ii. எரிவாயு iii. சூரிய ஒளி

56. எப்போசணைக் குறைபாட்டால் பல், எலும்பு வளர்ச்சி பாதிப்படையும்?
i. அயடின் ii. இரும்பு iii. கல்சியம்

57. இலங்கையின் தேசிய அடையாள அட்டையை வழங்குவது
i. அஞ்சல் திணைக்களம் ii. கல்வித் திணைக்களம்
iii. ஆட்பதிவுத் திணைக்களம்

58. இலங்கை தேசப்படத்தில் கபில நிறத்தால் குறிக்கப்படுவது
i. மலைகள் ii. ஆறுகள் iii. வீதிகள்

59. பின்வருவனவற்றுள் எது தனியாக விளையாடும் விளையாட்டாக அமையாதது
i. நீளம் பாய்தல் ii. உயரம் பாய்தல் iii. கிரிக்கெட்

60. "காடுகளை பாதுகாப்போம்" என்ற தலைப்பில் கருத்துள்ள மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்கு குறையாமல் இருக்க வேண்டும். எழுவாய், பயனிலை தொடர்பு சரியாக இருக்க வேண்டும்.

# அரசியலமைப்பில் திருத்தம் மேற்கொள்வதற்கு இப்போதைய அரசுக்கு அதிகாரம் கிடையாது!

## உத்தேச 21 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை எதிர்ப்பதாக கூறுகின்றார் சரத் வீரசேகர எம்.பி

இன்று செயற்படுவது பராமரிப்பு (caretaker) அரசாங்கமும், ஸ்திரத்தன்மைக்கு முன்னரான (cocktail) அமைச்சரவையும் ஆகும். அப்படியானஅரசாங்கத்திற்கு அரசியலமைப்பைத் திருத்துவதற்கு அதிகாரம் இல்லை என்று பொதுமக்கள் பாதுகாப்பு முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

21 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு ஆதரவைக் கோருவதற்காக ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் 21 ஆவது திருத்தம் பற்றிய சுருக்கமான அறிமுகத்தினை நீதி, சிறைச்சாலைகள் மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ வழங்கினார்.

இதன் போது பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர இதற்கு கடும் ஆட்சேபனை தெரிவித்ததுடன், தான் உத்தேச 21 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை எதிர்ப்பதாகவும் தெரிவித்தார்.

19 ஆவது திருத்தச் சட்டத்திற்கு எதிர்த்து வாக்களித்த ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினர் தான் என்பதனையும் அவர் இங்கு ஞாபகப்படுத்தியதுடன், 21 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக 19ஐ மீளக்கொண்டு வருவதற்கான எந்தவொரு முயற்சியையும் தான் ஆதரிக்கப் போவதில்லை என்றும் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறுகையில், இன்று நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும், பொருளாதாரத் தீர்வொன்றே இப்போதைய தேவை எனவும் தெரிவித்தார்.

"ஆனால் ஜனாதிபதி இதனை அரசியல் நெருக்கடியாகக் கருதி முன்னாள் பிரதமரையும் அமைச்சரவையையும் கலைத்து விட்டு தற்போது புதிய

சரத் வீரசேகர மேலும் தெரிவித்ததாவது:

"பிரதமரின் அறிவுறுத்தலின் பேரில் ஜனாதிபதி செயற்பட வேண்டுமென 21 ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஜனாதிபதி முழு நாட்டினாலும்தெரிவு செய்யப்பட்டவர் என்பதாலும் பிரதமர் ஒரு மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் என்பதாலும், ஜனாதிபதி எவ்வாறு பாராளுமன்ற உறுப்பினருக்கு மக்களின் இறையாண்மையை

பிரதமரையும் புதிய அமைச்சரவையையும் நியமித்தார். இந்தப் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்க நாங்கள் எங்களால் முடிந்த ஒத்துழைப்புகளைச் செய்தோம். எந்த எதிர்ப்பும் இன்றி ஆதரவளிக்கவும்ஒப்புக் கொண்டோம்.

ஆனால் இப்போதுள்ள சூழலில் அரசியலமைப்புத் திருத்தம் கொண்டு வருவதற்கான தேவை என்ன? பொருளாதார நெருக்கடிக்கு அரசியலமைப்பு மாற்றம் என்ன வகையான தீர்வினைத் தரப் போகிறது? 'சுபீட்சத்தின் நோக்கு' என்ற சிந்தனையில், புதிய அரசியலமைப்பை கொண்டு வருவதற்கு ஜனாதிபதிக்குஅதிகாரம் உள்ளது, அரசியலமைப்பை திருத்துவதற்கு அல்ல" என்றும் சரத் வீரசேகர எம்.பி கூறினார்.



கையளிக்க முடியும்? அப்படியானால் அதை மக்களிடம் சர்வஜன வாக்கெடுப்பின் ஊடாக கேட்க வேண்டாமா? இதன் போது நாட்டுமக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவதுதொடர்பில் கலந்துரையாடப்பட்டு வருவதாக தெரிவித்திருந்தார். ஆனால் மாகாண சபைகள் இருக்கும் போதே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட்டால் நாடு கூட்டாட்சியாக மாறும் என்பதுஅனைவரும் அறிந்த உண்மை. ஏனெனில், ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆளுநரின் அதிகாரம் இல்லாதொழிக்கப்பட்டு அதன் பின்னர் முதலமைச்சர்கள் விரும்பியவாறு சட்டம் இயற்றக் கூடிய 09 சுதந்திர மாகாண சபைகள் அமையும். எனவே, ஒற்றையாட்சி அரசை கூட்டாட்சியாக மாற்றும் எந்தவொரு செயற்பாட்டுக்கும் நான் ஆதரவளிக்கவில்லை. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிமுறைமையை ஒழிக்க வேண்டுமாயின் முதலில் மாகாண சபைகளே இல்லாதொழிக்கப்பட வேண்டும்.

"21 ஆவது திருத்தம் அரசியலமைப்பு பேரவைக்கு ஜனாதிபதியின் சிறப்பு நியமனங்களை மற்றும்ஆணைக்குழுக்களுக்கு அதிகாரிகளை நியமிக்க அதிகாரம் அளிக்கிறது. ஆனால் அரசியலமைப்பு சபையின் 09 உறுப்பினர்களில் பிரதமருக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் 07 வாக்குகள் பெரும்பான்மையாக உள்ளன. ஏனெனில் அவர்கள் இருவரும் அரசியலமைப்பு சபைக்கு 05 பேரை நியமிக்கின்றனர்.

அப்படியானால், ஜனாதிபதியின் உரிய அதிகாரங்கள் தற்போது பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் (இரண்டு மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள்) ஆகியோருக்கு வழங்கப்படும். இது எவ்வகையில் நியாயம்? இது மிகவும் சிக்கலான விடயம். இவையனைத்தும் புதிய அரசியலமைப்பின் மூலம் மட்டுமே நிறைவேற்றப்பட முடியும், திருத்தத்தின் ஊடாக அல்ல. எனவே, அரசியலமைப்புச் சட்டத்தில் எந்தத் திருத்தத்தையும் நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம். இப்போதுள்ள அரசாங்கம் பராமரிப்பு (care taker) அரசாங்கம் ஆகம்.

### ' நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிக்க வேண்டுமாயின், முதலில் மாகாண சபைகளே இல்லாதொழிக்கப்பட வேண்டும் '

அமைச்சரவையும் cocktails அமைச்சரவையாக உள்ளது. இப்படியான அரசாங்கத்திற்கு அரசியலமைப்பை திருத்த அதிகாரம் இல்லை. அடுத்த வருடம் பெப்ரவரியில்அரசாங்கத்தை கலைத்து விட்டு, பொதுத் தேர்தலில் மற்றொரு அரசாங்கம் தெரிவு செய்யப்பட்ட பின்னர் புதியஅரசியலமைப்பைக் கொண்டு வருவது அவசியமானால் ஜனாதிபதி அதனை செய்ய முடியும்".

றிசாத் ஏ காதர் ...
(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

# இமாம் கொமைனியின் (ரஹ்) வாழ்க்கையிலிருந்து முஸ்லிம் உலகம் கற்க வேண்டிய பாடங்கள் ஏராளம்

## 33 ஆம் வருட நினைவு தினம் இன்று

இமாம் ருஹுல்லா முசவி கொமைனியின் 33 ஆம் வருட நினைவு தினம் இன்று (03.06.2022) ஆகும். 1979 1989 காலகட்டத்தில் அதிகம் பேசப்பட்டவர் ஈரானின் மறைந்த ஆயதுல்லா ரூஹுல்லா கொமெய்னி. ஏனெனில் அவர் பாரசீக வளைகுடாவின் பொலிஸ்காரர் என்று அழைக்கப்பட்ட சக்தி வாய்ந்த ஷா பஹ்லவிக்கு எதிராக ஒரு வெற்றிகரமான புரட்சியை வழிநடத்தினார்.

இப்புரட்சியானது, அதன் இயல்பு காரணமாக, 'புரட்சிகளை மக்கள் மயப்படுத்தும் புரட்சி' என்று அடையாளம் காணப்பட்டது. ஏனெனில் இது நிராயுதபாணியான மக்கள் போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டதும் அந்நியச் சார்பிலிருந்து முற்றிலும் விடுபட்டதும் ஆகும்.

இமாம் கொமெய்னிக்கு நாட்டின் விவகாரங்களில் ஏறக்குறைய முழு அதிகாரமும் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் அவர் மக்களின் விருப்பப்படி இஸ்லாமிய போதனைகளின் அடிப்படையில் குடியரசு ஆட்சி முறையைத் தேர்ந்தெடுத்து நிறுவினார்.

முதல் நாளில் இருந்தே இப்புரட்சிகர அரசாங்கத்தை வீழ்த்த பல சதித்திட்டங்கள் தீட்டப்பட்டன. எம்.கே.ஓ (Mojahideen Kalk Organisation) பயங்கரவாதிகள் நடத்திய குண்டுவெடிப்புகளில் புரட்சியின் தலைவர்கள் பலர் உயிரிழந்தனர். ஆனால் இமாம் இச்சதிகளுக்கு எதிராக உறுதியாக நின்று இலட்சிய அரசாங்கத்தை நிறுவுவதில் வெற்றி பெற்றார்.

இமாம் கொமெய்னி மிக உச்சபட்ச அதிகாரத்தை கொண்டிருந்தவராக இருந்த போதிலும், தேவைப்படும் போது வழிகாட்டுதலைத் தவிர, அரசாங்க நிர்வாகத்தில் அவர் தலையிட்டதில்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அரச அமைப்பை நடத்த அனுமதித்தார்.

பரந்த மற்றும் செல்வம் கொழிக்கும் ஒரு நாட்டினது அதிசக்தி வாய்ந்த ஆட்சியாளரின் தனிப்பட்ட வாழ்க்கையும் நடத்தையும் ஒரு ஏழையைப் போன்றே அமைந்திருந்தது. ஆடம்பரமான வாழ்க்கையை இமாம் வாழ்ந்திருக்கலாம், ஆனால் அவர் அதில் விருப்பம் கொள்ளவில்லை. அவரது வீடு அடக்கமாகவும் எளிமையாகவும் இருந்தது. அவரது சமூக நடத்தை, நீதி, நிர்வாகம் மற்றும் விருப்பு, வெறுப்பு அனைத்தும் இறை திருப்தியை நாடியதாகவே இருந்தன. மறைந்த இமாமின் இறைபக்தி, அவரது தனிப்பட்ட நடத்தை மற்றும் சக்தி வாய்ந்தவராக இருந்த போதும் அவர் வாழ்ந்த வாழ்க்கை, அவர் பணிவு மற்றும் அவர் செய்த இறைவழிபாடுகள் தனித்துவமானவை. இது அவரது ஆன்மீக முதிர்ச்சியை எடுத்துக்காட்டுகிறது.

ஷியா மற்றும் சுன்னி அறிஞர்கள் மற்றும் முஸ்லிம் அல்லாத அறிஞர்கள் உட்பட அனைத்து சிறந்த அறிஞர்களும் மறைந்த இமாமின் ஆளுமையின் இப்பகுதியைப் புரிந்து கொள்வது கடினம் என்று கூறியுள்ளனர். மறைந்த இமாமின் வாழ்க்கையின் இப்பகுதியும், அவரது உன்னதமான, அறிவு ரீதியான செயல்பாடுகளும் அனைவரின் கண்களையும் கவர்ந்த போதிலும், அவரது வாழ்க்கையின் பல்வேறு பரிமாணங்களை அவர்களால் எளிதில் புரிந்துகொள்ள முடியவில்லை. இது அவருடைய ஆன்மீக பக்குவநிலையை எடுத்துக்காட்டுகிறது.

நீதியை நிலை நாட்டுவதில் அவர் எப்போதும் உறுதியுடன் இருந்தார். தேசத்தின் மீது திணிக்கப்பட்ட போர் மற்றும் பொருளாதாரத் தடைகள் போன்ற கடினமான சோதனைகளை எதிர்கொண்ட போதிலும் அவர் பொறுமையுடனும் தைரியத்துடனும் அவற்றை எதிர்கொண்டார்.

மறைந்த இமாம் தனது நிகழ்வு நிறைந்த வாழ்க்கையில் சில விஷயங்களில் அதிக கவனம் செலுத்தினார். அவர் எப்போதும் நீதியையும் ஒற்றுமையையும் மிக உயர்ந்ததாகக் கருதினார். இம்மாபெரும் தலைவரிடமிருந்து முஸ்லிம் உலகம் கற்க பெரும் பாடங்கள் உள்ளன.



### இஸ்லாமிய சமுதாயத்தையும் இஸ்லாமிய உலக ஒற்றுமையையும் மதிப்பவராக என்றும் வாழ்ந்தவர் அவர்

இன்றைய கால கட்டமத்தில் உலகெங்கிலும் உள்ள இஸ்லாமிய நாடுகளுக்கு இமாமின் வாழ்வில் படிப்பினைகள் நிறைந்துள்ளன. இஸ்லாமிய உலகத்தலைவர்கள் இமாமின் இப்படிப்பினைகளைப் பின்பற்றினால், நிச்சயமாக அவர்கள் செழிப்பு, சுயமரியாதை, பாதுகாப்புப் பாதையை நோக்கிச் செல்வார்கள். கிழக்கும் வேண்டாம், மேற்கும் வேண்டாம் என்ற கொள்கையில் இமாம் உறுதியாக இருந்தார். இஸ்லாமிய உலகு இழந்த கண்ணியத்தை மீண்டும் பெற வேண்டுமானால் இமாமின் வாழ்விலிருந்து பாடம் கற்க வேண்டும்.

இஸ்லாமிய சமுதாயம் எல்லா காலங்களிலும் அநீதிக்கு ஆளாகியிருக்கிறது. இது முஸ்லிம்களுக்கிடையில் ஒற்றுமையின்மை, முரண்பாடு மற்றும் மோதல்களால் ஏற்பட்டுள்ளது என்பதே உண்மையாகும். இந்த கசப்பான உண்மைகளால் இஸ்லாமிய உலகம் இன்றளவிலும் பாதிக்கப்பட்டுள்ளது. இஸ்லாத்தின் வரலாற்றை குறிப்பாக சமீபத்திய நூற்றாண்டுகளில் இஸ்லாத்தின் வரலாற்றை நீங்கள் எவ்வளவு அதிகமாக ஆராய்கிறீர்களோ, அவ்வளவு தெளிவாக இந்த உண்மைகளை உங்களால் உணர்ந்து கொள்ளலாம். இமாம் கொமெய்னி (ரஹ்) எப்போதும் நீதியை வலியுறுத்தினார். மேலும் அவர் அதை தீர்க்கமாகப் பின்பற்றவும் செய்தார். அவர் இறைவனுக்காகவும், இஸ்லாத்துக்காகவும், முஸ்லிம்களின் ஒற்றுமைக்காகவும் தனது சொந்த நலனில் கவனம் செலுத்தவே இல்லை. அவர் எவருடனும் மோதலில் ஈடுபட விரும்பவில்லை. அவர் எப்போதும் இஸ்லாமிய சமுதாயத்தையும் இஸ்லாமிய உலக ஒற்றுமையையும் மதிப்பவராக இருந்தார்.

இஸ்லாத்தின் எதிரிகள் பல்வேறு முஸ்லிம் குழுக்களிடையே கருத்து வேறுபாடுகளைத் தூண்ட முயற்சிக்கின்றனர். இதற்காக அவர்கள் மில்லியன் கணக்கான டொலர்களை செலவிடுகிறார்கள்.

இஸ்லாமிய நாட்காட்டியின் மூன்றாவது மாதமான ரபிஅல்அவ்வல் 12 முதல்17 வரையிலான நாட்களை இஸ்லாமிய ஒற்றுமை வாரமாக இமாம் கொமெய்னி அறிவித்தார். இந்த வாரத்தில் உலகம் முழுவதிலுமிருந்து வரும் அறிஞர்கள் இஸ்லாத்தின் அனைத்து சிந்தனைப் பள்ளிகளிலிருந்தும் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வது மட்டுமல்லாமல், இஸ்லாமிய உலகின் தற்போதைய நிலைமையைப் பற்றி சிந்திக்கவும் அழைக்கப்படுகிறார்கள். இஸ்லாமிய உலகின் இன்றைய தேவை ஒற்றுமையேயாகும்.

தாஹா முஸம்மில் ...

# சுயஉணவு உற்பத்தியினால் நெருக்கடியை தவிர்க்கலாம்



'ஹரித தெயக் சௌபாக்யா' வீட்டுத்தோட்ட வேலைத்திட்டத்திற்கு சமாந்தரமாக நடைமுறைப்படுத்தப்படும் மனைப் பொருளாதார பாதுகாப்பு வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் அநுராதபுரம் மாவட்ட செயலகத்தில் அநுராதபுரம் மாவட்ட செயலாளர் ஜனக்க ஜயசுந்தர தலைமையில் விவசாய அமைச்சின் அனுசரணையுடன் நடைபெற்றது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கு ஏற்ப சொந்த தேவைக்கான உணவுப் பொருட்களை தாமே உற்பத்தி செய்து அவற்றை இலகுவாக பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு இதன் மூலம் ஏற்படும் என்று அநுராதபுரம் மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தர இதன் போது தெரிவித்துள்ளார். எதிர்காலத்தில் நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டாலும், ஏற்படாவிட்டாலும் எமது தேவைக்கு ஏற்ப உள்நாட்டுப் பொருளாதாரப் பாதுகாப்பு என்பது நமது சொந்தத் தேவைகளைத் தயாரித்து பூர்த்தி செய்வதன் மூலம் ஏற்படுகின்றது. இதற்காக பல தொடர் வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட வேண்டுமென அரசாங்க அதிபர் இதன் போது தெரிவித்துள்ளார்.

இந்த வேலைத்திட்டத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது குறித்தும், சம்பந்தப்பட்ட உற்பத்தியாளர்கள் மற்றும் இதில் ஈடுபட்டுள்ளவர்கள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. உருளைக்கிழங்கு உட்பட ஏனைய காய்கறிகள் உற்பத்தி மீதும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது. குறிப்பாக இரசாயனப் பசளைகள் இல்லாமல், இவை இலகுவில் விளைவிக்கக் கூடிய மரக்கறி வகைகள் என்பது குறித்து இதன் போது கவனம் செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் மேலதிக மாவட்ட செயலாளர் சந்தியா அபேசேகர, மாவட்ட விவசாயப் பணிப்பாளர் லலித தேனுவர, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சுகத் நயனந்தா, மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் டபிள்யூ.ஏ. வசந்த, மாவட்ட உர உதவிப் பணிப்பாளர் ஏ.டி.அஜித் குமார, மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் ஜே.கே.எஸ். சமரவீர, மாகாணங்களுக்கு இடையிலான பிரதி விவசாயப் பணிப்பாளர் டி.பி மாலா ரம்யலதா, உதவி ஆணையாளர் (கமநல சேவைகள், அநுராதபுரம்) குலதுங்க, மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

ஏ.ஆர்.எம்.ரபியூதீன்
(திறப்பனை தினகரன் நிருபர்)

# கிழக்கின் குரல்



## உணவகங்களின் நாட்கூலி தொழிலாளர்கள் வாழ்வாதாரமின்றி நிர்க்கதி நிலையில்

ஒலுவில் விசேட நிருபர்

நாட்டில் தொடர்ச்சியாக ஏற்பட்டுள்ள சமையல் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக அம்பாறை மாவட்டத்திலுள்ள அதிகமான உணவகங்கள் மற்றும் சிற்றுண்டி வியாபார நிலையங்களும் நீண்ட நாட்களாக மூடிய நிலையில் காணப்படுவதால் அவ் உணகங்களில் நாட்கூலி தொழிலாளர்களாக பணிபுரிவோர் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

பலர் தொழிலை இழந்துள்ளதால் அவர்களின் குடும்பங்கள் மிகவும் வறுமை நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதோடு பிள்ளைகளும் பாடசாலைக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக உணவுப் பொருட்கள் என்றும் இல்லாதவாறு விலை அதிகரித்து காணப்படுவதால் நாளாந்த உணவுக்குக் கூட கஷ்டப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

சமயல் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக நடமாடும் சிற்றூண்டி வியாபாரத்தில் ஈடுபடுபவர்களும் தனது தொழிலை இழந்துள்ளனர்.

எனவே, வருமானத்தை இழந்த மற்றும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு அரசாங்கத்தினால் 05 ஆயிரம் ரூபாய் மானியக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வரும் நிலையில் சிற்றூண்டி மற்றும் உணவகங்களில் நாளாந்த கூலி தொழிலாளர்களாக பணி புரிந்து தொழிலை இழந்தவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் மானியக் கொடுப்பனவை வழங்குவதற்கும் முன்வர வேண்டும்.

## மட்டக்களப்பில் அதிகமான உணவகங்கள் பூட்டு

மாளிகைக்காடு குறூப் நிருபர்

மட்டக்களப்பு மாநகரில் அதிகமான உணவகங்கள் மூடப்பட்டு காணப்படுகின்றன.இதனால் மட்டக்களப்பு மாநகரில் தொழில் நிமித்தம் வருகை தருவோர் பலவிதமான இன்னல்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

எரிவாயு தட்டுப்பாட்டினால் வீடுகளிலிருந்து சமைத்த உணவுப் பொருட்களை கொண்டு வராத அரச, தனியார் நிறுவன உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் வர்த்தக நிறுவனங்களில் தொழில்புரிவோரும் நகரத்திற்கு பல்வேறு தேவைகளுக்காக வருகை தருவோரும் காலை , பகல் உணவின்றியும் தேனீர் மற்றும் குடிபானமின்றியும் பலவிதமான கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

## கல்முனையில் மண்ணெண்ணெய், எரிவாயு விநியோகத்தை சீரமைக்க நடவடிக்கை

கல்முனை விசேட நிருபர்



நாட்டில் எரிபொருட்களுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவி வருகின்ற சூழ்நிலையில் கல்முனை மாநகர பிரதேசங்களில் மண்ணெண்ணெய் மற்றும் சமையல் எரிவாயு போன்றவற்றை விநியோகம் செய்யும்போது ஏற்படும் பிரச்சினைகளை நிவர்த்தி செய்து, பொது மக்கள் அவற்றை சிரமமின்றி பெற்றுக்கொள்ளும் பொருட்டு விநியோக நடவடிக்கைகளை சீராக ஒழுங்குபடுத்துவது தொடர்பிலான விசேட கலந்துரையாடல் ஒன்று மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை (01) மாலை, முதல்வர் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரம்ஸீன் பக்கீர், பிரதம பொலிஸ் பரிசோதகர் அப்துல் வாஹித், சாய்ந்தமருது பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எம்.எம்.பளீல், கல்முனை பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் டொக்டர் எஸ்.எம்.ஏ.அஸீஸ் உட்பட கல்முனை மாநகர சபை எல்லையினுள் இயங்கி வருகின்ற எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் பிரதிநிதிகள், லிட்ரோ கேஸ் நிறுவனத்தின் பிராந்திய முகவர் நிலையத்தின் பிரதிநிதி, கல்முனை மாநகர பொதுச் சந்தை வர்த்தகர் சங்கத்தின் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர்.

இக்கலந்துரையாடலில் சில முக்கிய தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடற்றொழிலில் ஈடுபடுகின்ற படகுகளுக்குத் தேவையான மண்ணெண்ணெய் விநியோகத்திற்கென கல்முனை மற்றும் சாய்ந்தமருது பிரதேசங்களில் தலா 02 எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பிரத்தியேக நேரம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தந்த வேளையில் மாத்திரம் விநியோகம் செய்தல்.

பொதுமக்களுக்கு மண்ணெண்ணையை தட்டுப்பாடின்றி வழங்கும் பொருட்டு படகுகளுக்குத் தேவையான மண்ணெண்ணையை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் இருந்து பிரத்தியேகமாக தருவித்து மேற்படி எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு வழங்க அவசர நடவடிக்கை எடுத்தல்.

உணவுப் பண்டங்கள் உற்பத்தி மற்றும் கைத்தொழில் துறைகளில் ஈடுபடுவோருக்கும் போதியளவு மண்ணெண்ணையை வழங்க விசேட ஒழுங்கு செய்தல்.

பஸ்கள் மற்றும் வாகனங்களின் பாவனைக்காகவும் வியாபார நோக்கங்களுக்காகவும் பெரிய கேன்களில் மண்ணெண்ணெய் வழங்குவதை கட்டுப்படுத்தல்.

எரிவாயுவை கிராம சேவகர் பிரிவுகள் தோறும் விநியோகம் செய்வதற்கு அவசர நடவடிக்கை எடுத்தல்.

## காரைதீவு கண்ணகை அம்பாளின் வைகாசி திருக்குளிர்த்தி

காரைதீவு குறூப் நிருபர்

வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்பாளின் வைகாசி திருக்குளிர்த்தி சடங்கு திருக்கதவு திறத்தலுடன் திங்கட்கிழமை 6 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

6 ஆம் திகதி மாலை கடல் நீர் எடுத்து கல்யாண கால் வெட்டுதலுடன் ஆரம்பமாகும் திருக்குளிர்த்தி சடங்கு 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை திருக்குளிர்த்தி பாடலுடன் நிறைவடைய இருக்கிறது

கடந்த இரண்டு வருடம் கொரோனா காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் திருக்குளிர்த்தி இடம் பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

## சேருநுவரவில் ஐஸ் போதை பொருளுடன் ஒருவர் கைது

தோப்பூர் குறூப் நிருபர்

சேருநுவர பொலிஸ் பிரிவிற்குட்பட்ட செல்வநகர் பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவர் 650 மில்லி கிராம் ஐஸ் ரக போதைப் பொருளை தன் உடைமையில் வைத்திருந்ததாக சந்தேக நபர் ஒருவரை சேருநுவர பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் மூதூர் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியதையடுத்து நீதிவான் பத்தாயிரம் ரூபாய் தண்டப்பணமும் மூன்று மாதகால சிறைத்தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

குறித்த சந்தேக நபர் ஐஸ் போதைப் பொருள் வைத்திருப்பதாக பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலுக்கமைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

மட்டக்களப்பில்

## 18 வைத்தியசாலைகளுக்கு வைத்திய அதிகாரிகள் நியமனம்

வெல்லாவெளி தினகரன் நிருபர்



மட்டக்களப்பில் உள்ள 18 வைத்தியசாலைகளுக்கு வைத்திய அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்டத்திற்கான பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் குணசிங்கம் சுகுணன் தெரிவித்தார்.

இவ்வாறு மாவட்டத்திலுள்ள 18 வைத்திய அதிகாரிகள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பல்வேறு வைத்தியசாலைகளுக்கும் நியமனம் பெற்று எமது பிராந்திய பணிமனையில் கடமையை பொறுப்பேற்றுக் கொண்டனர். பலகாலமாக ஆளணியற்று காணப்பட்ட வாகரை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, மாங்கேணி வைத்தியசாலை, மீராவோடை வைத்தியசாலை, காங்கேயனோடை வைத்தியசாலை, திக்கோடை வைத்தியசாலை, களுவாஞ்சிகுடி, காத்தான்குடி, வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைகள் அவற்றினுள் சிலவாகும்.

எமது மாவட்ட சுகாதார சேவையை முடிந்தவரை மேம்படுத்த திடசங்கற்பம் கொண்டு தடைகளை உடைத்தபடி பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் கவனம் செலுத்தி வருகின்றது என பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

## சந்தேகத்திற்கிடமான நபர்கள், வாகனங்கள்

### காத்தான்குடி மக்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

காத்தான்குடிக்குள் சந்தேகத்திற்கிடமான நபர்களின் நடமாட்டங்கள், வாகனங்கள்,ஆட்டோக்கள் செல்லுமிடத்து காத்தான்குடி பொலிஸ் நிலையத்துக்கோ அல்லது காத்தான்குடி நகர சபை தவிசாளருக்கோ அறிவிக்குமாறு காத்தான்குடி பொது மக்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, காத்தான்குடி நகர சபை தவிசாளர், காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம், காத்தான்குடி ஜம் இய்யத்துல் உலமா சபை இணைந்து கூட்டாக காத்தான்குடி மக்களுக்கு விடுத்துள்ள அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,. அண்மைக் காலமாக எமது பிரதேசத்தில் இடம்பெற்று வருகின்ற சமகால நிலைமைகள் மற்றும் ஏனைய சம்பவங்கள் தொடர்பாக ஆராயும் நோக்கிலான அவசர கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் மேற்படி நிறுவனங்களின் முக்கிய பிரதிநிதிகளினது பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது. மேற்படி கலந்துரையாடலில் சில தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன,..

★பிள்ளைகள் பிரத்தியேக வகுப்புக்கள் மற்றும் பிற தேவைகளுக்காக வீட்டை விட்டு வெளியேறுகின்ற சந்தர்ப்பங்களில் அவர்களுக்கான முழுப் பாதுகாப்பினையும் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் வழங்க வேண்டும்.

★பிள்ளைகளை அறிமுகமில்லாத யாரேனும் அழைக்கின்ற சந்தர்ப்பங்களில் அருகில் செல்லக் கூடாது என்றும் அருகிலுள்ளவர்களை உதவிக்கு அழைக்கும் விடயம் போன்ற இன்னும் பிற அறிவுரைகளை பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும்.

## மகிழடித்தீவு பிரதேச வைத்தியசாலையில் ஆறு கோடி ரூபாவில் சுகவாழ்வு மையம்

வெல்லாவெளி தினகரன் நிருபர்



மகிழடித்தீவு பிரதேச வைத்தியசாலையில் ஆறு கோடி ரூபா பெறுமதியான நிதிப்பங்களிப்பில் ஆரோக்கிய சுகவாழ்வு மையம் புதன்கிழமை (1) மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார திணைக்கள பணிப்பாளர் குணசிங்கம் சுகுணன் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

கடந்தகால யுத்தத்தினால் மிகமோசமாக பாதிக்கப்பட்ட படுவாங்கரைப் பிரதேசத்தில் பட்டிப்பளையும் முக்கியமானது.அந்த அடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக உலக வங்கியின் திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட மகிழடித்தீவு வைத்தியசாலையில் நவீன ஆய்வுகூட, மருந்தகத்தைக் கொண்ட மூன்று மாடிக்கட்டடம் மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் க. கருணாகரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு திறந்து வைத்து மட்டக்களப்பு மக்கள் பாவனைக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் மகிழடித்தீவு பிரதேச வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதி உத்தியோகஸ்தர்கள்,பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## சர்வதேச புகைப்படப் போட்டியில் மாபெரும் வெற்றியாளராக ஜெம்சீத்







அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்

2022ம் ஆண்டிற்கான மொனாக்கோ நாட்டின் PA2F சுற்றுச்சூழல் புகைப்பட விருதின் வெற்றியாளர்களை அந்நாடு அறிவித்துள்ளமைக்கமைவாக இலங்கையின் அம்பாறை மாவட்டம் ஒலுவில் பிரதேசத்தை சேர்ந்த ஜெம்சித் இப்னு ஈஸாலெவ்வை வெற்றியீட்டி மாபெரும் வெற்றியாளாராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இப்புகைப்படத்திற்காக 5000 யூரோ பணப்பரிசினையும், ஈக்வடார் காட்டின் மையத்தில் உள்ள ஈக்வடார் பல்கலைக்கழகத்தின் அமேசான் ஆராய்ச்சி நிலையத்திற்கான பயணத்தையும், 2022 விருது கண்காட்சியின் திறப்பு விழாவிற்காக மொனாக்கோவிற்கான பயணத்தை இம்மாதம் 06ம் திகதி அவர் மேற்கொள்ளவும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



காத்தான்குடியில் யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவர்களினால் உலர் உணவுப் பொருட்கள் வறிய குடும்பங்களுக்கு (02) வியாழக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள புதிய காத்தான்குடி 167பி கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 30 வறிய குடும்பங்களுக்கு இந்த உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

(படம்: புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

## திருகோணமலை மாவட்டத்தில் 546 வறிய குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொதிகள்

றொட்டவெவ குரூப் நிருபர்



திருகோணமலை மாவட்டத்தில் வருமானம் குறைந்த 546 வறிய குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் ஆரம்ப கட்ட நிகழ்வு நேற்று திருகோணமலை மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் B.H.N.ஜயவிக்ரம தலைமையில் நடைபெற்றது.

கோமரன்கடவெவ, மொறவெவ மற்றும் குச்சவெளி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள பொருளாதார ரீதியாக நலிவுற்ற நாட்கூலி வேலையை மேற்கொள்ளும் குடும்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு இப்பொதிகள் வழங்கி வைக்கப்படவுள்ளன. இதனடிப்படையில் குச்சவெளிப் பிரதேச சபையைச் சார்ந்த இரு பயனாளிகளுக்கான உலர் உணவுப் பொதிகளை மாவட்ட அரசாங்க அதிபர் நேற்று வழங்கி வைத்தார். இவ் உலர் உணவுப் பொதி ஒன்றின் பெறுமதி ரூ. 6190 ஆகும்.

மேலும் குறித்த பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள போஷாக்குக் குறைவான 80 சிறுவர்களுக்கும், 89 கர்ப்பிணித் தாய்மாருக்கும் தலா 7500 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மூலமாகப் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் மின்சார நெருக்கடி காரணமாக சிறுவர்களது கல்விச் செயற்பாட்டை தடங்களின்றி மேற்கொள்ள 740 மின்னேற்றும் மின்விளக்கு(charger light) வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு அனுசரணை வழங்கும் அரச சார்பற்ற நிறுவனமான சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி R.அரியரட்ணம் தெரிவித்தார்.




# ஹற்றனை வந்தடைந்த இந்திய நிவாரணங்கள்

**ஹற்றன் சுழற்சி, ஹற்றன் விசேட நிருபர்கள்**

இலங்கையில் பொருளாதார நிதி நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழ்நாட்டு மக்கள் அத்தியாவசிய உணவு பொருட்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். இந்நிலையில் உலர் உணவு பொருட்கள் அனைத்து மாவட்ட மக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது.

இந்தியாவின் தமிழ்நாடு முதலமைச்சரால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பொருட்கள் விசேடமாக ஒழுங்கமைக்கப்பட்ட ரயில் மூலம் நேற்று (02.06.2022) காலை ஹற்றனை வந்தடைந்தன.

ஹற்றன் அம்பகமுவ பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளுக்கான தமிழக நிவாரணப் பொருட்கள் கொழும்பிலிருந்து ரயிலில் ஹற்றன் புகையிரத நிலையத்திற்கு எடுத்து வரப்பட்டு உடனடியாகவே விநியோகம் இடம்பெற்றன.






இந்நிலையில் நுவரெலியா மாவட்டத்தில் அம்பகமுவ பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் 67 கிராம சேவகர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 23350 குடும்பங்களுக்கு வழங்குவதற்காக அரிசி தொகைகள் நேற்று காலை அம்பகமுவ பிரதேச செயலாளர் தலைமையிலான குழு ரயிலில் வந்த இந்த நிவாரண பொருட்களை பொறுப்பேற்று உடனடியாக மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக கிராம சேவகரின் ஊடாக லொறிகளில் மூலம் அரிசி தொகைகள் அனுப்பப்பட்டது.

மேலும், கிராம சேவகர்களின் ஊடாக கொண்டு செல்லப்படும் உணவுப் பொருட்கள் எதிர்வரும் நாட்களில் பயனாளர்களுக்கு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விறகுக்கு பெரும் தட்டுப்பாடு

**பலாங்கொடை தினகரன் நிருபர்**

மின்சாரம் துண்டிப்பு, எரிபொருள் இன்மை, எரிவாயு தட்டுப்பாடு காரணமாக விறகு பாவனை அதிகரித்தமையினால் பலாங்கொடை பகுதியில் விறகுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டினர்.



உணவகங்கள் பேக்கரி மற்றும் வீடுகளில் விறகு பாவனை அதிகரித்துள்ளதாகவும் இந்த நிலைமை காரணமாக தேயிலை தொழிற்சாலைகளுக்கு நாளாந்தம் தேவைப்படும் விறகின் தொகை குறைவடைந்துள்ளதாக தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் கிடைக்கும் விறகுகளும் போதுமானதாக இல்லை என உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தேயிலை தொழிற்சாலைகளுக்கு உற்பத்தியினை மேற்கொள்ள அதிக அளவு விறகு தேவைப்படுவதாகவும் கடந்த சில மாதங்களாக ஏனைய நிறுவனங்களின் தேவைக்கு விறகு பாவனை செய்யப்படுவதாலும் விறகின் விலை உயர்வடைந்துள்ளதாக தெரிவிக்கின்றனர். எனினும் மழை காரணமாக விறகு தொகையினை வழங்குவது கட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதாக தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்கள் மேலும் தெரிவித்தனர்.



யடவத்த பிரதேச செயலாளர் பிரிவில் வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை தொடர்பாக விழிப்பூட்டும் நிகழ்வொன்று நிகொள்ள ஜும்ஆப் பள்ளிவாயலில் இடம்பெற்றது. இதன் போது பொதுமக்களுக்கு கமநல சேவை காரியாலய விவசாய அதிகாரிகள் பயிர்செய்கை தொடர்பாக தெளிவுபடுத்துவதையும், கலந்து கொண்ட மக்களில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம். படம்: மாத்தளை சுழற்சி நிருபர்

# வெள்ளத்தில் மூழ்கி ஒருவர் மரணம்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

வீதியில் காணப்பட்ட மழை வெள்ளத்தை கடக்க முற்பட்ட ஒருவர் நீரில் அடித்து செல்லப்பட்டு உயிரிழந்துள்ளார்.

கடும் மழை காரணமாக குருவிட்ட கோனபிட்டிய வீதியில் காணப்பட்ட வெள்ளநீரை கடந்து செல்ல முயற்சித்த குடும்பஸ்தர் ஒருவர் நீரில் அடித்து செல்லப்பட்டு மரணமாகியுள்ளார்.

இவரது சடலம் நேற்றைய தினம் வெள்ளம் குறைந்த பின்னர் புதர்களுக்குள் சிக்கியிருந்த போது பிரதேச மக்கள் மற்றும் மீட்பு பணியாளர்களால் மீட்கப்பட்டு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

வெள்ளத்தினால் வீதி நீர் நிறைந்திருந்தது. ஏனையவர்களின் அறிவுரைகளையும் ஏற்காது பயணித்த மோட்டார் சைக்கிளை பக்கத்தில் நிறுத்திவிட்டு வீதியைக் கடக்க முயற்சித்த போதே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இவரது மோட்டார் சைக்கிள் நிறுத்தப்பட்டிருந்த இடத்திலிருந்து சுமார் 500 மீற்றர் தூரத்திலிருந்து இவரது சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கிரியெல்ல பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய 41 வயதான அரச ஊழியரான இவர், இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார்.



இலங்கைக்கான எகிப்திய தூதுவர் மஜீட் மொஸ்லே அண்மையில் கண்டிக்கான விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். இதன்போது மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யூ கமகேயை அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார். பின்னர் இருவரும் ஒருவருக்கொருவர் நினைவுச் சின்னங்களைப் பரிமாறிக் கொண்டனர்.

# காடுகளில் பலாப்பழங்களை அறுவடை செய்வதற்கு அனுமதி

**ஹாலி எல விசேட நிருபர்**

காடுகளிலுள்ள பலாப்பழங்களை அறுவடை செய்வதற்கு வனப்பகுதிக்குள் நுழைவதற்கான அனுமதிப்பத்திரத்தை இலவசமாக வழங்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்குமாறு விவசாய, வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர, வன பாதுகாப்பு திணைக்களத்திற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

காடுகளில் விளையும் பலாப்பழம் மற்றும் ஈரப்பலா பழங்களை அறுவடை செய்ய மக்களை அனுமதிப்பதன் மூலம் உணவு நெருக்கடியை ஓரளவு குறைக்க முடியும் என்றும் அமைச்சர் வனத்துறை அதிகாரிகளிடம் கூறியுள்ளார்.

நாடளாவியரீதியில் சுமார் 3000 ஹெக்டேயர் வன நிலங்கள் இருப்பதாகவும், அந்த நிலங்களில் பலாப்பழம் உற்பத்தியானது மரத்தடியில் விழுந்து பயன்பாடின்றி அழுகி வருவதாகவும் வனப் பாதுகாப்பு அதிகாரிகள் அமைச்சரிடம் தெரிவித்தனர்.

# இயற்கை அனர்த்தங்களினால் கண்டி மாவட்டத்தில் 50 பேர் பாதிப்பு

**அக்குறணை குறூப் நிருபர்**

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம் காரணமாக கண்டி மாவட்டத்தில் 12 குடும்பங்களைச் சேர்ந்த 50 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக கண்டி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் அவ்வப் பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கு தேவையான வசதிகளை பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி விடயங்களை மாவட்ட செயலகம் வழிநடத்துவதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

தற்போது காலநிலை ஓரளவு சீராகி வருவதாகவும் தேவைப்படுமிடத்து உடன் நடவடிக்கைகளுக்கு ஆயத்தமாக இருப்பதாகவும் கண்டி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.





கரிட்டாஸ் நிறுவன அனுசரணையுடன் செடெக் மற்றும் உஸ்கொட் நிறுவனங்களின் ஏற்பாட்டில் பதுளை மற்றும் நுவரெலியா மாவட்ட தமிழ் ஊடகவியலாளர்களுக்கான இலங்கை பெருந்தோட்ட சமூகம் குறித்த தகவல் பரிமாற்ற செயலமர்வு நேற்றுமுன்தினம் நுவரெலியா கத்தோலிக்க திருச்சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. பதுளை தினகரன் விசேட நிருபர்

# இரத்தினபுரி மாவட்டத்தில் மண்சரிவு சிவப்பு எச்சரிக்கை

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

இரத்தினபுரி மாவட்டத்தில் பெய்துவரும் கடும் மழை காரணமாக தாழ் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இம்மாவட்டத்தின் 5 பிரதேச செயலகப் பிரிவுகளில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளதாக கட்டட ஆராய்ச்சி நிறுவனம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன் பெல்மதுளை, நிவித்திகல, கிரியெல்லை, அயகம ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளில் இரண்டாம் கட்ட மண்சரிவு அபாய அறிவிப்பு நிலவுவதாக இரத்தினபுரி காரியாலய அதிகாரிகள் நேற்று தெரிவித்தனர். மேலும் மழை ஓரளவு ஓய்ந்துள்ள போதிலும் தாழ்நிலங்களில் நீர் முற்றாக வற்றாமையால் பொது மக்களின் இயல்பு வாழ்க்கையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கலவான குகுலேகங்க நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் சடுதியாக உயர்ந்ததால் அதன் இரண்டு வான் தவுகளை இரண்டாவது முறையாகவும் திறந்துவிட்டதாக நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேநேரம் இப்பிரதேசத்தில் கடந்த காலப்பகுதியில் டெங்கு பரவும் அவதானம் நிலவியமையால் மழையின் பின்னர் நீர் வடிந்து செல்லும் தினங்களிலும் அதன் பின்னரும் டெங்குத் தடுப்புநடவடிக்கைகளில் அதிக கவனம் செலுத்துமாறு சுகாதாரத்துறை மற்றும் கிராம சேவகர்கள் அறிவுரைகளை வழங்கி வருகின்றனர்.

# லொறி குடைசாய்ந்து விபத்து

தேயிலைத் தூளை ஏற்றிச் சென்ற லொறியொன்று, வீதியில் குடைசாய்ந்ததால், ஹற்றன் போடைஸ் வீதியுடனான போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

நேற்று (2) அதிகாலை அல்பியன் தோட்டத்திலிருந்து கொழும்பு ஏல விற்பனை சந்தைக்கு தேயிலைத் தூளை ஏற்றி வந்த லொறி, அல்பியன் பகுதியில் மற்றுமொரு வாகனம் முன்னால் பயணிக்க இடம்கொடுக்க முற்பட்ட போதே, இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என அக்கரப்பத்தனை பொலிஸார் தெரிவித்தனர். லொறி விபத்துக்குள்ளான இடமானது, இலகு ரக வாகனங்கள் மாத்திரம் பயணிக்கும் பகுதி என்றும் தெரிவித்துள்ளனர்.




# வாகன விபத்தில் போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரி பலி

**பலாங்கொடை தினகரன் நிருபர்**

இரத்தினபுரி பெல்வாடிய கெடன்தொல பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தி'ல் போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தனது பணியினை நிறைவு செய்துவிட்டு வீட்டுக்கு முச்சக்கரவண்டியில் பயணித்துக் கொண்டிருந்த கல்முனை பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரி இரத்தினபுரி பெல்வாடிய கெடன்தொல பகுதியில் கடந்த 31ஆம் திகதி இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் மரணமடைந்துள்ளதாக இரத்தினபுரி பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் பெல்மதுளை பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய இரத்தினபுரி மாரப்பன பொத்தகன்த பகுதியில் வசித்துவந்த எச்.எம். விமல் ராஜ் குணதாச (56) என்பவராவார்.

போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரி ஓட்டிச்சென்ற முச்சக்கர வண்டி லொறியுடனும் மற்றும் தனியார் பஸ்வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானதாக ஆரம்ப விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் தனியார் பஸ் வண்டியின் சாரதியையும் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விபத்து சம்பந்தமாக இரத்தினபுரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.





துருக்கியிலுள்ள இலங்கைத் தூதரகம் (24) பௌத்த சமய நிகழ்வுகளுடன் சான்சரி வளாகத்தில் முதன்முறையாக வெசாக் பண்டிகையைக் கொண்டாடியது. ஏதென்ஸ் பௌத்த விகாரையில் வசிக்கும் வண. பாந்தே பன்னவன்ச தேரர் தியான அமர்வை மேற்கொண்டார். வெசாக் தொடர்பில் தனது சுருக்கமான அறிமுகக் கருத்துகளின் போது, தூதுவர் ரிஸ்வி ஹசன், உலகெங்கிலுமுள்ள பௌத்தர்களுக்கு "வெசாக்" இன் முக்கியத் துவத்தையும், பெரும்பாலான மக்கள் வழிநடத்தும் பரபரப்பான வாழ்க்கை முறையைச் சமாளிப்பதற்கு மத வேறுபாடின்றி தியானத்தின் மதிப்பையும் எடுத்துரைத்தார்.

# புதுமுக மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தும் நிகழ்வு

பருத்தித்துறை விசேட நிருபர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தில் 2020 / 2021 ஆம் கல்வி ஆண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தும் நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சுமார் 520 மாணவர்கள் நிகழ்நிலையில் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா புதுமுக மாணவர்களை வரவேற்று, வாழ்த்துரை வழங்கினார்.

முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் கணக்கியல், மனித வள முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், வணிகம், நிதி முகாமைத்துவம் மற்றும் சுற்றுலாவும் விருந்தோம்பலும் அலகு ஆகியவற்றின் தலைவர்கள் தத்தமது துறைகளின் கற்கை நெறிகள் பற்றி மாணவர்களுக்கு விளக்கமளித்ததுடன், பல்கலைக்கழகத்தின் நூலகர், நலச்சேவைகள் பணிப்பாளர், உதவிப் பதிவாளர், மாணவர் ஒழுக்காற்று உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டு பல்கலைக்கழக நடைமுறைகள் தொடர்பில் விளக்கமளித்தனர்.




**சிறு விளம்பரம்**

**மோட்டார் வாகனங்கள்**

122

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்**

விற்பனைக்கு

NW YV-8129 Bajaj threewheel, 2012, கூடிய விலைக் கோரிக்கைக்கு . வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810 . 033841

## அறிவித்தல்

**கிம்ஹாரா என்டர்பிரைசஸ் தங்க நகை ஈடுபிடிக்கும் இடம் 672, புதிய வர்த்தக கட்டிடத் தொகுதி அவிசாவளை வீதி, வெள்ளப்பிட்டி**

மேற்படி முகவரியில் நடத்திச் செல்லப்பட்ட வியாபார நிலையம் கடந்த 2021.12.25ம் திகதி முதல் சகல கொடுக்கல் வாங்கல்களும் முடிவுறுத்தப்பட்டு, வியாபாரம் மூடப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

- காலிங்க காமினி சில்வா (உரிமையாளர்)

## முடிவுறுத்தப்படும் திகதியை நீடிப்பதற்கான அறிவித்தல்

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**
**(சுத்திகரிப்புப் பிரிவு)**

### தேசிய / சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக்களுக்கான அழைப்பு

பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தல்களின் கேள்வி ஆவணங்களை வழங்குதல் முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் திறக்கும் திகதிகள் பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| கேள்வி இல. | விபரங்கள் | நீடிக்கப்பட்ட கொடுப்பனவு செய்வதற்கான இறுதித் திகதி | நீடிக்கப்பட்ட திறக்கும் திகதி |
|---|---|---|---|
| 4411T | Self Sealing Clamp for Heat Exchanger | 2022 ஜூன் 13 | 2022 ஜூன் 15 |
| 4417T | High Pressure Hot Water Cleaner | 2022 ஜூன் 13 | 2022 ஜூன் 15 |
| 4418T | MS Angle Irons | 2022 ஜூன் 13 | 2022 ஜூன் 15 |
| 4419T | 02 Nos. Welding Generators | 2022 ஜூன் 13 | 2022 ஜூன் 15 |

கேள்வி நிபந்தனைகள் மற்றும் விபரக்குறிப்புகள் அடங்கிய கேள்வி ஆவணங்கள் www.ceypetco.gov.lk மற்றும் www.dgmarket.com எனும் இணையதளங்களில் கிடைக்கத்தக்கதாக உள்ளன.

ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகள் மேற்படி திகதிகளில் திறக்கப்படும் என்பதுடன் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் கேள்விகள் மீள்மதிப்பீட்டிற்காக மின்னஞ்சல் / தொலைநகலினூடாக முன்னுரிமைக் கடிதமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் அல்லது அவர்கள் சமர்ப்பித்த கேள்விகளை மீளப் பெற்றுக்கொண்டு திருத்தப்பட்ட கேள்வியொன்றைச் சமர்ப்பிக்கலாம்.

**முகாமையாளர் (பொருள்வளம்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**சுத்திகரிப்புப் பிரிவு, சப்புகஸ்கந்த,**
**களனி, இலங்கை.**
**தொலைபேசி: 011-2400110**
**மின்னஞ்சல்: ref.materials@ceypetco.gov.lk**

## உணவகம் - கேள்வி கோரல்
### தள வைத்தியசாலை - மாவனல்லை

மாவனல்லை தள வைத்தியசாலையின் உணவகத்தை 2022/ 2023 (ஒரு வருடகாலத்திற்கு) நடத்திச் செல்வதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

2022.06.02 முதல் 2022.06.15 பி.ப. 2.00 வரை தலைமையகத்தின் கணக்குப் பிரிவில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்களை கேள்விப் பத்திரத்துடன், வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

**மருத்துவ அதிகாரி,**
**தள வைத்தியசாலை - மாவனல்லை.**

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

நுகேகொட, கங்கொடவில, பெங்கிரிவத்த, இல.117/1D ஐச் சேர்ந்த வடஹலுகே சந்யா பிரியதர்ஷனீ (தே.அ.அ.இல 677693223V) ஆகிய நான், கொழும்பு பகிரங்க நொத்தாரிசு ரோஹண சி மெண்டிஸ் இனால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 2009 டிசம்பர் 29ஆம் திகதி திகதியிடப்பட்ட இல.912 கொண்ட அற்றோணி தத்துவத்தின் கீழ் சொல்லப்பட்ட இலங்கை குடியரசின் நுகேகொட, கங்கொடவில, பெங்கிரிவத்த வீதி, இல.117/A ஐச் சேர்ந்த சந்தியாகு தினேஷ் ஹிரந்த டி சில்வாவுக்கு என்னால் வழங்கப்பட்ட அற்றோணி தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக இலங்கை குடியரசுக்கும், பொது மக்களுக்கும் கவனத்தில் கொள்ள வேண்டிய ஏனைய சகலருக்கும் இத்தால் அறிவிக்கின்றேன். இத்திணைக்களத்திலிருந்து என் சார்பாக சொல்லப்பட்ட அற்றோணிதாரரால் மேற்கொள்ளப்படும் எந்த எதிர்கால நடவடிக்கைகள் அல்லது கொடுக்கல்வாங்கல்களுக்கு நான் பொறுப்பாக மாட்டேன்.

**வடஹலுகே சந்யா பிரியதர்ஷனீ**

## அட்டோனித் தத்துவத்தை ரத்துச்செய்தல்

இல. 161/2, கிரிமெடியாகார, கடவத்தை எனும் முகவரியில் வசிக்கும் குருகுல ஆரச்சிகே காமினி நாணாயக்கார (தேசிய அடையாள அட்டை இலக்கம் 195125500533) ஆகிய நான் நாளேட்டு இலக்கம் 11829 மற்றும் தொகுதி இலக்கம் 242 மடிதாள் இல 147 இன் கீழ் பதிவாளர் நாயகம் திணைக்களம். பத்தரமுல்லையில் 2018ஆம் ஆண்டு ஜுலை மாதம் 16ஆம் திகதி பதிவு செய்யப்பட்ட ரிச்சட் பீரிஸ் பினான்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி/ பொது முகாமையாளர்/ அங்கீகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரினால் 2018ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ஆம் தகிதி வழங்கப்பட்ட விஷேட அட்டோனித் தத்துவ அதிகாரத்தை ரத்துச் செய்து மீளப் பெற்றுக்கொள்கின்றோம் என்பதை இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றோம்.

**குருகுல ஆரச்சிகே காமினி நாணாயக்கார**
**2022.05.31**

## பெயர் மாற்றம்

93, அரபிக் கல்லூரி, மூதூர்-05 எனும் முகவரியைச் சேர்ந்த முகம்மது றிஸ்வான் ஆகிய நான் எனது பெயரை இன்று முதல் முகம்மது றிழ்வான் என மாற்றிக் கொண்டுள்ளேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் பயன்படுத்துவேன் எனவும் இத்தால் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

**- முகம்மது றிழ்வான்**

## பிரசித்த ஏல விற்பனை

12ம், 15ம் மார்ச் 2021, 12ம், 13ம் ஜீலை 2021, 12ம், 13ம் ஆகஸ்ட் 2021, 13ம், 14ம் செப்ரம்பர் 2021, 11ம், 12ம் ஒக்ரோபர் 2021, 11ம், 12ம் நவம்பர் 2021, 10ம், 13ம் டிசம்பர் 2021, 10ம், 11ம் ஜனவரி 2022, 10ம், 11ம் பெப்ரவரி 2022, 10ம் 11ம் மார்ச 2022, 04ம், 05ம் ஏப்ரல் 2022 இல் மௌபிமா, தினகரன் மற்றும் சிலோன் ருடே ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பானது. எல்.பி.பினான்ஸ் பி எல் சி இன் தங்கநகை பாதுகாப்புக்களில் வைக்கப்பட்டு பெறப்பட்ட கடன்தொகை உடன்படிக்கையினுள் நிச்சயிக்கப்பட்ட கொடுப்பனவுகள் செலுத்த முடியாத காரணங்களினால் ஏப்ரல், ஆகஸ்ட், செப்ரம்பர், ஒக்ரோபர், நவம்பர், டிசம்பர் 2021, ஜனவரி 2022, பிப்ரவரி 2022, மார்ச 2022, ஏப்ரல் 2022, மே 2022 மாதங்களில் ஏல விற்பனைக்கு விட தீர்மானிக்கப்பட்டுள்ள தங்க நகைகள் மற்றும் ஜீன் மாதம் 2022 ஏல விற்பனைக்கு தீர்மானிக்கப்பட்டுள்ள தங்க நகைகளும் கீழே தரப்பட்டுள்ள திகதிகளின் கீழ் அந்த கிளைகளில் பிரசித்த ஏல விற்பனையில் காலை 10 மணிக்கு விற்பனை செய்யப்படும் என்பதனை கடன்பெற்றோருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

| கிளைகள் | திகதி |
|---|---|
| பொலன்னறுவை, வத்தளை, கந்தானை, ராகம, ஜா-எல, எலகன்த, கொத்தாடுவ புதிய நகரம், கொலன்னாவ, தொட்டலங்க, தெமடகொட, கொம்பணித்தெரு, மஹியங்கனை, மொனராகலை, வெலிமடை, மெதிரிகிரிய, எம்பிலிப்பிட்டி, திஸ்ஸமஹாராம, தெஹியத்தகண்டி, நுவரெலியா, கட்டுநாயக்க-அவிரிவத்த, சிலாபம், கொச்சிக்கடை- நீர்கொழும்பு, நீர்கொழும்பு, நீர்கொழும்பு நகர கிளை, வென்னப்புவ, மாரவில, மீனுவங்கொட, நாரம்மல, குளியாபிட்டி, குருநாகல், குருநாகல் பிறீமியர் நிலையம், குருநாகல் நகர கிளை. அளுத்கம, களுத்துறை, பேருவளை, டெல்கந்த, கிருலப்பனை, நுகேகொடை, கோட்டே, பத்தரமுல்லை, ராஜகிரிய, நாரஹேன்பிட்டி | 24 ஜீன் 2022 |
| ஹோமாகம, மஹரகம நகர கிளை, மஹரகம, கொட்டாவ, அத்துருகிரிய, தெஹிவளை, மொறட்டுமுல்லை, மொறட்டுவை, கெசெல்வத்தை - பாணந்துறை, வாட்டுவ, தெஹிவளை நகர கிளை, பொரலஸ்கமுவ, பிலியந்தலை, தர்கா நகர், பாணந்துறை, ரத்மலான கல்கிச, அத்திடிய, வெள்ளவத்தை, வெள்ளவத்தை நகர கிளை, பிறீமியர் கொழும்பு 07, கொள்ளுப்பிட்டி நகர கிளை, தலைமை அலுவலகம் கொழும்பு 07, கொள்ளுப்பிட்டி கார்ப்பரேட் அலுவலகம் கொழும்பு 03. கிரிபத்கொடை, தெல்கொடை, கடவத்தை, களனி, கடுவெல, கிரிபத்கொடை-மாகொல, கனேமுல்லை, கேகாலை, திஹாரிய, வரக்காபொல, நிட்டம்புவஇ கம்பஹா, திவுலபிடிய | 25 ஜீன் 2022 |
| மாத்தறை, மாத்தறை நகர கிளை, தெனியாய, நெலுவ, அக்குரஸ்ஸ, எல்பிட்டிய, பிட்டிகல, ஹொரணை, பண்டாரகம, பிலிமத்தலாவை, கண்டி, கண்டி நகரம் கிளை, கடுகஸ்தோட்டை, நாவலப்பிட்டி, மாத்தளை, கெலிஓயா, மாவனல்ல, மாலபே, புத்தளம், மத்துகம, பதுரெலிய, ஆனமடுவ, ஜம்பெட்டா வீதி கிளை, டாம் வீதி கிளை, டீன்ஸ் வீதி கிளை, மருதானை, பொரளை, பலாங்கொடை, அவிசாவளை, எஹெலியகொட, இரத்தினபுரி, ஹங்வெல்ல, புசல்லாவை, கம்பளை, கம்பளை நகர கிளை. கொட்டாஞ்சேனை, அளுத்மாவத்தை கொழும்பு 15, மட்டக்குளி, மோதறை, கிராண்ட்பாஸ் சுலைமான் கொழும்பு 14, கிராண்ட்பாஸ். | 28 ஜீன் 2022 |
| கராபிட்டிய, காலி தங்காலை, அம்பலாங்கொட, பதுளை, பதுளை நகர கிளை, பண்டாரவளை, சங்கராஜ மாவத்தை கொழும்பு 10, மாளிகாவத்த, செட்டியார் தெரு, கொஹுவல, ஹட்டன், மஸ்கெலியா, தம்புள்ளை, கெக்கிராவ, அனுராதபுரம் நகர கிளை, அனுராதபுரம், மதவாச்சி, தம்புத்தேகம, செங்கலடி, வாழைச்சேனை, மன்னார், சாவகச்சேரி, கிண்ணியா, திருகோணமலை, வவுனியா, கொக்கட்டிக்சோலை, ஆராயம்பதி, மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி, அட்டாளைச்சேனை, யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் பிறீமியர், யாழ்ப்பாண நகரம், அம்பாறை, பொத்துவில், அக்கரைப்பற்று, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, திருநெல்வேலி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, நெல்லியடி, சாய்ந்தமருது, சம்மாந்துறை, கல்முனை, மல்லாவி, வட்டுக்கோட்டை, சங்கானை,எறாவுர், வகாரை. | 29 ஜீன் 2022 |

எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளி போடவோ எல்.பீ. ∴பினான்ஸ் பி.எல்.சி. நிறுவனத்திற்கு உரிமம்

**LB FINANCE**

தலைமை முகாமையாளர் - தங்கக் கடன் பிரிவு
275Æ75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

# பெறுகை அறிவித்தல்

## சுகாதார அமைச்சு
## குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலை

### வாகன தரிப்பிடத்தை நடாத்திக்கொண்டு செல்லல் – 2022 – 2023

குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் பெறுகைக் குழுத் தலைவரினால் 2022/23ஆம் வருடத்தில் குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் வாகனத் தரிப்பிடத்தை நடாத்திக் கொண்டு செல்வதற்காக அதில் அனுபவம் வாய்ந்தவர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வதற்காக பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் விலைக்கோரல் ஆவணக் கட்டணமாக மீளளிக்கப்படாத தொகையை குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் கணக்காளர்/ சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன், தமது தேசிய அடையாள அட்டையையும் சமர்ப்பித்து 2022-06-06ஆம் திகதி முதல் 2022-06-27ஆம் திகதி வரையில் மு,ப. 10.00 முதல் பி.ப. 4.00 மணி வரையில் கணக்கிடல் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| | விலைக்கோரல் ஆவணக் கட்டணம் (ரூபா) |
|---|---|
| வைத்தியசாலை வாகன தரிப்பிடத்திற்கு | 1000.00 |

2. விலைக்கோரல் விண்ணப்பங்களை மூலப் பிரதி மற்றும் இரண்டாம் பிரதியாக தயாரித்து, இரண்டு உறைகளில் உள்ளிட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக்குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் ''2022/23 வருடத்தில் வைத்தியசாலை வாகனத் தரிப்பிடத்தை நடாத்திச் செல்லல் - போதனா வைத்தியசாலை குளியாப்பிட்டிய'' எனக் குறிப்பிட்டு 2022-06-28ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பெறுகைக் குழு, போதனா வைத்தியசாலை, குளியாப்பிட்டிய எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கணக்காளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
3. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து அவ்விடத்திலேயே விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர் அல்லது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.
4. அரச ஒப்பந்த நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியாளர் பட்டியலிடப்பட்ட நபர்களுக்கு விலைமனுக்கள் வழங்கப்பட மாட்டாது.
5. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (037-2281261 - நீடிப்பு 295)

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**குளியாப்பிட்டிய.**

# கேள்விக்கான அழைப்பு

## சுகாதார அமைச்சு
## மாகாண பொது வைத்தியசாலை - பதுளை

பதுளை மாகாண பொது வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக்குழுவின் தலைவரால் கீழ்க்காணும் வழங்கல்களைப் பெற்றுக்கொள்வதற்காக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

